கிராம நலம்

செப்டம்பர் '62 13 ந. பை

"பொய்யாமை அன்ன புகழில்லை"

"நாம் வாழ்வதன் இலட்சியப் பயனுனது, உண்மைக்குக் கட்டுப்பட்டு இருக்கவேண்டும். நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் சத்தியத்தில் காலூன்றி இருக்கவேண்டும். உண்மைக்கு மாறுன செயல்கள் பாவமாகும். உடலுக்கு சுவாசம் உயிர் தருவது போல், வாழ்க்கைக்கு உண்மை அமைந்து உயிர்தர வேண்டும். ஜீவ யாத்திரையில் உண்மையைத் தவருது பற்றுவது என்று ஏற்பட்டுவிட்டால், பிறகு எல்லா தர்மங்களும், நியதிகளும், ஒரு சிரமமுமில்லாமல் அமைந்துவிடும். ஆசாரமும், சீலமும் தாமாகத் தோன்றிக் காக்கப்படும். ஒரு பிரயத்தனமுமின்றி எல்லாம் நடைபெறும். வாய்மையைக் காக்காவிடில், வேறு எந்த அறமும் காக்கப்படாமல் தவறிப்போகும்......"

மகாத்மாவின் மணிமொழி

கிராம நலம்

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி. 7 | செப்டம்பர் 1962 | படி. 12

மாநில குடும்பக் கட்டுப்பாடு மகாநாடு

மாநில குடும்பக் கட்டுப்பாடு மகாநாடு, சென்னையில் ஆகஸ்டு 21,22,23 தேதிகளில் நடைபெற்றது. மகாநாட்டிற்கு, மாநில சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் தலைமை வகித்தார். மத்திய அரசாங்க சுகாதார அமைச்சர் டாக்டர் சுசிலா நய்யார் அவர்கள் மகாநாட்டினைத் துவக்கி வைத்தார். (மகாநாட்டில் நிகழ்த்தப்பட்ட துவக்க உரையினையும், தலைமை உரையினையும் இதே இதழில் வேறோரிடத்தில் காணலாம்.)

இந்த மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ' குடும்பக் கட்டுப்பாடு திட்ட முன்னேற்ற அறிக்கை 'யை, புதிய பஞ்சாயத்து ஆட்சியில் சிரத்தை கொண்ட எல்லோரும், கவனத்தோடு படித்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.

குடும்பக் கட்டுப்பாடு திட்ட வேலைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் விபரங்களை, இந்த அறிக்கையில், மாவட்ட வாரியாக, தெளிவாகப் பார்க்கலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும், இத் துறையில், இதுவரை நடந்துள்ள வேலை எவ்வளவு என்பதை அறிந்து, பிற மாவட்டங்களோடு ஒத்திட்டுப்பார்த்து, மேற்கொண்டு என்னென்ன செய்யவேண்டியுள்ளது என்பதை, திர்க்கமாகச் சிந்தித்து ஆவன செய்ய இந்த அறிக்கை மிகவும் பயன்படும்.

இந்த மகாநாடு, சுகாதார இலாகாவின் சரித்திரத்திலேயே ஒரு முக்கிய நிகழ்ச்சி என்று கூறலாம். குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை, புதிய பஞ்சாயத்து ஆட்சி ஏற்றுக் கொண்டு, அதைப்பற்றிய அனுபவங்களைப் பலரும் கலந்து பேசும் கருத்தரங்காக, இந்த மகாநாடு அமைந்தது.

பஞ்சாயத்து யூனியனிலும், மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிலும் பொறுப்பு வகிக்கும் அநேக பஞ்சாயத்துத் தலைவர்களோடு, சுகாதார, மருத்துவ இலாகா அதிகாரிகள் மனம் விட்டுப்பேசி, பல்வேறு சிக்கல்களை அலசி ஆராய, நல்ல சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. நமது தலைமைக் காரியதரிசி அவர்கள், இதற்கான எல்லா வசதிகளையும் ஏற்பாடு செய்ததோடு நின்று விடாமல். விவாதங்கள் பயனுள்ள முறையில் நடைபெறவும் வழிவகுத்துத் தந்தார். 1962 டிசம்பரில் ' குடும்பக் கட்டுப்பாடு வாரம் ' கொண்டாடப்படும். அதற்குள், தமிழ்நாட்டில், ஒவ்வொரு பஞ்சாயத்திலும், குறைந்த பட்சம் ஒருவராவது அறுவை சிகிச்சை செய்து கொண்டவர் இருக்கிறார் என்ற ஒரு நிலையினை உண்டாக்கித்தர வேண்டியது பஞ்சாயத்துக்களின் முக்கியமான பொறுப்பாகும். புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் பீடிகையில் சொல்லப்பட்டுள்ள கருத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு, பஞ்சாயத்துக்கள் பொறுப்புணர்ச்சியுடன், இத்துறையில் பாடுபட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

வெளியிடுபவர் :
திரு ஆர். ஏ. கோபாலசாமி, ஐ. ஸி. எஸ்.

ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

"எதிர்கால சந்ததி நல்வாழ்வு வாழ, வழி வகுப்போம்..."

[சென்னையில் 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ந் தேதி மாநில குடும்பக் கட்டுப்பாடு மகாநாட்டை ஆரம்பித்து வைத்து இந்திய அரசாங்க சுகாதார அமைச்சர் டாக்டர் சுசிலா நய்யார் அவர்கள் ஆற்றிய உரையினைக் கீழே வெளியிட்டுள்ளோம். இத் துறையில், தமிழ்நாடு அரசாங்கம் கண்டுள்ள முன்னேற்றத்தை, அவர் தமது துவக்க உரையில் மனமாரப் பாராட்டினர். அதையடுத்துப் பேசிய நமது தலைமைக் காரியதரிசி, சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நினைவூட்டினர். அதாவது, திட்டக் கமிஷனின் உப கமிட்டி ஒன்றின் அமைப்பாளர் என்ற முறையில் ஜனத்தொகை அதிகரிப்பைக் குறித்து ஆராயும் பொறுப்பு அவருக்கு ஏற்பட்டது. "அந்தக் கமிட்டியில் டாக்டர் சுசிலா நய்யாரும் அங்கத்தினராய் இருந்தார். முதன் முதலாக, சந்தான பூர்த்தி அறுவை சிகிச்சையைப்பற்றிய செய்தியை அவர் தான் அப்போது அறிவித்தார். இந்த நிகழ்ச்சிக்குப் பின், சுமார் பத்து ஆண்டுகள் கழித்து, அவரே பாரத நாட்டின் சுகாதார அமைச்சராய் வந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க வாய்ப் பாகும். எனவே, அவருடைய ஆட்சிக் காலத்தில், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் தக்க ஆதரவு தரும் என்று நம்புகிறோம்" என்று திரு ஆர். ஏ. கோபாலசாமி ஐ. ஸி. எஸ். குறிப்பிட்டார்.

ஆசிரியர்.]

இன்று உங்களைச் சந்திப்பதில் நான் மிக்க ஆனந்த மடைகிறேன். குடும்பக் கட்டுப்பாடு பணியில் தமிழ்நாடு அரசாங்கமும், அலுவலர்களும், மக்களும் கொண்டுள்ள ஆர்வமும் முயற்சிகளும், நாடு முழுவதிலும் உள்ள ஊழியர்களிடையே நல்ல ஊக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. மத்திய அரசாங்க அளவில் குடும்பக் கட்டுப்பாடு போர்டு ஏற்படுத்துவதற்கு முன்பே, நீங்கள் தமிழ்நாடு குடும்பக் கட்டுப்பாடு போர்டை அமைத்து விட்டீர்கள். குடும்பக் கட்டுப்பாடுக்கு அறுவை சிகிச்சை முறையை மேற்கொள்வதில் மற்றவர்கள் நிதானமும் தயக்கமும் காட்டியபொழுது, நீங்கள் அறுவை சிகிச்சைத் திட்டத்தைத் துணிவோடு மேற்கொண்டீர்கள். சந்தானபூர்த்தி அறுவை சிகிச்சை முறை மூலம் நாம் விரும்பும் பயன்களை அடையலாம் என்பதை இந்த நகரில் நீங்கள் செயலில் காட்டியிருக்கிறீர்கள்.

தமிழ்நாடு வழி காட்டுகிறது

உங்கள் பஞ்சாயத்து சட்டத்தில் நீங்கள் வெகு பொருத்தமாக இரண்டு முக்கிய விஷயங்களுக்கு முதலிடம் கொடுத்திருக்கிறீர்கள். அதாவது, உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கும், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் விஷயத்துக்கும் முதலிடம் அளித்திருக்கிறீர்கள். நீங்கள் காட்டியுள்ள இந்த வழியை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உங்களுடைய அரும் முயற்சிகளுக்காக இந்தச் சமயத்தில் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உங்களைச் சந்திப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக, தமிழ்நாடு அரசாங்கத்துக்கு, முக்கியமாக சுகாதார அமைச்சருக்கு, என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

2. மத்திய குடும்பக் கட்டுப்பாடு போர்டு 1961–ம் ஆண்டு டிசம்பர் மாதம் கூடியபோது, குடும்பக் கட்டுப்பாடு பற்றிய தேசிய மகாநாட்டை 1962–ல் நடத்தலாம் என்று யோசனை கூறப்பட்டது. அந்த யோசனையைப் பரிசீலனை செய்ததில், தேசிய மகாநாடு கூட்டப்படுவதற்கு முன்னதாக, மாநில மகாநாடுகள் நடத்துவது அதிகப் பயனுடையதாக இருக்கும் என்று கருதினோம். இந்த மாநில மகாநாட்டின் நோக்கங்களைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்:–

(1) மாநில குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தின் தற்போதைய நிலையை மதிப்பிடுதல்.

(2) இந்த வேலைத் திட்டத்தின் முன்னேற்றத்துக்கு இடையூறாக உள்ள பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணல்.

(3) மிகப் பயனுள்ளவை எனத் தெரிந்த நடைமுறைகளை விஸ்தரித்தல்.

(4) தேசியக் குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தில் புதிய முன்னேற்றங்களை உணர்தல்.

(5) அதிகார நிறுவனங்கள், அதிகாரச் சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவைகளில் உள்ள மாநிலத் தலைவர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தின் பிரச்சினைகள், வருங்காலத் திட்டங்கள் ஆகியவைகளை உணர்த்துதல்.

(6) குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தில் இதர ஸ்தாபனங்கள் இன்னும் அதிக அளவில் பங்கு கொள்ளும்படியாகப் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்தல்.

(7) குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தில் ஆர்வம் கொண்டுள்ள மற்றவர்களையும் கூட்டுவித்து, தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், தற்போதைய பணி நிலையை அறிந்து கொள்ளவும், வருங்கால வேலைத் திட்டத்துக்கான சிபாரிசுகளைச் செய்யவும் வகை செய்தல்.

மகாநாட்டில் உங்கள் தீர்மானங்களை நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

பிறப்பு விகிதத்தைக் குறைப்பது எப்படி ?

3. குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி நான் விளக்க வேண்டிய அவசியமில்லை, "முன் யோசனையற்ற பிள்ளைப் பேற்றைத் தவிர்ப்பது" என்ற தத்துவத்தின் கர்த்தாவான ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி

ங்களிடையே இருக்கிறார். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை, திட்டமிட்ட அபிவிருத்தியின் அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்று அவர் அடிக்கடி உங்களிடையே வற்புறுத்தி வருகிறார். குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டம் கணிசமான அளவு முன்னேற்றமடைந்திருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஆதரவாகப் பரந்த அளவில் நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மிகக் குறுகிய காலத்தில் பிறப்பு விகிதத்தைக் குறைப்பது எப்படிஎன்பதே இப்போது நம் முன் உள்ள பிரச்சினையாகும். வேலைத் திட்டத்தை மதிப்பிடுவது, அநுபவத்தின் அடிப்படையில் வேலைத் திட்டத்தைத் திருத்தியமைப்பது ஆகியவைகளுக்கான காலகட்டம், அதாவது சரியான தருணம் வந்து விட்டது.

4. உங்களுடைய சந்தானபூர்த்தி அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை நான் அறிவேன். வட்டாரம் ஒன்றுக்கு 250 பேருக்கு அறுவைச்சிகிச்சை செய்வதென்ற உங்கள் இலட்சிய அளவு 400 பேராக உயரலாம் என்பதையும், பஞ்சாயத்துகள் பிள்ளைப்பேறு குழந்தை நல நிலையங்களைக் கட்டுவதில், அப்பகுதிகளில் எத்தனை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைக் கணக்கில் கொண்டு பண உதவி தரப்படும் என்பதையும் அறிவேன். சந்தானபூர்த்தி அறுவைச் சிகிச்சை பற்றி என் கருத்தை உங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். அறுவை சிகிச்சைக்கு உரியவர்களைக் கவனத்தோடு தேர்ந்தெடுப்பதும், அறுவைச் சிகிச்சைக்கு அவர்களை மனோநிலையில் பக்குவப் படுத்துவதும், அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட நபர்களை, பின்பு கவனித்து வருவதும் அவசியம் என்று கருதுகிறேன். தாமாக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முன் வருகிறவர்களுக்கு, இலவச உதவிகள் அளிக்கலாம். அவர்களுக்கு விசேஷ விடுமுறை கொடுக்கலாம். டாக்டரிடம் வருவதற்கு அவர்களுக்கு வண்டிக்கு வகை செய்து கொடுக்கலாம்; அல்லது டாக்டர்கள் அவர்களிடம் செல்லும்படி ஏற்பாடு செய்யலாம். அளவான குடும்பமாக அமைவது பற்றி மக்களைச் சிந்திக்கச் செய்யவும், கருத்தடைச் சாதன முறைகள் மூலம் அளவான குடும்பமாக அமையவும், குறிப்பிட்ட அளவு குழந்தைகளை அடைந்தான பின்பு, அறுவைச் சிகிச்சைக்கு அவர்கள் தாமாக முன் வரும்படிச் செய்யவும், சுகாதாரப் பிரசாரகர்கள் பணியாற்ற வேண்டும். வசதிகள் செய்வது, பிள்ளைப் பேறு குழந்தை நல கட்டிடங்கள் அமைத்துத் தருவது போன்ற உதவிகள் வரவேற்கத் தக்கவை. ஏனென்றால் கிராமப் பகுதிகளில் இத்தகைய கட்டிடங்கள் பெரிதும் தேவைப்படுகின்றன. ஆனால் இத்தகைய உதவிகள் சந்தானபூர்த்தி அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை அடிப்படையில் இருந்தாக வேண்டும் என்ற அவசியம் இல்லை. பிறப்பைக் கட்டுப்படுத்த இருக்கின்ற எல்லாவித மான சாதனங்களும் கிடைக்குமாறு செய்யப்பட வேண்டும். சுய கட்டுப்பாடு, கருத்தடைச் சாதனங்கள், அறுவைச் சிகிச்சைகள், மாத்திரைகள் ஆகிய அனைத்தும் தமக்குரிய முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு அளிக்கப்படும் உதவிகளுக்குச் சந்தான பூர்த்தி அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கையைத் தவிர, கருத்தடைச் சாதனங்களை ஒழுங்காக உபயோகித்து வருகிறவர்களின் எண்ணிக்கையையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். இறுதி ஆய்வில் விகிதக் குறைவும் கவனிக்கப்பட வேண்டும்.

5. பிரசார முறைகளின் மூலம் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் அவசியத்தை மக்கள் உணர்ந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும். அவர்கள் தங்களது உண்மையான தேவையையும் விருப்பத்தையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சொந்த முடிவுக்கு வர அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு பற்றிய கருத்துக்களை நாம் எங்கும் பரப்ப வேண்டும்; மக்களுக்கு எளிதில் வசதிகள் கிடைக்குமாறு செய்ய வேண்டும். தற்போது சந்தானபூர்த்தி அறுவைச் சிகிச்சையின் மூலம் நாம் விரும்புகின்ற பலன்கள் ஏற்படுகின்றன என்பதில் ஐயமில்லை. தகுதியான பெற்றோர்களின் விஷயத்தில் அறுவைச் சிகிச்சைத் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப் படலாம். அதே சமயத்தில், கூடவே கருத்தடைச் சாதனங்கள் போன்ற மற்ற வழிமுறைகளும் விரிவான அளவில் கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

திட்டமிட்ட பிரசாரம் தேவை......

6. ஒவ்வொரு கிராமத்துக்கும் குடும்பக் கட்டுப்பாடு வசதிகள் கிடைக்குமாறு செய்வது கடினம். பயிற்சி பெற்ற அலுவலாளர்கள் போதிய அளவில் இல்லாதது ஒரு சங்கடம். உங்களுக்குத் தேவைப்படும் அலுவலர்கள், கிடைக்கும் பயிற்சி வசதிகள், தேவைப்படும் பயிற்சி வசதிகள் ஆகியவைகளை நீங்கள் பரிசீலனை செய்யலாம். பயிற்சித் திட்டங்களை விஸ்தரிப்பதில் உங்களுக்கு நூறு சத வீத உதவியை அளிக்க இந்திய அரசாங்கம் மகிழ்ச்சியுடன் முன்வருகிறது. ஆனால் தேவைப்படும் அளவில் அலுவலர்கள் பயிற்சி பெறுகின்ற வரை நாம் காத்திருக்க இயலாது. தனிப்பட்ட மருத்துவர்களை நியமித்தல், நாட்டுப்புறத் தாயிகளுக்குப் பயிற்சியளித்து, அவர்களை அதிக அளவில் பயன்படுத்திக்கொள்ளுதல், மருத்துவ சுகாதாரத் திட்டங்களுடன் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மேலும் ஒருங்கிணைத்தல், நடமாடும் சிறு குழுக்களை ஏற்படுத்துதல், சேவா நிறுவனங்களின் வசதிகளை ஒன்று திரட்டல் ஆகிய மற்ற வழிவகைகளை நீங்கள் ஆலோசிக்கலாம். நகரங்களில் வசிக்கும் தனிப்பட்ட பகுதி நேர மருத்துவர்கள் அடுத்துள்ள கிராமப் பகுதிகளில் உள்ள நிலையங்களுக்கு அவ்வப் போது சென்று வருவது சாத்தியமானதாக இருக்கும். மற்ற நாடுகளில் இவ்வாறு செய்யப்படுகிறது. நாட்டுப்புறத் தாயிகளுக்கு குறுகிய காலப் பயிற்சி அளிப்பதன் மூலம், அவர்கள் வீடுகளுக்குச் சென்று மக்களுக்குக் கருத்தடைச் சாதனங்களை வழங்குமாறு செய்யலாம். நடமாடும் சிறு குழுக்கள், பிரசாரம் செய்யும் சிறு குழுக்கள், சந்தான பூர்த்தி அறுவைச் சிகிச்சை செய்யும் சிறு யூனிட்டுகள், குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் ஆகியவை மாவட்ட, வட்ட மருத்துவ மனைகளைத் தலைமையிடமாகக் கொண்டு கிராம பகுதிகளில் மிக விரிவான அளவில் பணியாற்ற இயலும். கிராமத்தில் 300 முதல் 500 குடும்பங்களுக்கும் பொறுப்பு வகிக்கும் ஒரு பெண்மணியைத் தேர்ந்தெடுப்பது பற்றி அண்மையில் டாக்டர் சௌந்திரம் ராமச்சந்திரன் ஆலோசனை கூறியுள்ளார். இந்த யோசனை கவனமான பரிசீலனைக்கு உரியது.

7. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்கு கிடைக்கின்ற எல்லா வசதிகளையும் மேலும் ஒருங்கு சேர்க்க வேண்டியது அவசியமாகும். சட்டசபை அங்கத்தினர்கள், நிர்வாக அதிகாரிகள், பஞ்சாயத்து அங்கத்

தினர்கள், உள்ளூர்த் தலைவர்கள், விஸ்தரிப்பு ஊழியர்கள், பள்ளி ஆசிரியர்கள், தனிப்பட்ட மருத்துவர்கள், மருத்துவத்தில் ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள், சமூக ஊழியர்கள், தொழில் நிர்வாகத்தினர், தொழிலாளர்கள் ஆகிய பல்வேறு வகைப்பட்டவர்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு பற்றி மறுபயிற்சி அளிப்பதும் அவசியமாகும். இவர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு பற்றி எவ்வாறு மறு பயிற்சி அளிப்பது என்பது குறித்து நீங்கள் பரிசீலிக்கலாம்.

8. கருத்தடைச் சாதனங்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அவற்றை நமது நாட்டில் உற்பத்தி செய்வது மிகவும் அவசர அவசியமாகிறது. தேவைப்படுகின்ற அளவில் கருத்தடைச் சாதனங்கள் கிடைக்கின்றன என்று வைத்துக்கொண்டால், எல்லாக் குடும்பங்களுக்கும் இவற்றைத் தாராளமாக வழங்கும் வழிவகைகளைக் காண வேண்டும். இவற்றை மருத்துவமனை அல்லது சுகாதார நிலையத்திலிருந்தே பெற வேண்டும் என்ற அவசியம் எப்பொழுதும் இருக்க வேண்டியதில்லை. உள்ளூர் விற்பனையாளர்களை இதற்காக நியமித்துக் கொள்ளலாம். கிராமக்கூட்டுறவுகளும் கருத்தடைச் சாதனங்களைச் சேமித்து வைத்து விநியோகிப்பதைத் தங்களது வழக்கமான வர்த்தக நடவடிக்கைகளில் ஒன்றாகக் கொள்வது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

ஒழுக்க நெறி பாதிக்கப்படாது

9. குடும்பக் கட்டுப்பாடு முறைகளால் ஒழுக்கக்கேடு வளர ஏதுவாகும் என்று எனக்குச் சில சமயங்களில் கடிதங்கள் வருகின்றன. ஆனால் மருத்துவ மனையிலோ, மருத்துவ நிலையத்திலோ, அல்லது சுகாதார நிலையத்திலோ ஒழுக்க நெறி உருவாகின்றது என்று நான் கருதவில்லை. ஒழுக்க நெறிகள் பள்ளிக்கூடங்களிலும், வீடுகளிலும் ஊட்டி வளர்க்கப்படுகின்றன. பொதுவாக, நாம் என்ன செய்தாலும், ஒழுக்க நெறிகள் நம் செயல்களில் கட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டும். இந்தியாவில் மேற்கொள்ளப்படும் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகளால் ஒழுக்க நெறி பாதிக்கப்படும் நிலைமை நேராது என்று நம்புகிறேன்.

10. தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்கட்பெருக்கம் பற்றிய தெளிவான நிலைகளை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போது தான் அந்தந்தப் பகுதிகளில் தேவைகளுக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும்.

11. நிர்வாக வசதிகளைப் பூரணமாக்கியும், பயிற்சி பெற்றவர்களைப் போதுமான அளவு அமர்த்தியும் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகளைத் தீவிரமாக்கிய பிறகும், அந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளாமல் பலர் இருக்கலாம். எனவே இத் திட்டம் பற்றிய பிரசாரத்தை வேகப்படுத்தும் படி வற்புறுத்துகிறேன். அளவான குடும்பத்தினை மக்கள் விரும்பலாம். ஆனால் அந்த விருப்பம் குடும்பக் கட்டுப்பாடு முறைகளைப் பின்பற்றுவதற்குப் போதுமான அளவு உறுதியை அளிக்காமல் இருக்கக் கூடும். இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க வாய்ப்பு அளித்தால், இதற்கான காரண காரியங்கள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் விளங்கும். எனவே மாநிலம் முழுதும் மறுபயிற்சி முகாம்களை நடத்தி, பொறுப்பு வாய்ந்த தலைவர்களை உருவாக்க வேண்டும். மாநிலத்திலுள்ள மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஆகியவற்றிலிருந்து இந்த மகா நாட்டிற்கு வந்திருக்கும் பிரதிநிதிகளைக் காண்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்களுக்கு நிறைய பொறுப்புக்கள் உள்ளன. பஞ்சாயத்துக்கள், மாதர் சங்கங்கள், குடும்பக் கட்டுப்பாடு கௌரவ பிரச்சாரத் தலைவர்கள் ஆகியோர் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் மாநிலம் முழுதும் பரவுவதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியும். கல்சத்தாவில் கூடிய மத்திய குடும்பக் கட்டுப்பாடு போர்டு அடுத்த குடும்பக் கட்டுப்பாடு தின விழாவின் முக்கியாம்சத்தைக் குறிப்பிட்டிருக்கிறது. "வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது மக்கள் கையில் இருக்கிறது" என்பதே அம்மகாநாடு குறிப்பிட்டுள்ள சுலோகமாகும். திட்ட அபிவிருத்தி மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பில் இருக்கிறது. குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தைப் பரப்புவதை முக்கிய கடமைகளுள் ஒன்றாகக் கொண்டு பஞ்சாயத்துக்கள் பணியாற்ற வேண்டும் என்றும் அது வலியுறுத்தியது.

அளவான குடும்பம் அமைப்பதற்கான உணர்வு

12. மக்கள் இத் திட்டத்தைச் சொந்தத் திட்டமாகக் கொள்வார்களேயானால், வெற்றி நிச்சயம் என்பதில் சந்தேகமே இல்லை. மக்கள் தொகை பெருகி வருகிறது என்பது போன்ற கோஷங்களைக் கண்டு நான் கவலைப்படவில்லை. மனிதனின் எதிர் காலத்தில், எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. சுதந்திர தினச் செய்தியில் நமது ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்: "மனிதனது எதிர் காலத்தில நமக்கு நம்பிக்கை இருக்கிறது. அவனது இயல்பு அடிக்கடி மாறி வந்துள்ளது. அது இனியும் மாறும். அவனது வாழ்வு முற்றுப் பெற்றதல்ல. இப்பொழுதுள்ள அவனது நிலை இறுதியானதல்ல. இப்பொழுதுள்ள மனிதன், அவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான ஒரு உருவகமே. அவன் எப்பொழுதும் மாறிக்கொண்டு அதாவது அடிக்கடி நல்ல முறையில் வளர்ந்து கொண்டு வந்துள்ளான். அவன் இப்பொழுது உள்ளுணர்வில் மிக முன்னேறிச் செல்ல வேண்டியுள்ளது. உணர்வும், நாகரிகமும், பெருந்தன்மையும் மிகுந்து வரும் மகோன்னத முன்னேற்றத்தில் தனிப்பட்டவர்களும், நாடுகளும், நாகரிகங்களும் பெரும்பங்கு வகிக்கின்றன". இது நமது ஜனாதிபதி அவர்களின் வாக்கு. இத்துடன், அளவான குடும்பம் அமைப்பதற்கான உணர்வையும் சேர்த்துக் கூறுகிறேன். அது அவனுக்கு மட்டுமல்லாமல் அவனது குழந்தைகளும் நல்வாழ்வு வாழ வழி வகுக்கும். இத்தகைய குறிப்பிடத்தக்க மலர்ச்சியில் உங்கள் மகாநாடு ஒரு முன்னேற்றப் படியாகும். எல்லா வகையிலும் நீங்கள் வெற்றிபெற வாழ்த்துகிறேன். இந்த மகாநாட்டைத் தொடங்கி வைப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்."

(ஆங்கிலத்தில், டாக்டர் சுசிலா நய்யார் ஆற்றிய சொற்பொழிவின் தமிழாக்கத்தை, மகாநாட்டில், பொது ஜனத் தொடர்பு அதிகாரி திரு எஸ் வேங்கடசாமி படித்தார்)

அட்டைப் படம்:

மாநில குடும்பக் கட்டுப்பாடு மாநாட்டில் அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சியை டாக்டர். சுசிலா நய்யார் பார்வையிடுகிறார்.

"பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தீவிர அக்கறை காட்டவேண்டும்..."

[சென்னையில் 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ம் தேதி மாநில குடும்பக் கட்டுப்பாடு மகாநாட்டிற்குத் தலைமை வகித்து தமிழ்நாடு சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் ஆற்றிய தலைமை உரை.]

அன்பார்ந்த டாக்டர் சுசிலா நய்யார் அவர்களே !

நண்பர்களே !

மாநில குடும்பக் கட்டுப்பாடு மகாநாட்டுக்கு, உங்களை, தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில் வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ் நாட்டில், மாநில அளவில் குடும்பக் கட்டுப்பாடு மகாநாடு நடத்தப்படுவது இதுவே முதலாவதாகும். மாநிலத்தின் 372 பஞ்சாயத்து யூனியன்கள், 21 மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்கள், நகராட்சிகள், சென்னை மாநகராட்சி ஆகியவைகளின் பிரதி நிதிகள் வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு சேவா ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் வந்திருக்கிறார்கள். இத்துடன் சமூக நலப் பணியில் பிரபலமடைந்தவர்கள், குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரப் பணி முக்கியஸ்தர்கள், குடும்பக் கடடுப்பாடு நிபுணர்கள், பிரபலஸ்தர்கள் ஆகியோ ரும் வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள். இது மிகச் சிறப்பான முறையில் பிரதிநிதித்துவம் வாயந்த கூட்டம் ஆகும். நாட்டில் மக்கள் தொகை வளர்ச்சியை ஒழுங்கு முறைப்படுத்துவது என்ற மிக முக்கியமான பணியில் மக்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு, இக் கூட்டம் நல்லதொரு எடுத்துக் காட்டாகும். இந்த மகாநாட்டை ஆரம்பித்துவைக்க டாக்டர் சுசிலா நய்யார் இங்கு விஜயம் செய்திருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கொள்கையில் ஏற்பட்ட மாற்றம்

2. குடும்பக் கட்டுப்பாட்டுப் பணி இந்த மாநிலத்தில் 1945-லேயே ஆரம்பமாயிற்று. அப்போது, மக்களின் ஆரோக்கியத்துக்கான நடவடிக்கைகளில் ஓர் அம்சமாக அது விளங்கியது. சுகாதார நிலையங்களில் குடும்பக் கட்டுப்பாடு ஆலோசனைகள் கூறவும், கருத்தடைச் சாதனங்களை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மருத்துவ அதிகாரிகளின் கருத்துப்படி, திருமணமான பெண்களுக்கு அந்த உதவிகள் அளிக்கப்பட்டன. இத்தகைய வசதிகள் இருப்பது பற்றிச் சுகாதாரப் பார்வையாளர்கள் அவசியப் படும்போது எடுத்துரைக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் இதுபற்றி வேறு எந்தவிதமான பிரச்சாரமும் கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. மருத்துவ, உடல்நல காரணங்களுக்காக மட்டுமே கருத்தடை உதவி அளிப்பது என்ற இக் கொள்கை சில ஆண்டுகளுக்கு நீடித்தது, ஆனால் முதல் ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தக் கொள்கையில் மாறுதல் செய்யப்பட்டது. மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதும், தேசிய பொருளாதாரத்துக்கு இணைந்த வகையில் பிரஜா உற்பத்தியை நிலைப்படுத்துவதும் அவசியம் என்று உணரப்பட்டதைத் தொடர்ந்து, இக்கொள்கையில் மாறுதல் செய்யப்பட்டது. பிறப்பு விகிதத்தைக் குறைப்பது, அரசாங்க குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கையின் நோக்கமாக கொள்ளப்பட்டது. ஆனால் இக்கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் அதிக முன்னேற்றம் ஏற்படாமல் இருந்தது. குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான பிரச்சாரத்தை மாநில முழுதிலும் முறையாக 1956-ல் தான் மேற்கொள்ள முடிந்தது. அரசாங்கம், சுகாதார அமைச்சர் தலைமையில் முதலாவது மாநில குடும்பக் கட்டுப் பாடு போர்டு அமைத்ததையடுத்தே அந்த முறையில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

3. குடும்பக் கட்டுப்பாடு குறித்து பொதுமக்களுக்கு பூராத் தகவல்களையும் சரியான முறையில் அளிப்பதே இந்த போர்டுக்கு ஒதுக்கப்பட்ட முதல் முக்கிய வேலையாகும் குடும்பக் கட்டுப்பாடு கைப்புத்தகம் வெளியிட்டது மூலம் போர்டு இப்பணியை மேற்கொண்டது. குடும்பக் கட்டுப் பாடு கைப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப்பட்டன. திருமணமானவர்களுக்குப் பயன்படும் முறையில், அளவான குடும்பத்தின் அவசியம் பற்றியும்; குடும்பக் கட்டுப்பாட்டுக்கு அனுசரிக்கவேண்டிய பல்வேறு முறைகளைப் பற்றியும் எளிய நடையில் புரியும் முறையில் அதில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இந்தக் குடும்பக் கட்டுப்பாடு கைப்புத்தகம், மிகப் பிரபலமடைந்த பிரசுரமாக விளங்குகிறது. இதுவரை ஆறு லட்சத்துக்கு மேற்பட்ட பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன. மேற்கொண்டு ஐந்து லட்சம் பிரதிகள் அச்சில் இருக்கின்றன. ஏழை மக்கள் கூட, வாங்கும்படியான அளவில், எளிய விலைக்கு இப்புத்தகங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்தப் பிரதிகள் வேண்டுமென்ற கோரிக்கை இருந்துகொண்டே இருக்கிறது. மாநிலத்தில் குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பிரச்சாரம் செய்வதற்கு, இந்த கைப் புத்தகமே, முக்கிய கருவியாக விளங்குகிறது. குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஒவ்வொரு வீட்டாரும் தெரிந்திருக்க வகை செய்யவேண்டும் என்பதற்காக, வரும் 12 மாதங்களில் பிரசவிக்கும் ஒவ்வொரு தாய்மாருக்கும் இலவசமாக இப்புத்தகங்களை வழங்குவதென்று இப்பொழுது முடிவு செய்திருக்கிறோம்.

சந்தானபூர்த்தி அறுவைச் சிகிச்சைதான் சரியானவழி

4. குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியமும் முக்கியத்துவமும் பொதுமக்களுக்கு உணர்த்தப்படும் அதே சமயத்தில்

இல்லை எந்த முறையைக் கையாளுவது என்பது, அவரவர் இஷ்டத்துக்கு விடப்படுகிறது. ஆயினும் ஒரு விஷயத்தில் நமது கருத்து உறுதியானது. மிகப் பெரும்பாலான மக்களின் வாழ்க்கை முறையைப் பார்க்கும்போது குடும்பக் கட்டுப்பாட்டுக்கு இயற்கை முறைகளும், கருத்தடை சாதன முறைகளும் ஓரளவுக்கே பலனளிக்கும் என்பதும், சந்தான பூர்த்தி அறுவைச் சிகிச்சை முறையே முடிவான பரிகாரமாக இருக்கும் என்பதும் அந்தக் கருத்து ஆகும். எனவே தான் குடும்பக் கட்டுப்பாட்டில் அறுவை சிகிச்சை முறைக்கு ஊக்கமளித்து வருகிறோம். மூன்று குழந்தைகளை உடைய வர்களும், மேற்கொண்டு குழந்தைகள் விரும்பாதவர் களுமான பெற்றோர்கள் ஒவ்வொருவருக்கும், சந்தான பூர்த்தி அறுவை சிகிச்சை வசதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதே நமது நோக்கமாகும். ஆனாலும் இதில் ஒரு விஷயத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்பு கிறேன். சந்தானபூர்த்தி சிகிச்சை விஷயத்தில் எந்தவித மான கட்டாயமும் கிடையாது. தாமாக முன்வருபவர் களுக்கே அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. அறுவை சிகிச்சை செய்துகொள்ள முன் வருபவர்களுக்கு உண்மையில் நிபந்தனை போடப்படுகிறது. பெற் றோரில் யார் அறுவை சிகிச்சை செய்து கொள்வதானாலும் சரி, கணவன் மனைவி இருவரும் தாங்களாக, இதற்கான சம்மதக் கடிதத்தில் கையெழுத்திட்டுக் கொடுக்கவேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்.

குடும்பக் கட்டுப்பாடு விஷயத்தில், பிரச்சாரத்துக்கு ஊக்கமளிக்கத்தக்க வகையில் பயன் ஏற்பட்டு வருகின்றது. 1956-ல் சந்தானபூர்த்தி அறுவை சிகிச்சை செய்துகொண்ட வர்கள் தொகை 695 ஆகும். 1961-ல் இவர்கள் தொகை 25,335-ஆக அதிகரித்துள்ளது. சில மாவட்டங்களில், வருகிறவர்களுக்கெல்லாம் உடனுக்குடன் இந்த அறுவை சிகிச்சை செய்யமுடியாத அளவுக்கு, அதிகமான பேர் சந்தானபூர்த்தி சிகிச்சைக்கு முன்வருகிறார்கள். பல்வேறு அரசாங்க மருத்துவ மனைகளில் சந்தானபூர்த்தி அறுவை சிகிச்சைக்கான வசதிகளைப் படிப்படியாக அதிகரித்துக் கொண்டும் அபிவிருத்தி செய்துகொண்டும் வருகிறோம். தேவையை நிறைவேற்றத்தக்க விதத்தில், நிர்வாக அலுவல்கள் தீவிரப்படுத்தப்படும் என்று உறுதி கூற விரும்புகிறேன். மாநிலத்திலுள்ள அரசாங்க மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும், குடும்பக் கட்டுப்பாடு குறித்து ஆலோசனையும், அறுவை சிகிச்சை வசதிகளும் கிடைக்கவேண்டும். மருத்துவ மனை களில் கிடைக்கும் சாதாரண வசதிகளில் ஓர் அம்சமாக இந்த வசதிகள் கிடைக்கச் செய்யவேண்டும் என்பதே நமது நோக்கமாகும்.

அபிவிருத்திப் பணிகளும்—குடும்பக் கட்டுப்பாடும்

5. தேசிய ரீதியில் அபிவிருத்தித் திட்ட வேலை என்ற கண்ணோட்டத்தில், குடும்பக் கட்டுப்பாடு பணியின் முக்கியத் துவத்தைக் குறிப்பிடுவதும் அவசியமாகும். பொது பொருளாதார முன்னேற்றம், கல்வி அபிவிருத்தி ஆகியவைகளுக்கும், குடும்பக்கட்டுப்பாடு திட்டத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 1961-ம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, பூர்வாங்க புள்ளிவிவரங்களின்படி பார்த்தால், நமது நாட்டில் மக்கள் தொகை 1951-ல் 35·9 கோடியாக இருந்ததானது, 1961-ல் 43·8 கோடியாக அதி கரித்துள்ளது. மக்கள் தொகைப் பெருக்கம் எவ்வளவு பெரிய பிரச்னை என்பது இதிலிருந்து தெரிகிறது. மக்கள் தொகை இப்படி திகைக்கத்தக்க அளவில் அதிகரித்து வருவது, தேசியப் பொருளாதாரத்துக்கு ஒரு பெரும் சுமையாகுமென்பதை எல்லாத் தரப்பினருமே இப்போது ஒப்புக்கொள்கிறார்கள். மக்களுக்கு கல்வி, மருத்துவம், இதர சமூக நல வசதிகளைச் செய்து கொடுப்பதில் அரசாங் கத்தின் வசதிகளுக்கு இது பளுவாக இருப்பதும் உணரப் பட்டது. இந்தக் காரணங்கள் எல்லாம் மிக முக்கிய மானவை என்றாலும் கூட, இதை விட ஒரு முக்கியமான அம்சமும் கவனிக்கத்தக்கது. அதாவது தேசத்தின் ஆரோக்கியமே அந்த அம்சமாகும். விரும்பாதிருக்கும் சமயத்தில் பிள்ளைப்பேறு நிலைமைகள் காரணமாக லட்சக் கணக்கான தாய்மார்கள் உயிருக்கே அபாயத்தைத் தேடிக் கொள்கின்றனர். நாட்டில் சிசு மரண விகிதம், தொடர்ந்து மிக அதிகமாகவே இருந்து வருகிறது. இந்தத் துன்பங் களைக் குறைப்பதும், தாய்மார்களின் ஆரோக்கியத்துக்கும் மனமகிழ்ச்சிக்கும் உதவுவதுமே குடும்பக் கட்டுப்பாடு திட்டத் தின் மிகச் சிறப்பான பயன் ஆகும். வேண்டாதபோது குழந்தை உண்டாகாமல் இருக்கச் செய்வது நமது அடிப் படைக் கடமை ஆகும். மகப்பேறுக்கு, தாய் தயாராக இருக்கும்போது மட்டுமே, குழந்தை நலம் கிடைக்கக் கூடிய வகையில் கட்டுப்பாடுகளை அனுசரிக்க தம்பதிகளுக்கு வசதி இருக்கவேண்டும். இப்படிக் கட்டுப் படுத்திக் கொண்டுவிட்டால், குழந்தைப் பிறப்பு என்பது, வரவேற்று மகிழத்தக்கதாகவும், தாய்மார்களின் உடல் நலத்துக்கு உதவக்கூடியதாகவும் ஆகிவிடும். அதன் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி நிலவி, சமூகமும் சிறப்பாக அமை யும்.

6. குடும்பக் கட்டுப்பாடு திட்டவேலை, உள்ளூர் அபி விருத்தி, சுகாதாரப் பணி ஆகியவைகளுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. எனவேதான், மாநிலத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டவேலைகளில் பஞ்சாயத்துக்களும் சுகாதார பிள்ளைப்பேறு அலுவலர்களும் ஈடுபடுமாறு செய்திருக் கிறோம். 1958–ஆம் ஆண்டின் தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தில் இவ்விஷயம் குறிக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களை, தங்கள் நிதி வசதி வரம்புகளுக்கு உட்பட்டு குழந்தை நல நிலையங்களை ஏற்படுத்துவதும் பரா மரித்து வருவதும் அவசியம். அவற்றில் தாய்மார்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு விஷயமாக உதவியும் ஆலோசனைகளும் அளிக்க வகை செய்யப்படவேண்டும் என்று அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

மாநில பஞ்சாயத்து மகாநாடு எடுத்த முடிவு

மாநிலத்திலுள்ள பன்னிரண்டு ஆயிரத்துக்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்களின் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாடு 1961-ல் நடைபெற்றது. அளவான குடும்ப அமைப்பு முறைகளில் கிரமமாகப் போதனை அளிக்க பஞ்சாயத்து யூனியன்கள் வகை செய்யவேண்டும் என்று அந்த மகா

நாட்டில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அளவான சிறு குடும்பமாக இருப்பதற்கு வேண்டுமான முறைகளை அனுசரித்து, அதன் மூலம் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு உதவவேண்டும் என்று ஒவ்வொரு குடும்பத்தையும் தூண்டவேண்டும் என்று தீர்மானத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது. குடும்பக் கட்டுப்பாடு விஷயத்தில், சந்தான பூர்த்தி அறுவை சிகிச்சை மிகப் பயனுள்ளதும் தீங்கற்றதுமான முறை என்பதைப் பெற்றோர்களுக்கு எடுத்துரைத்து உணர்த்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மகப்பேற்றினை அடையும் ஒவ்வொரு தாயிக்கும், குழந்தை பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு, அல்லது குழந்தை பிறந்த பின்பு மூன்று மாதங்களுக்குள் குடும்பக் கட்டுப்பாடு பற்றி தகவல் அறிவிக்க பஞ்சாயத்து யூனியன்கள் வகை செய்யவேண்டும் என்றும் அந்த மகாநாடு சிபார்சு செய்தது. இது ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். பஞ்சாயத்துக்கள், இந்தத் தீர்மானப்படிக்கு நடந்து கொள்ளுமானால் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் வெற்றி பெறுவது உறுதி.

7. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் தீவிர அக்கறை காட்டுவது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். அரசாங்கத்தின் கொள்கை, வேலைத் திட்டங்களுக்கு இத்தலைவர்களின் நெருங்கிய ஒத்துழைப்பைப் பெறும் வகையில் மாநில குடும்பக் கட்டுப்பாடு போர்டை விரிவாக்கியிருக்கிறோம். அத்துடன் மாவட்டங்கள் தோறும் மாவட்ட குடும்பக் கட்டுப்பாடு கமிட்டிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்டத்திலுள்ள சமூக நல நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும், மாவட்ட கலெக்டரைத் தலைவராகவும் கொண்டு இந்த மாவட்ட குடும்பக் கட்டுப்பாடு கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. மருவத்துவ நிலையங்கள், அறுவை சிகிச்சை நிலையங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவைகளுக்கிடையே தொடர்பு ஏற்படுத்தவும், மாவட்டங்களில் குடும்பக் கட்டுப்பாடு பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கவும், முழுநேர மாவட்ட குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு லட்சியத்தைப் பரப்புவதில் உள்ளூர்த் தலைவர்கள் அரும்பணியாற்றியிருக்கிறார்கள் என்பதையும் இந்தச் சமயத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த உள்ளூர்த் தலைவர்கள் பலர், தாங்களே சந்தான பூர்த்தி அறுவை சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த அறுவை சிகிச்சையினால் நல்ல பலன் உண்டு. இதனால் தீங்கில்லை என்று பொது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படிச் செய்வதில இப்படி அவர்கள் உதவுகிறார்கள். உண்மையில் இவர்கள் மிகவும் புகழ்ந்து பாராட்டத்தக்கவர்களாவர்.

இன்னும் செய்யவேண்டியது ஏராளமாக உள்ளது

8. நாம் அடைந்துள்ள சாதனைகள் கணிசமானவை. ஆனால் இது போதாது. இதுவரையில் நாம், பிரச்சனையின் ஒரு விளிம்பைத்தான் தொட்டிருக்கிறோம். திருமணமான தம்பதிகள் ஒவ்வொருவரும், குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும்படிச் செய்வதற்காக, தீவிரமான இடைவிடாத முயற்சிகள் அவசியமாகும். சந்தானபூர்த்தி அறுவை சிகிச்சை செய்துகொள்ளுபவர்களில் குறைந்த வருமானக்காரர்களுக்கு ரொக்க உதவி அளித்து வருகிறோம். அறுவை சிகிச்சைக்குப் பின்பு, ஓய்வு கொள்ளும் சில நாட்களில் அவர்கள் சம்பாத்தியக் குறைவைச் சரிக்கட்டும் முறையிலேயே இப்பணம் தரப்படுகிறது. இந்த ஏற்பாடு நல்ல உதவியாக அமைந்திருக்கிறது. ஆனால் இது போதாது. இந்தத் தனிப்பட்ட முறை தூண்டுதலானது, சமுதாயத் தூண்டுதல் மூலம் வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். இதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் வகுத்துள்ளது. இத்திட்டப்படி பிள்ளைப் பேறு குழந்தை நல நிலையங்கள் கட்டுவதற்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கு மொத்தத் தொகையாக மானிய உதவி அளிக்க வகை செய்யப்படுகிறது. சந்தான பூர்த்தித் திட்டத்தை நடத்தி வைப்பதில் பஞ்சாயத்து யூனியன்கள் எந்த அளவுக்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன என்பதைப் பொறுத்து, அந்த மானிய உதவியின் அளவு அமையும். குடும்பக் கட்டுப்பாட்டில் இத்தகைய தனிப்பட்ட முயற்சி, சமுதாய முயற்சி ஆகியவைகளின் முக்கியத்துவத்தை இந்திய அரசாங்கம் உணர்ந்து, குடும்பக் கட்டுப்பாட்டில் இந்த வேலைத் திட்டங்களைச் சேர்த்துக்கொள்ள வகை செய்யும் என்று நம்புகிறேன்.

9. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நல்ல முறையில அமுல் படுத்தி வருவதில் மருத்துவத் துறை அலுவலர்களின் பணி மிகவும் முக்கியமானது. இப் பணியில் நேரடியாக ஈடுபட்டிருப்பவர்களுக்கு, நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி வேலைகள் உள்ளன. அரசாங்க சேவையிலும், வெளியிலும் பெருமளவில உள்ள மருத்துவத் துறை அலுவலர்கள் — ஆண்களும் பெண்களும் — அளவான குடும்பத் திட்டம் என்ற தேசிய இலட்சியத்தை அடைவதில் நல்ல முறையில் உதவி செயயலாம். தங்களிடம் வரும் நோயாளிக்கு, இவ் விஷயமாக தக்க சமயத்தில் ஆலோசனை கூறியும், உதவியளித்தும், லட்சிய நிறைவேற்றத்துக்கு உதவி புரியலாம். பல சேவா ஸ்தாபனங்கள் இத் துறையில் பணியாற்றி வருகின்றன. அந்த நிறுவனங்கள், அரசாங்கத்தின் முயற்சிக்கு இணையாக, தங்கள் முயற்சிகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

10. குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக மருத்துவம், உயிரியல், விஞ்ஞானம், மக்கள் தொகைக் கணக்கு ஆகியவைகளில் ஆராய்ச்சிக்கு நிறைய இடமிருக்கிறது. அளவான குடும்பத் திட்டப் பணி பரவப் பரவ, இந்த ஆராய்ச்சிக்குரிய தேவைகள் அதிகரிக்கும். பல்கலைக் கழகங்கள் இத்துரையில் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

11. குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தை அமுலாக்குவதில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள அனுபவங்கள், திரண்ட வடிவில் இந்த மகாநாட்டுக்குக் கிடைத்துள்ளது. இதுவரை ஏற்பட்டுள்ள சாதனைகளை அளவிடுவதிலும் வரும் ஆண்டுக்கு அனுபவ சாத்தியமான வேலைத் திட்டத்தை வகுத்துக்கொள்வதிலும், இந்த மகாநாட்டு நடவடிக்கைகள் நமக்குப் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். இனிமேற்கொண்டு, ஆண்டுதோறும் இதுபோன்ற மகாநாடுகள் நடைபெறும் என்று நம்புகிறேன்.

12. தமிழ்நாடு அரசாங்கப் பிரதம காரியதரிசி ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி அவர்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் கொண்டுள்ள மனப்பூர்வமான ஆர்வத்தையும், உழைப்பையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். கல்வி, சுகாதாரத் துறையின் முன்னாள் காரியதரிசி என்ற முறையிலும், மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு போர்டு அலுவல் கமிட்டியின் தலைவர் என்ற முறையிலும், இத் திட்டத்துக்கு அவர் ஆலோசகராகவும். வேலைத் திட்ட நிர்வாக அதிகாரியாகவும் இருந்திருக்கிறார். தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு திட்ட வேலை இந்த அளவு முன்னேற்றமடைந்திருப்பதற்கு, அவரது சலியாத முயற்சிகளே பெருமளவு காரணமாகும்.

இந்த மகாநாட்டை ஆரம்பித்து வைக்குமாறு, டாக்டர் சுசிலா நய்யார் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.”

உற்பத்தித் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டியின் முதல் கூட்டம்

(நிகழ்ச்சிக் கோவை)

கடந்த மே மாதம் 10, 11, 12 தேதிகளில் உதக மண்டலத்தில் கூடிய நிர்வாகம், கட்டு வேலைகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் (Panchayat Development Consultative Committee on Administration and Works) முதல் கூட்டத்தைப் பற்றிய விவரங்களை ஜூலை மாத 'கிராம நல' இதழில் வாசகர்கள் படித்திருப்பார்கள். இதற்கு முன் இயங்கி வந்த மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழு (State Informal Consultative Committee) கலைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக, பஞ்சாயத்துக்கள் சம்பந்தமான பல்வேறு விஷயங்கள் பற்றிக் கவனிக்க, பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக் குழுக்களை (Consultative Committees on Panchayat Development) அமைக்க மாநில அரசாங்கம் முடிவு செய்தது யாவரும் அறிந்ததே. அதன்படி, 1. நிர்வாகம், கட்டு வேலைகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு. 2. உற்பத்தி வேலைத் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு. 3. க்ஷேம நலப் பணிகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு—என்ற மூன்று குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஜூலை 26, 27, 28 ஆகிய மூன்று நாட்களிலும், சென்னை ராஜாஜி மண்டபத்தில், உற்பத்தித் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குக் குழுவின் தலைவர் முதலமைச்சர் திரு. காமராஜ் தலைமை வகித்தார். * கூட்டத்தில் மாநில முதலமைச்சர் திரு. காமராஜ், மற்றும் மாநில அமைச்சர்கள், குழுவின் அங்கத்தினர்கள், சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறைகளின் உயர்தர அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(இக் குழுவின் உறுப்பினர்கள் முழு விவரம் கடைசியில் பார்க்கவும்).

* கூட்டத்தின் உறுப்பினர்கள் மாவட்ட வாரியாகப் பிரிக்கப்பட்டு, மண்டபத்தில் அமர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள், மாவட்டப் பிரதிநிதிகளுடன் அமர்ந்திருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த ஏற்பாட்டினால், மாவட்டப் பிரதிநிதிகள் உடனுக்குடன் விவாதத்திற்கு வரும் விஷயங்கள் பற்றி தத்தம் மாவட்டக் கலெக்டர்களுடன் கலந்தாலோசிக்கவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் வசதியாக இருந்தது.

முதல் நாள் கூட்டத்தில், கிராம உணவு உற்பத்தித் திட்டம், விவசாய மானியத்தைப் பயன்படுத்துதல் பற்றிய விஷயங்கள் விரிவாக விவாதிக்கப்பட்டன. கிராம உணவு உற்பத்தித் திட்டத்தின் அடிப்படை அம்சங்களை, மாநில விவசாயத் துறை இயக்குநர் (Director of Agriculture) எடுத்து விளக்கினர். அரசாங்கத் தலைமைச் செயலாளர் திரு ஆர். ஏ. கோபாலசாமி, ஐ. ஸி. எஸ்., கிராம உணவு உற்பத்தித் திட்டத்தைக் குறித்துப் பேசுகையில், "இந்தத் திட்டத்தைக் கிராம மக்களிடையே எடுத்துக் கூறி, அதைப் பரப்பவேண்டியது பஞ்சாயத்துத் தலைவர்கள் பொறுப்பு, கிராமத்தில் நல்ல நிர்வாகஸ்தர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அக்கறையுடன் பாடுபட்டால் இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்த முடியும். இதற்காகப் பஞ்சாயத்து சிறப்புக் கூட்டம் கூட்டி, பரிசீலனை செய்யவேண்டும். திட்ட ரீதியாக, முதல் வருடம் இரண்டாவது வருடம், மூன்றாவது வருடம் என்று இதைச் செய்தால்தான் கிராம உணவு உற்பத்தித் திட்டமானது ஒவ்வொரு கிராமத்திலும் வேரூன்றி நடக்கும். மக்களுடைய மனதில் நன்றாக இது பதியும்படி வேலை செய்யவேண்டியது பஞ்சாயத்துத் தலைவர்களின் பொறுப்பு என்பதை இக் கமிட்டியின் உறுப்பினர்கள் எடுத்துக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்". என்று குறிப்பிட்டார்.

கிராம உணவு உற்பத்தித் திட்டத்தைத் தொடர்ந்து அரசாங்க விவசாய மானியத்தைப் பயன்படுத்துதல், செய்முறை காட்டல் (Demonstration Plots), விதைகளை சேகரித்தல், விநியோகம், கிராம சகாயக் வேலைத் திட்டம், ஆகிய வற்றைப் பற்றி விவாதம் நடைபெற்றது. மாவட்டப் பிரதிநிதிகள் தங்களுடைய மாவட்டங்களில் இந்த வேலைகள் எப்படி நடைபெறுகின்றன, என்னென்ன பிரச்சினைகள் எழுகின்றன, என்பவைபற்றியெல்லாம் விளக்கமாகக் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். குறிப்பாக, விதைகளைச் சேகரித்து வைத்தல் (Storage of Seeds), என்பது பற்றி நடைபெற்ற விவாதம் நீண்டதாகவும், விறுவிறுப்பாகவும் இருந்தது. இந்தப் பிரச்சினையில் காணப்படும் நடைமுறைச் சிக்கல் பற்றி தலைமைச் செயலாளர் பின்வரும் கருத்தைத் தெரிவித்தார்கள். "விதைகளைச் சேகரித்து வைப்பதில் பஞ்சாயத்து கிராமத்தைத் தான் யூனிட்டாக எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தந்தக் கிராமங்களில் தான் ஸ்டோரேஜ் செய்யவேண்டும். வட்டாரத்தில் 4, 5 யூனிட்டுகள் என்று ஏற்படுத்திச் செய்யமுடியாது. இருக்கும் நிலையை வைத்து, ஒரு வருடத்திற்காவது இதைப் பஞ்சாயத்து செய்யவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்தும் இந்த வேலையைத் தனக்கு அளிக்கப்பட்ட ஒரு சவால் என்று கருதிப் பணிபுரியவேண்டும்" என்று அவர் கூறினர்.

ஒவ்வொரு வட்டாரத்திலும், பஞ்சாயத்துத் தலைவர்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்டவர்கள் ஆகியோர் அமைந்த ஒரு கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்றும் அந்தக் கூட்டத்தில் இது சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கலந்து பேசவேண்டுமென்ற கருத்து ஏகமனதாகத் தெரிவிக்கப்பட்டது.

1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ல் நடைபெற்ற இரண்டாம் நாள் கூட்டத்தில், மரம் நடுதல், ரசாயன உர விநியோகம், பஞ்சாயத்துக்களும், அரசாங்கப் பொது நிலமும், விசேஷ சிறிய பாசன வேலைத் திட்டங்கள் ஆகிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. குறிப்பாக, பொது நிலங்களின் மீது ஆக்கிரமிப்பு பற்றி, பிரதிநிதிகள் விரிவாகக் கருத்துத் தெரிவித்தனர். பொது நிலங்களின் மீது ஆக்கிரமிப்பு நடப்பதைத் தடுக்க அரசாங்கம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தை எல்லாப் பிரதிநிதிகளும் தெரிவித்தனர். அரசாங்கத் தலைமைச் செயலாளர் இது குறித்துப் பேசுகையில், "பொது நிலங்களின் மீது நடைபெறும் ஆக்கிரமிப்பின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. பஞ்சாயத்து ஸ்தாபனங்கள், இந்த விஷயத்தில் இரண்டு வகையாக நடந்து கொள்ள வேண்டும். இதைப்பற்றிய ஒரு கொள்கையை வரையறுத்துக் கொண்டு நடந்துகொள்ள வேண்டியதே முதல் பொறுப்பாகும். இரண்டாவது, இனிமேல் ஆக்கிரமிப்பு நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் உதவி புரியலாம். இதைப்பற்றி விரைவில் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வர இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ல் நடைபெற்ற மூன்றும் நாள் கூட்டத்தில், கால்நடைப் பாதுகாப்பு, விவசாயக் கடன் வசதி, கூட்டுறவுக் கடன் வசதி, முழு நிதி உதவித்திட்டம், கதர்-கிராமத் தொழில்கள், கிராமங்களுக்கு மின்சார வசதித் திட்டம்-ஆகிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. இந்தத் திட்டங்கள் நிறைவேற்றும் போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை மாவட்ட வாரியாகப் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர். அவற்றுக்கான விளக்கங்களை சம்பந்தப்பட்ட இலாகாத் தலைவர்கள் எடுத்துக்கூறி கிராம முன்னேற்றத்திற்கு அத்திட்டங்கள் நிறைவேற்றப்படுவது எந்த அளவுக்கு உதவியாக இருக்கும் என்பதையும் விளக்கினார்கள்.

மூன்று நாள் விவாதத்தையும், நடைமுறைகளையும் தலைமை வகித்துக் கவனித்து வந்த முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள், விவாதிக்கப்பட்ட விஷயங்கள் குறித்துத் தம் கருத்தை வெளியிட்டார்கள். அவர் தமது பேச்சில், "கிராமப் பொருளாதார வளர்ச்சிதான் நம்முடைய லட்சியம். மூன்று நாட்களும் நாம் எடுத்துப் பேசிய விஷயங்கள் அந்த லட்சியத்தை நாம் அடையும் வழிகளை ஆராய்வதே ஆகும். விவசாய அபிவிருத்தி நம்முடைய முக்கியமான பொறுப்பாகும். இதை விவசாயிகள் மனத்தில் பதியும்படிச் செய்யவேண்டியது முக்கியமாகப் பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் கடமை. அரசாங்கத் திட்டங்களையும், அதன் வேலை முறைகளையும் அவர்களுக்கு புரிய வைக்கவேண்டும். இந்த வேலையில் நாம் மனச் சோர்வடையக்கூடாது. இப்போது நம் முன்னுள்ள பிரச்சினை உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டும் என்பது. அதற்கான நல்ல விதைகள் கிடைக்க விதைப்பண்ணை, கிராம சகாயத் திட்டம், நல்ல உரம், உழைப்பு இவைகளைப் பற்றியெல்லாம் இந்தக் கூட்டத்தில் விவாதித்தோம். மரம் நடுதல், பாதுகாத்தல் இருக்கின்ற, மரத்தையும் பாதுகாத்தல் ஆகியவையும் நம்முடைய வேலையாகும். இத்தகைய வேலைகளை எடுத்துச் செய்யும்பொழுது ஏற்படுகின்ற பல பிரச்சினைகளை அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள சிரமத்தையெல்லாம் கூறினார்கள். இந்த வேலைகளில் பிரச்சினைகளும், சிரமங்களும் இருப்பதால்தான், நாம் கூடிப்பேசுகிறோம்; சிரமங்களைக் குறைப்பது எப்படி, சிக்கல்களைத் தீர்ப்பது எப்படி என்று ஆராய்கிறோம். இந்தத் திட்டங்களை நிறைவேற்றும்பொழுது, கிராமத்தில் தனிப்பட்ட சிலருக்குச் சில கஷ்டங்கள், சிரமங்கள் தோன்றலாம். அப்படிப்பட்ட சமயத்தில் நாம் பொதுவாக ஏற்படும் பெரிய நன்மைகளை எடுத்துக் கூறவேண்டும். பொது நன்மைகளை எடுத்துக் கூறுவதன் மூலமாகத்தான் அவர்களுடைய ஒத்துழைப்பைத் திட்ட வேலைகளுக்குத் திரட்ட முடியும். அப்பொழுதான் அவர்களும் உற்சாகமாக ஒத்துழைப்பார்கள்" என்று குறிப்பிட்டார். முதலமைச்சரின் பேச்சுக்குப் பின்னர் மூன்று நாள் நடைபெற்ற உற்பத்தித் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் முதல் கூட்டம் நிறைவெய்தியது.

உற்பத்தித் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் :

தலைவர்

(1) ஸ்ரீ கே. காமராஜ், முதலமைச்சர்.

உறுப்பினர்கள்

(2) ஸ்ரீ எம். பக்தவத்ஸலம், நிதி அமைச்சர்.
(3) ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன், தொழில் அமைச்சர்.
(4) ஸ்ரீ பி. கக்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்.
(5) ஸ்ரீ நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார், கூட்டுறவுத் துறை அமைச்சர்.

(6) ஸ்ரீ ஜி. பூவராகன், செய்தித் துறை அமைச்சர்.

(7) ஸ்ரீ வி. எஸ். சிவநேசன், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, வடக்கு வேலூர் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(8) ஸ்ரீ ஆர். ஜீவரத்தின முதலியார். எம்.எல்.ஏ., தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, வடக்கு வேலூர் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(9) ஸ்ரீ பி. ஸ்ரீனிவாச ரெட்டியார், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, தெற்கு வேலூர் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(10) ஸ்ரீ சி. ஜி. சேகரன், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, தெற்கு வேலூர் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(11) ஸ்ரீ எஸ். தியாகராஜன், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, வடக்கு கடலூர் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(12) ஸ்ரீ டி. எஸ். ராமபத்திர ரெட்டியார், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, வடக்கு கடலூர் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(13) ஸ்ரீ கே. பெருமாள் ரெட்டியார், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, தெற்கு கடலூர் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(14) ஸ்ரீ வி. கே. பாலசுப்பிரமணிய கந்தப் பிள்ளை, தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, தெற்கு கடலூர் மாவட்டக் அபிவிருத்தி கவுன்சில்.

(15) ஸ்ரீ வி. கோவிந்தசாமி நாயுடு, எம்.பி., தலைவர். உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, செங்கற்பட்டு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(16) ஸ்ரீ பி. ஓபுல் ரெட்டியார், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, செங்கற்பட்டு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(17) ஸ்ரீ வி. கே. பழனிச்சாமி கவுண்டர், எம்.எல்.சி., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, கோயம்புத்தூர் மேற்கு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(18) ஸ்ரீ கே. பொன்னையா, எம்.எல்.ஏ., தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, கோயம்புத்தூர் மேற்கு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(19) ஸ்ரீ ஏ .எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர். எம் .எல்.ஏ., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, கோயம்புத்தூர் கிழக்கு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(20) ஸ்ரீ கே. எஸ். ராமசாமி, தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, கோயம்புத்தூர் கிழக்கு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(21) ஸ்ரீ ஏ. குஞ்சன் நாடார், எம்.எல்.ஏ., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, கன்னியாகுமரி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(22) ஸ்ரீ ஜே. நேசமணி, தலைவர், தொழில் தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, கன்னியாகுமரி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(23) ஸ்ரீ ஜி. பக்கிரிசாமிப் பிள்ளை, தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, வடக்கு மதுரை மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(24) ஸ்ரீ எஸ். நஞ்சுண்டராவ், எம்.எல்.ஏ., தலைவர், தொழில், தொழிலாளர் நல் நிரந்தரக் கமிட்டி, வடக்கு மதுரை மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்,

(25) ஸ்ரீ ஏ. எம்.ராமசாமி, தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, தெற்கு மதுரை மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(26) ஸ்ரீ எஸ். சின்னக்கருப்ப தேவர், எம்.எல்.ஏ. தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, தெற்கு மதுரை மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(27) ஸ்ரீ டி. கர்ச்சா கவுடர், எம்.எல்.ஏ., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, நீலகிரி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(28) ஸ்ரீ ஜே. மாதா கவுடர், எம்.எல்.ஏ., தலைவர், தொழில், தொழிலாளர், நல நிரந்தரக் கமிட்டி. நீலகிரி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(29) ஸ்ரீ சா. கணேசன், எம்.எல்.ஏ., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி; கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

30) ஸ்ரீ ஆர். வி. சுவாமிநாதன், எம்.எல்.ஏ., தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(31) ஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, எம்.எல்.ஏ., தலைவர். உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, மேற்கு இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(32) ஸ்ரீ எஸ். ஜெயராம் ரெட்டியார், எம்.எல்.சி. தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, மேற்கு இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(33) ஸ்ரீ கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர், எம்.எல்.ஏ., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, சேலம் தெற்கு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(34) ஸ்ரீ என். ராமச்சந்திரன், எம்.எல்.ஏ., தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, சேலம் வடக்கு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(35) ஸ்ரீ டி. சொக்கலிங்கம், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, சேலம் வடக்கு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(36) ஸ்ரீ ஜி. வெங்கட்ராமன், எம்.எல்.ஏ., தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, சேலம் தெற்கு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(37) ஸ்ரீ சண்முகசுந்தரம் பிள்ளை, தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, கிழக்கு தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(38) ஸ்ரீ எஸ். ராஜகோபால் பிள்ளை, தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, கிழக்கு தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(39) ஸ்ரீ ஆர். சௌந்தரராஜன், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, மேற்கு தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(40) ஸ்ரீ ஏ. மாரிமுத்து, தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, மேற்கு தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(41) ஸ்ரீ பி. ரங்கசாமிக் கோனுர், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, வடக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(42) ஸ்ரீ ஆர். விஸ்வநாதன், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, வடக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(43) ஸ்ரீ டி. எம். நல்லசாமி கவுண்டர், எம்.எல்.ஏ., தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி தெற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(44) ஸ்ரீ ஏ. நாச்சியப்பன், தலைவர். தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி. தெற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(45) ஸ்ரீ சங்கரநாராயண பிள்ளை, தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, வடக்கு திருநெல்வேலி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(46) ஸ்ரீ எம். ஏ' கணேச பாண்டியன், தலைவர், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி. வடக்கு திருநெல்வேலி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(47) ஸ்ரீ வி. சுப்பையா பாண்டியன், தலைவர், உணவு, வேளாண்மை நிரந்தரக் கமிட்டி, தெற்கு திருநெல்வேலி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

(48) ஸ்ரீ எல். குத்தாலலிங்கம் செட்டியார், தலைவர், தொழில், தொழிலாளர் நல நிரந்தரக் கமிட்டி, தெற்கு திருநெல்வேலி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்.

மற்றும், தமிழ்நாடு அரசாங்கத் தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், உணவு விவசாயத்துறைச் செயலாளர், தொழில்-தொழிலாளர் நலன்-கூட்டுறவுத்துறைச் செயலாளர், கிராம அபிவிருத்திக் கமிஷனர் (உறுப்பினர், குழுச் செயலாளர்), உணவு உற்பத்திக் கமிஷனர், விவசாயத்துறை இயக்குநர், கால்நடைப் பராமரிப்புத்துறை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், மீனளத்துறை இயக்குநர், மாநில மின்சார போர்டு தலைவர், வனத்துறை தலைமை கன்சர்வேடர், கதர் கிராமத் தொழில் போர்டு செயலாளர், தொழில்-தொழிலாளர் நலத் துறை இணைச் செயலாளர் ஆகிய அதிகாரிகளும் இந்தக் குழுவில் உறுப்பினர்களாவார்கள்.

[உற்பத்தித் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் முதற் கூட்டத்தில் பெரும்பான்மையான அதிகாரப்பற்றற்ற உறுப்பினர்களும், எல்லா அதிகாரப் பற்றுள்ள உறுப்பினர்களும், அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.]

அறிவொளி பரப்பும் வேலைத் திட்டம் :

"ஊக்கமும் உழைப்பும் ஊரை உயர்த்தும்...."

[1962 ம் வருடம் ஆகஸ் மாதம் 7 ம் தேதியில் மீனம்பாக்கம் கிராம வானொலி மன்ற கூட்டத்தில் கலந்துகொண்டு, பஞ்சாயத்து வேலைத் திட்ட இயக்குநர் திரு குலாம் மகமது பாஷா, ஐ. ஏ. எஸ். அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.]

"கிராம வானொலி மன்ற" நிகழ்ச்சிகளை, ஜனங்கள் எவ்வாறு வரவேற்கிறார்கள் என்பதை, நேரில் அறியவே நான் இங்கே வந்தேன். பரங்கிமலை பஞ்சாயத்து யூனியன் துணைத் தலைவரும், உங்கள் பஞ்சாயத்தின் தலைவரும் இங்கே வந்திருப்பது பற்றி மிகவும் சந்தோஷம்.

மீனம்பாக்கத்திலுள்ள நமது ஆகாய விமான நிலையம், உலகப் புகழ் பெற்றது. வெளிநாட்டிலிருந்து வரும் எல்லாப் பிரமுகர்களும், உங்கள் ஊரில் தான் முதலில் வந்து இறங்குகிறார்கள். நமது அரசாங்கத்தின் ஒரு முக்கிய இடமாக, உங்கள் ஊர் விளங்குகிறது. ஆனால், இங்குள்ள ஜனங்களுக்கு, எத்தனையோ அசௌகரியங்கள் உள்ளன. இப்பொழுது தான், ஒரு சில தெருக்களில் கப்பி ரஸ்தா போடப்பட்டு வருகிறது. பள்ளிக்கூடத்திற்குப் படிக்க அநேக குழந்தைகள் வருகின்றன. ஆனால், போதுமான இட வசதி இல்லை. புதிய கட்டடம் அமைப்பதில் காலதாமதம் ஆகி வருகிறது. கிராம வானொலி மன்றத்தின் சார்பில் அமைந்த கூட்டத்தில் இந்த விஷயங்களைப்பற்றியெல்லாம் அங்கத்தினர்கள் விவாதித்தார்கள். இது சம்பந்தமாக, ஒரு சில கருத்துக்களை, உங்களுடன் பரிமாறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒற்றுமையும் கூட்டு முயற்சியும் அடிப்படைத் தேவைகள்

நமது கிராம அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ வேங்கடாசலபதி அவர்கள், ரேடியோவில் மிக அழகாகப் பேசியதைக் கேட்டீர்கள். பஞ்சாயத்து ஆட்சி நன்றாக நடைபெற வேண்டுமானால், நம் தேசத்தில் ஒற்றுமையும், கூட்டு முயற்சியும் மிகவும் அவசியம் என்பதை, அவர்கள் ஆணித்தரமான முறையில் விளக்கினார்கள். அந்தப் பேச்சைக் கேட்கும் ஒவ்வொருவருக்கும், உற்சாகம் ஏற்படுவது நிச்சயம். தமிழ் நாட்டில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், உங்களைப் போலவே, கிராம ரேடியோ மன்ற அங்கத்தினர்கள் அனைவரும் இந்தப் பேச்சுக்களை கேட்டிருப்பார்கள். இதற்குமுன் வாரங்களில், நமது முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ், தலைமைக் காரியதரிசி ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ. சி. எஸ்., ஆகியோரின் பேச்சைக் கேட்டிருப்பீர்கள். அடுத்த வாரம், நமது இந்திய அரசாங்க அமைச்சர் ஸ்ரீ எஸ். கே. டே அவர்களின் பேச்சைக் கேட்பீர்கள். இவையெல்லாம். திருச்சியில் நடைபெற்ற பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்கள் மாநாட்டில் பேசிய பேச்சுக்களாகும்.

இந்தப் பேச்சுகளின் முக்கிய நோக்கம் என்ன? "இந்தியா முழுவதும் நம்முடையது, அதற்காக நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து, வேலை செய்ய வேண்டும்" என்று சொல்கிறோம். இதன் அர்த்தம் என்ன? ஒரு சிறிய குடும்பத்தை எடுத்துக்கொள்வோம். அதில் உள்ள எல்லோரும் அவரவர் தகுதிக்கேற்றபடி, வேலை செய்தல் தான், குடும்பத்தின் மதிப்பு உயரும். கஷ்ட நஷ்டங்கள் வரத்தான் செய்யும். அப்படி வரும் போது, அவற்றை எல்லோரும் சேர்ந்து தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கும்போது, கஷ்டம் அவ்வளவாகத் தெரியாது. முக்கியமாக, கிராமங்களிலுள்ள குடும்பங்களுக்கு, இந்த விஷயம் அனுபவத்தில் நன்றாகப் புரியும். ஒரு சிறிய குடும்பம் அல்லது வீடு இருக்கின்ற இந்த நிலைமையைப் போன்றதே, ஒரு பெரிய நாட்டின் நிலைமை. அங்கே வாழ்கின்ற ஜனங்களிடையே, ஒற்றுமை மனோபாவம் ஏற்பட்டு விட்டால், எல்லாம் சரிவர நடக்கும். "நான் வேறு, நீ வேறு" என்ற பேத புத்தி வந்து விட்டால், குடும்பத்தில், ரகளை ஏற்பட்டுவிடும். பொறுப்புணர்ச்சி, எல்லோருக்கும் ஏற்படவேண்டும். குடும்பத்தின் தலைவருக்கு மட்டும் திறமை இருந்தால் போதாது. "ஒழுங்கான முறையில் முன்னேற வேண்டும், அதற்கான வழிகளைத் தெரிந்து கொள்ளவேண்டும்" என்ற ஆவலும் அதற்கேற்ற உழைப்பும், எல்லோருக்கும் வேண்டும். குறிப்பாக, சிக்கனமாகவும், நாணயமாகவும், நம்பிக்கையோடும் வாழும் எண்ணம், மக்களிடையே வளர வேண்டும். நமது அரசாங்கத்தினரிடம் உள்ள பணமும், அதிகாரமும், பொது மக்களின் நன்மைக்காகவே பயன்படுத்தப் பட்டு வருகின்றன. கிராமங்களில் உள்ள ஏழைகளின் கஷ்டங்களை படிப்படியாக, தீர்த்து வைக்கவே, அநேக அபிவிருத்தித் திட்டங்கள் உருவாகி, நிறைவேறி வருகின்றன.

நம் தேவையை நாம்தான் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்

உங்கள் ஊரிலுள்ள பள்ளிக்கூடத்திற்கு நல்ல கட்டிடம் இல்லை என்று கூறினீர்கள். இது யாருடைய தவறு? உங்கள் குடும்பத்தில் உள்ள ஓர் அம்மையார் கந்தல் புடவை கட்டிக் கொண்டிருந்தால், அது யாருடைய தவறு? அதனால் வரும் அவமானம் யாரைச் சேர்ந்தது? "அந்தக் குடும்பத்தில் வருமானம் போதவில்லை, சிக்கனமில்லை, சரியான கவனிப்பு இல்லை" என்பது தானே அதன் அர்த்தம்? அதைப் போக்க, மற்றவர்களிடம், தானம் வாங்கலாமா? பிச்சை எடுக்கலாமா? அதெல்லாம், கௌரவமான காரியமா? நேர்மையான முறையில் உழைத்து, குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் வேண்டிய உணவு, உடை, இருப்பிடம் முதலியவற்றை ஏற்பாடு செய்யும் பொறுப்பை, யாராவது மறக்க முடியுமா? அந்த பொறுப்பை மறந்து வாழ்பவர்களுக்கு, உலகத்தில் மதிப்பு இருக்க முடியுமா?

கேள்வியும் — பதிலும்

கேள்வி.—" பஞ்சாயத்து யூனியன் பெருந் தலைவர்கள் மகாநாடு " என்று சென்ற இதழில் குறிப்பிடப்பட்டிருந்தது. ' பெருந்தலைவர்கள் ' என்பது யாரைக் குறிக்கும் ?

பதில்—பஞ்சாயத்து யூனியன் சேர்மனைத்தான் பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர் என்று அழைக்கிறோம். பஞ்சாயத்து பிரசிடெண்டை பஞ்சாயத்துத் தலைவர் என்று அழைப்பதால், பஞ்சாயத்து யூனியன் சேர்மனை, பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர் என்று அழைப்பது மிகவும் பொருத்தமுடையதாகும். இப்படி அழைக்க வேண்டுமென்பதே, ஆட்சி மொழிச் சட்ட நிறைவேற்றக் குழுவின் தலைவர் திரு எஸ். வெங்கடேஸ்வரன், ஐ. ஸி. எஸ். , அவர்களின் உத்தரவாகும். இனிமேல், பஞ்சாயத்து யூனியன் சேர்மனை, தமிழில் பஞ்சாயத்து யூனியன் பெருந் தலைவர் என்றே அழைக்கவேண்டும்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஒரு சிறு குடும்பத்திற்கு உள்ள இந்த உதாரணமே, ஒரு பெரிய கிராமத்திற்கும்—மிகப் பெரிய நமது இந்திய நாட்டிற்கும் அப்படியே பொருந்தும். நாம் சுதந்திரம் பெற்ற இந்தியாவில் வாழ்கிறோம். புதிய பஞ்சாயத்து ஆட்சி மூலம் கிராமங்களுக்கு புதிய பொறுப்பு அளிக்கப் பட்டிருக்கிறது. இனிமேல் நம் குறைகளை நாமே தீர்த்துக் கொள்ள முன் வரவேண்டுமே தவிர, யார் மேலாவது பழி சுமத்திவிட்டு, சும்மா இருக்க முடியாது. கிராமத்தில் பள்ளிக்கூடம் நன்றாக இல்லையென்றால் பஞ்சாயத்து சரியாக வேலை செய்யவில்லை என்று அர்த்தம். பசி, நோய், வேலையில்லாத் தொல்லை, முதலியன நம் சமுதாயத்தை விட்டு அடியோடு நீங்க வேண்டும் என்பதற்காகவே, ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறி வருகின்றன.

பொதுமக்கள் உற்சாகம் காட்டவேண்டும்

ஆனால், இவையெல்லாம் பொதுமக்கள் ஒத்துழைப்பில்லாமல் முழுமையாக நிறைவேற முடியாது. நமது மக்களிடையே, பொருளாதார வளம் ஏற்பட வேண்டும் ; பொது நல வசதிகள் பெருக வேண்டும். அதற்கு, சம்சாரிகளிடையே, சிக்கனம், நேர்மை, உழைப்பு ஆகியவை மேன் மேலும் வளரவேண்டும். மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து கொள்ளும் ஒழுங்குமுறை, சமுதாயத்தில் வேரூன்ற வேண்டும்.

இவையெல்லாம், ஏதோ வேதாந்தப் பேச்சென்று ஒரு சிலர் நினைக்கலாம் அது தவறு. தஞ்சாவூர் ஜில்லாவில், திருவாரூரை அடுத்த " கூத்தாநல்லூர் " என்ற கிராமத்தைப் பற்றி பலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். சுமார் 25 வருடங்களுக்கு முன்பு, நான் அங்கே வேலை பார்க்க நேர்ந்தது. அன்று முதல், அங்கே உள்ள பொதுமக்கள் காட்டிய உற்சாகம் காரணமாக, பொது நல வசதிகள், படிப்படியாக ஏற்பட்டு வளர்ந்ததை, நான் நன்றாக அறிவேன். எனவே, பொதுமக்கள் உற்சாகத்தோடு முன் வந்தால், ஆகாதது எதுவுமில்லை. முக்கியமாக மீனம்பாக்கம் போன்ற கிராமங்களில் சிறு கைத் தொழில்கள் ஏற்பட, வழி செய்யலாம்.

உங்கள் பஞ்சாயத்துக்கு ஆதரவு தந்து, முன்னேற்றம் அடையுங்கள். இந்த ரேடியோ மன்றம் இத்தகைய விவாதங்கள் நடைபெறப் பெரிதும் உதவி புரியும் என்று நம்புகிறேன். நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதில்களை, கிராம ரேடியோ மன்றங்களின் தலைமை அமைப்பாளர், சேகரித்து ஒலி பரப்ப உதவி புரிவார்."

—x—

பரங்கிமலை பஞ்சாயத்து யூனியன்,— மீனம்பாக்கம் கிராம வானொலி மன்றம்

1962–ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ம் தேதி அன்று பரங்கிமலை பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர் திரு. T. L. ரகுபதி அவர்கள் ஆலோசனையின் பேரில் உதவித் தலைவர் திரு. R. கண்ணன் அவர்கள் முன்னிலையில் கிராம வானொலி மன்றம் அமைக்கப் பெற்றது. மீனம்பாக்கம் கிராம வானொலி மன்றத்திற்கு திரு. தக்ஷிணாமூர்த்தி அவர்கள் தலைவராகவும், திரு திருக்குறள்துரை அவர்கள் கன்வினராகவும் நியமிக்கப் பெற்றார்கள். மேற்படி மன்றத்தில் மொத்தம் 28 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். கிராம அபிவிருத்திக்கு ஒரு சங்கம் அல்லது மன்றம் என்று சொல்லும்போது ஒற்றுமை மிக முக்கியமாக கருதப்படுகிறது. பெண்களையும் கிராம வானொலிமன்றத்தில் பங்கு கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டபொழுது, மீனம்பாக்கத்தில் இருக்கும் பெண்கள் நாங்களும் இதில் பங்கு பெறுவோம் என்று முன்வந்து கிராம வானொலி மன்றத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தது பாராட்டுதலுக்குரியது.

மீனம்பாக்கம் கிராம வானொலி மன்றத்தைப் பார்வையிட தமிழ்நாடு பஞ்சாயத்து வேலைத்திட்ட இயக்குநர் திரு. குலாம் முகம்மது பாஷா, ஐ. ஏ. எஸ்., அவர்களும் தமிழ்நாடு பிரதம கிராம வானொலி மன்ற அமைப்பாளர் திரு. எஸ். வேங்கடசாமி, எம். ஏ., அவர்களும் 1962-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 7-ம் தேதி அன்று விஜயம் செய்தது கிராம வானொலி மன்றத்திற்கு சிகரம் வைத்தாற்போல் அமைந்தது. திரு. குலாம் முகமது பாஷா அவர்கள் கிராம வானொலி மன்றத்தின் அங்கத்தினர்களின் விவாதத்தில் கலந்துகொண்டு அறிவுரை ஆற்றினார்கள். அவருடைய வருகை இத் துறையில் பணியாற்றுகிறவர்களிடையே மேலும் உற்சாகத்தை ஊட்டும் வகையில் அமைந்தது.

ஒவ்வொரு வாரமும் கிராம வானொலி மன்றத்தின் அங்கத்தினர்கள், தலைவர், கன்வீனர் முதலியவர்கள் கூடி வானொலி நிகழ்ச்சியைக் கேட்டு தங்கள் கருத்துக்களை விவாதம் மூலம் பரிமாறிக் கொள்கின்றனர். அவர்களிடையே ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கம்பெற கேள்விகளை எழுதி தமிழ்நாடு பிரதம வானொலி மன்ற அமைப்பாளர் அவர்களுக்கும் திருச்சி அகில இந்திய வானொலி நிலைய ஆணையருக்கும், அனுப்பி விளக்கம் பெற்று தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்கின்றனர். இதனால், கிராம அபிவிருத்தி வேலைகளில் மக்களின் ஒத்துழைப்பும், உற்சாகமும் அதிகம் கிடைக்கிறது. அவ்வப்பொழுது ஏற்படும் நிகழ்ச்சிகள், செய்திகள் முதலியவைகளைக் கேட்டு தங்கள் அறிவை வளர்த்துக் கொள்கிறார்கள்.

கிராம வானொலி மன்றம் கிராமங்களில் மக்களின் அறிவை வளர்க்கவும், பெற்றுக் கொண்ட செய்தியின் மூலம் செயலில் ஈடுபடவும், கிராம முன்னேற்றத்திற்கும் இன்றியமையாத ஸ்தாபனம் என்பதில் ஐயமில்லை.

புதிய பஞ்சாயத்து ஆட்சியில் கல்வி வளர்ச்சி

[இக் கட்டுரைத் தொடரில் இதுவரை இரண்டு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பள்ளிக் கூடங்களில பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் (Registers) என்னென்ன ? அவை எப்படி வைத்துக்கொள்ளப்படவேண்டும் என்பது பற்றிய விளக்கக் குறிப்புகளை மூன்றுவது கட்டுரையாக வெளிவரும் இக் கட்டுரையில் காணலாம்.]

பதிவேடுகள்

ஒவ்வொரு தொடக்கப்பள்ளியிலும் பல பதிவேடுகள் உள்ளன. அரசினர் வெளியிட்டுள்ள "தொடக்கப் பள்ளிக்கான சட்டங்கள்" எனும் புத்தகத்தில் கீழ்க் கண்ட பதிவேடுகள் ஒவ்வொரு தொடக்கப் பள்ளியிலும் இருக்கவேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1. மாணவர்களை சேர்த்தல், நீக்குதல் பதிவேடு.
2. மாணவர் வருகைப் பதிவேடு.
3. ஆசிரியர் வருகைப் பதிவேடு.
4. ஆசிரியர் சம்பளப் பதிவேடு.
5. தணிக்கையாளர் புத்தகம்.
6. பார்வையாளர் புத்தகம்.
7. மாணவர் குறிப்பேடுகள்.

இவற்றுள் தணிக்கையாளர் புத்தகம் (Inspection Book), பார்வையாளர் புத்தகம் (Visitors Book) எனும் இரண்டும் சில பள்ளிகளில் 40 பக்க நோட் புத்தக உருவில் உள்ளன. நீண்ட காலத்திற்கு இருக்கவேண்டிய புத்தகங்கள் இவை. ஆதலால், இவை இரண்டும் நல்ல தடித்த கனமான அட்டையுள்ள புத்தகங்களில் இருத்தல் வேண்டும்.

மற்றும் இப்புத்தக பக்கங்கட்கு இலக்கமிடுதல் அவசியம்.

சில பஞ்சாயத்து யூனியன்களில் இவ்விரு புத்தகங்களையும் அச்சடித்து வழங்கியுள்ளார்கள். மேல் அட்டையில் கீழ்க்கண்டவாறு அச்சடிக்கபபட்டுள்ளது :—

"....................Panchayat Union
Inspection Book.
P. U. School, ..."

சில சமயங்களில் பள்ளிக்கூட தணிக்கையாளரோ, பிற பார்வையாளரோ, ஏதேனும் ஒரு பதிவேட்டைக் கேட்டால், அதைத் தேடி எடுக்க, தலைமையாசிரியருக்கு, அதிக நேரம் பிடிக்கிறது. ஒவ்வொரு பதிவேட்டின் மேலட்டையிலும் அது இன்ன பதிவேடு என்று எழுதவேண்டும.

சில இடங்களில், பதிவேடுகளை நன்ருக அட்டைபோட்டு, அதன் பெயரை அட்டைமேல் எழுதுவதோடு நில்லாது, ஒரு எண் கத்தரித்து ஒட்டியிருக்கிருர்கள். தலைமை ஆசிரியர் உட்காருமிடத்திற்கு அருகில் சுவரில் பதிவேடுகள் பெயர்களைக்கொண்ட ஒரு அட்டை தொங்குகிறது. அந்த அட்டையில் ஒவ்வொரு பதிவேட்டிற்கும் ஒரு எண் கொடுத்திருக்கிறது. அதே எண்ணை அந்த குறிப்பிட்ட பதிவேட்டின மேலும் ஒட்டியிருக்கிறது. இவை யாவும் ஒழுங்காக அடுக்கி ஒரு பலகைமேல் வைக்கப்பட்டுள்ளன. இம்முறையில் மாணவர்கள்கூட எந்த பதிவேட்டையும் எளிதில் எடுக்க முடிகிறது.

மேலே குறிப்பிட்ட பதிவேடுகளன்றி, மக்கள் கணக்கு (Census Register), சிறுவிடுதி கணக்கு (C. L. Register), தளவாட சாமான்கள் பதிவேடு (Tools and Plant Register), சுற்றறிக்கை புத்தகம் (Circular Book) என்பவை போன்ற பதிவேடுகளும் ஒவ்வொரு பள்ளியிலும் இருத்தல் வேண்டும்.

எல்லா பதிவேடுகளிலும் எழுதுவதைத் தெளிவாகவும் அழகாகவும் நிறுத்தி எழுதவேண்டும். தவறு ஏற்பட்டால், அடித்துவிட்டு எழுதவேண்டுமேயொழிய, திருத்துவது கூடாது.

சிறப்பாக ஆசிரியர் கையெழுத்திடும் பதிவேடு நன்கு வைக்கப்படவேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும், பள்ளிக்கூடம் வந்ததும், ஒவ்வொரு வேளையும், ஆசிரியர் வருகைப் பதிவேட்டில் சுருக்கு கையெழுத்திட வேண்டும். பள்ளிக்கூடம் தொடங்கும் நேரத்தில் ஒரு ஆசிரியர் வரவில்லை என்ருல் அவர் அன்று காலங் கடந்து வருகிருர் என்று பொருள். காலங் கடந்துவந்ததைக் காட்ட சிவப்பு மையில் அவர் கையெழுத்திடும் இடத்தில் கோடிடவேண்டும். ஒரு மணி நேரம் கழிந்ததும் ஒருவர் வரவில்லையென்ருல் சிவப்பு மையில் "க" என்று குறிக்கவேண்டும். சிறு விடுதிக்கு எழுதியிருந்தால் C. L. என்று சிவப்பு மையில் ஆசிரியர் கையெழுத்திடவேண்டிய இடத்தில் குறிக்கவேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் நாம் நியாயமாகத்தானே நடக்கிறோம் என்று எண்ணுவதுமட்டும் போதாது. பிறரும் அப்படி நினைக்கத்தக்க வகையில் நடந்துகொள்ள வேண்டும். சிறப்பாக "C. L." எடுப்பதில் யாதொரு விதமான

ஐயமும் ஏற்படாதவகையில் நடக்கவேண்டும். தலைமையாசிரியர் சிறு விடுதியிற் சென்றால் அவர் செய்யவேண்டியவை மூன்று :—

(1) சிறுவிடுதியில் செல்லுமுன்பே தபால் பெட்டியில் சிறு விடுதி விண்ணப்பத்தை கார்டில் எழுதி போடவேண்டும். கார்டின் மேலுள்ள தபால் முத்திரை அது எப்பொழுது போடப்பட்டது என்பதைக் காட்டும் "தினைத்துணையாங் குற்றம்வரினும் பனைத்துணையாக கொள்வர் பழிநாணுவார்" எனும் தமிழ் மறை வாசகத்திணங்க ஆசிரியத் தோழர்கள் நடக்க வேண்டி இம்முறை தெரிவிக்கப்படுகிறது.

(2) சிறுவிடுதிக்கு விண்ணப்பித்த காலத்திற்கு "C. L." என்று சிவப்பு மையில் C. L. ல் போடுமுன்பே போட்டுவிடவேண்டும். தலைமையாசிரியர் வீட்டிலிருந்து எழுதினால் இது எப்படி முடியும் என்று சிலர் கேட்கலாம். வீட்டிலிருந்து எழுதினால்கூட, உதவி ஆசிரியர் இவ்வாறு உடனடியாக செய்யவேண்டும்.

(3) சிறுவிடுதிப் பதிவேடு என்று ஒரு 10 பக்க நோட் வைத்து, ஒரு ஆசிரியருக்கு ஒரு பக்கம் வீதம் ஒதுக்கி அதில் தலைப்பில் ஒவ்வொரு ஆசிரியர் பெயரையும் எழுத வேண்டும். பிறகு கீழே கிழ்க்குறியிட்டவாறு கலன்கள் போடவும்.—

விண்ணப்பித்த தேதி.	விடுதி வேண்டிய தேதிகள்.	காரணம்.	விடுதி வேண்டிய காலம் (நாட்கள்)	இதுவரை இப்பொழுது கேட்டவருக்கு பசார்த்தல். இவ்வளவு நாள் இல்லாமல் எடுத்திருக்கிறார்.

இப்படி அமைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் சிறுவிடுதி விண்ணப்பத்தைப்பற்றி எழுதி வைத்துவிட்டு அதன்பிறகு தான் சிறுவிடுதியில் செல்லவேண்டும்.

தலைமையாசியர் எப்படி மேலே கூறியவற்றைச் செய்கிறாரோ அதேபோல உதவிக்கும் செய்தல் வேண்டும்.

பள்ளிக்கூடத்தை ஆணையாளரோ, கல்வி வளர்ச்சி அலுவலரோ, வட்டகண்காணிப்பாளரோ பார்வையிடுங்கால் ஒரு ஆசிரியர் இல்லாமல் இருந்து அவர் கையெழுத்திடும் புத்தகத்தில் "C. L." என்று போடாமல் காலியாக வைத்திருந்தால் அந்த பள்ளிக்கூடம் சரியாக நடக்கவில்லை என்று நினைக்க ஏதுவுண்டு, C. L. எழுதிவைத்துள்ள ஒரு காகிதத்தைக் காட்டுவதும் ஒன்றுதான், அதைக் காட்டாமல் இருப்பதும் ஒன்றுதான். இக்கடிதத்தை கிழித்துப் போட்டு விட்டு கையெழுத்துப் போட்டால், யாராலும் தடுக்க முடியாது.

எனவே, ஆசிரியர்கள், இந்த ஒரு விஷயத்தில் கடுகளவு சந்தேகமும் ஏற்படாமல் நடந்துகொள்ள வேண்டும். இதில் தவறு இருந்தால், ஆணையாளர் சமாதானம் கேட்டு, குற்றச்சாட்டு பிறப்பித்து, அது தீரும் வரை தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவைத்தால், அவர் செய்தது சரியல்ல என்று யாரும் சொல்ல முடியாது.

மற்றொன்று, பிள்ளைகள் வருகைப் பதிவேடு பற்றியது. பள்ளிக்கூடம் தொடங்கியதும் பதிவை எடுக்கவேண்டும். ஒரு மணி முடிந்ததும் பதிவை முடிக்கவேண்டும். பதிவை முடிப்பதென்றால் வராத பிள்ளைகளுக்கு எதிரே வெறும் புள்ளியை வைக்காமல் 'a' அல்லது 'l' என்று போட்டு வருப்புவாரியாக வந்தவர் தொகையைக் கூட்டிப் போடவேண்டும். ஒவ்வொரு வேளையிலும் இதை சரியாக செய்யவேண்டும். அநேக பள்ளிக்கூடங்களில் இதை ஒழுங்காக செய்கிறதில்லை. "பாடம் கவனமாக சொல்லிக் கொடுத்திருந்ததால் இது செய்யத் தவறிவிட்டது"— என்பது பலர் கூறும் காரணம். இது சரியல்ல. இது விஷயத்தில் ஆசிரியர்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

பதிவு ஒரு மணிக்குள் முடிக்காத பள்ளிகளில் வந்திருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும், முன் வேளை பதிவில் குறித்த எண்ணிக்கைக்கும் வேறுபாடு அதிகமிருந்தால் உண்மை பதிவு நடக்கவில்லை என்று கருத இடம் ஏற்படுகிறது.

மற்றும் பள்ளிக்கூடத்தில் பெயர் சேர்க்காத பிள்ளைகளை வைத்திருப்பதும் கணக்கில் அவர்களும் இருப்பதால் எண்ணிக்கை அதிகமாக இருப்பதுபோல காணப்படுவதும் சரியல்ல.

மேலும், பிள்ளைகள் வருகையை ஒவ்வொரு ஆசிரியரும் அவரவர் வகுப்பு கரும்பலகையில் ஒவ்வொரு வேளையும் குறிக்கவேண்டும். தேதியும் வருகையும் குறித்தால்தான் ஒழுங்காகப் பள்ளி நடப்பது புலனாகும்.

சில பள்ளிகளில் ஒரு மணி முடிந்ததும் பதிவைக் கூட்டிப்போடுவது கரும்பலகையில் வருகையைக் குறிப்பது என்பதோடு நில்லாது, ஒரு குட்டை நோட் புத்தகத்தில் வருகையை வகுப்புவாரி குறித்து மொத்தம் கூட்டிப் போட்டு வைக்கிறார்கள். பார்வையாளர் எப்பொழுது வந்தாலும், மாணவர் வருகையை தங்கு தடையின்றி விரைவில் கூற இச்சிறு நோட்புத்தகம் உதவுகிறது. உள்ளவர் விவரத்தை தினமும் எழுதாமல் வாரம் ஒரு முறை எழுதிவந்தால் போதும்.

முடிக்கணக்கு எழுதுவதில் ஒரு ஊரில் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிக்கூடங்களிருந்தால் இன்னின்ன பள்ளிக்கூடம் இன்னின்ன தெருக்களுக்கு கணக்கு எழுத வேண்டும் என்று அந்த ஊரில் உள்ள பள்ளித் தலைமையாசிரியர்கள் கூடிப் பேசி முடிவுகட்ட வேண்டும். இரு பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஒரே இடத்திற்குப் போகாமலும், ஒரு இடத்தை எந்த பள்ளிக்கூடத்து ஆசிரியரும் கணக்குக்குள் வராமல் விட்டுவிட்டது என்று சொல்லாமலும் இருக்கத்தக்க வரையிலும் இதை எழுத வேண்டும்.

(தொடரும்)

பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்

(திரு எம். என் பார்த்தசாரதி, பிரதம வானொலி அதிகாரி, தமிழ்நாடு அரசாங்கம்.)

[பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனத்தைப் பற்றிய தகவல்களை இக் கட்டுரையில் காணலாம். இக் கட்டுரையில் பிரதம வானொலி அதிகாரி பஞ்சாயத்து நிறுவனங்கள் இத் துறையில் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கியுள்ளார். 1962 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ந் தேதி காந்தி ஜெயந்தி தினத்திற்குள், எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டாக வேண்டும். இந்த விஷயத்தில், பிரதம வானொலி அதிகாரியின் இக் கட்டுரை, பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என நம்புகிறோம்—ஆசிரியர்]

சென்னை மாநில பஞ்சாயத்துகளில் நிறுவப் பெற்றிருக்கும் வானொலிக் கருவிகளைப் பழுது பார்த்து பராமரிக்கும் பொருட்டு பஞ்சாயத்து வானொலி பராமரிப்பு நிறுவனம் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி அன்று நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் அமைக்கப்படுவதற்கு முன்பு, மாநில வானொலி இலாகா இயங்கி வந்தது. மத்திய அரசாங்கம் வழங்கி வந்த வானொலிக் கருவிகளை அந்த இலாகா பஞ்சாயத்துகளில் நிறுவி பராமரித்து வந்தது. அக்கருவிகள் அகில இந்திய ரேடியோ (ஆகாஷ்வாணி)யின் குறித்த ஒன்றிரண்டு நிலையங்களையே ஏற்கக் கூடியனவாயிருந்தன. மேலும் மத்திய அரசாங்கம் ஆண்டுதோறும் குறைந்த அளவில் வானொலிக்கருவிகளை வழங்கி வந்தனர். இவ்வகையில் அக் கருவிகளை மாநில பஞ்சாயத்து மக்கள் மிகவும் விரும்பவில்லை. ஆகாசவாணியின் ரேடியோ நிலையங்களுடன் ஏனைய நிலையங்களையும் ஏற்கக்கூடியக் கருவிகளையே வேண்டினார்கள்.

பஞ்சாயத்து வானொலி பராமரிப்பு நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களாவன :

(i) எல்லாப் பஞ்சாயத்துகளிலும் வானொலிக் கருவிகளை யமைத்து அவைகளைப் பராமரித்தல்.

(ii) சமுதாய வளர்ச்சி வட்டாரங்களில் இயங்கி வரும் ஸினிமா தளவாடங்கள், டேப் ரிகார்டர் முதலிய கருவிகளை பழுது பார்த்து இயக்கி வருவது.

இந்த நோக்கங்களில் தற்சமயம் முதல் ஸ்தானம் பெற்றிருப்பது எல்லாப் பஞ்சாயத்துகளிலும் வானொலிக் கருவிகளை நிறுவுதல் என்பதே. அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளான 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தினத்தில் முதலமைச்சர் திரு காமராஜ் அவர்கள் வானொலியில் ஒலிபரப்பும் உரையை பஞ்சாயத்து மக்கள் யாவரும் கேட்க வசதி பெறும் வகையில், அதற்குள் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் குறைந்தது ஒரு ரேடியோ கருவியாவது நிறுவப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் 180 ரூபாய் மான்யம் அளிக்கவும் முன்வந்திருக்கிறது. பஞ்சாயத்துகளில் நிறுவக்கூடிய வானொலிக் கருவிகளின் பட்டியலையும் மான்யம் பெறும் வழியையும் தனித்தனி உத்தரவுகளில் குறிப்பிட்டிருக்கிறது. ஏறக்குறைய எண்ணாயிரம் பஞ்சாயத்துக்களில் வானொலிக் கருவிகள் நிறுவப்பட வேண்டும்.

ஜூலை மாதக் கடைசியில் சுமார் 1,700 பஞ்சாயத்துகளில் இக்கருவிகள் நிறுவப்பட்டன. மேலும் 6,000-க்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்களில் அவை நிறுவப்பட வேண்டியிருக்கின்றன. காந்தியடிகளின் பிறந்த நாளுக்கு ஒரு சில வாரங்களே மிஞ்சியிருக்கின்றன. இந்த 6 000 பஞ்சாயத்துகளும் தமக்குத் தேவையான கருவிகளை உடனே வாங்கினால்தான் ரேடியோ சூபர்வைசர்கள் அவைகளை 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதிக்குள் நிறுவக்கூடும். உண்மையில் பஞ்சாயத்துகள் ரேடியோ கருவிகளை வாங்கின பிறகு தான், அவைகளை நிறுவும் பொறுப்பு ரேடியோ சூபர்வைசர்களுக்கு ஏற்படுகிறது. தமக்குப் பிரியப்பட்ட கருவிகளை பஞ்சாயத்துகள் பெற்று கோட்டாட்சியாளர் அலுவலகத்திலுள்ள ரேடியோ சூபர்வைசருக்குத் தெரியப்படுத்தினால், அவர் உடனே வந்து கருவிகளை அமைத்துக் கொடுப்பார்.

இந்த பெரிய ஏற்பாட்டின் வெற்றி பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் கையிலிருக்கிறது. பஞ்சாயத்துக்கள் ரேடியோ கருவிகளை வாங்க உதவவும் ரேடியோ சூபர்வைசர்கள் அவைகளை பஞ்சாயத்துகளில் நிறுவவும் நடுநாயகமாக இருப்பவர் யூனியன் ஆணையாளர். சிறிதே காலத்தில் ஆயிரக் கணக்கில் ரேடியோ கருவிகளை அமைக்க வேண்டிய பொறுப்பு ரேடியோ சூபர்வைசர்களுக்கு ஏற்பட்டிருக்கிறபடியால், கமிஷனர்கள் சூபர்வைசர்களுக்கு ஜீப்களைக் கொடுத்து உதவ வேண்டியது அவசியமாகிறது. பஞ்சாயத்துத் தலைவர்கள், யூனியன் கமிஷனர்கள், ரேடியோ சூபர்வைசர்கள் யாவரும் நல்ல முறையில் ஒத்துழைத்து 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதிக்குள் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் வானொலிக் கருவிகளை ஏற்பாடு செய்வதை நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாய உற்பத்தியில் மீன் அபிவிருத்தித் திட்டங்கள்

(1) இந்தத் திட்டத்தின் நோக்கம் ஒவ்வொரு வட்டார பிரதேசத்திற்கும் தேவையுள்ள மீன் குஞ்சுகளை தாங்களே உற்பத்தி செய்து பஞ்சாயத்திற்கு சொந்தமான உள்நாட்டு நீர் நிலையங்களில் விட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பது. மீன் உற்பத்தியை பெருக்குவதனால் பஞ்சாயத்துகளின் வருவாயை அதிகரிப்பதுடன் மக்களுக்கு நல்ல புஷ்டியுள்ள உணவு சத்தும் கிடைக்கும்.

வேலைத் திட்டம்

(2) இத் திட்டத்தில் ஒவ்வொரு வட்டார வளர்ச்சி பிரதேசத்திலும் "மீன் குஞ்சு வளர்ப்புக் குளங்கள்" நிறுவப்பட்டு நல்ல ரக மீன் முட்டைகள் குஞ்சுகளாகப் பொரிக்கப்பட்டு சுமார் 2" முதல் 4" வரை வளர்க்கப்படும். இந்நிலையில், இந்த மீன் குஞ்சுகள் பஞ்சாயத்தை சேர்ந்த பெரிய வளர்ப்புக் குளங்களுக்கு மாற்றப்படும். இம் மீன்கள் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுமுன், குறைந்தது ஒரு வருட காலமாவது குளங்களில் வளர்ச்சி பெறவேண்டும்.

(3) ஒவ்வொரு வட்டாரத்திலும் ரூபாய் 54,000 செலவில் 10 "மீன் குஞ்சு வளர்ப்புக் குளங்கள்" நிறுவப்படும். இந்த வளர்ப்புக் குளங்களில் செயற்கை முறையில் "பிட்யூட்டரி" சுரப்பு நீரின் உதவியால் இடப்பட்ட மீன் முட்டைகள் குஞ்சு பொரிக்கப்பட்டு, வளர்க்கப்படும். இதற்கு முக்கியமாக சினை மீன்கள் அதிகம் தேவை. இச்சினை மீன்கள் ஆரம்பத்தில் மீன் அளத் துறையினால் கொடுக்கப்படும். இச்சினை மீன்களை தனிக் குளங்களில் வைத்திருக்கவேண்டும். இதற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒன்று முதல் இரண்டு ஏக்கரா விஸ்தீரணமுள்ள இரண்டு குளங்கள் அவசியம் தேவைப்படும். கிராமங்களில் ஏற்கனவேயுள்ள குளங்களை சிறிது சீர்த்திருத்தம் செய்து இதற்காக உபயோகப்படுத்திக் கொள்ளலாம். தகுந்த குளங்கள் இல்லாத பஞ்சாயத்துக்களில் இச்சினை மீன்களை மீன் அளத்துறையைச் சார்ந்த குளங்களில் வைத்துக் கொள்ளப்படும்.

(4) "சிறு மீன் வளர்ப்புக் குளங்களில்" எப்பொழுதும் தண்ணீர் இருப்பது அவசியம். ஆகையால் ஏற்கனவே பஞ்சாயத்துக்களில் இருக்கும் வற்றுக் குளங்களை "மீன் குஞ்சு வளர்ப்பு குளங்களாக" மாற்றி அமைப்பது நல்லது. எங்கெங்கே இப்படி குளங்கள் இல்லையோ அங்கே தண்ணீர் அதிக வசதியுடன் கிடைக்கும் நீர்நிலைகளுக்கு அருகில் இந்த மீன் வளர்ப்புக் குளங்களை நிறுவுவது நல்லது.

(5) ஒவ்வொரு சினை மீன் வளர்ப்புக் குளத்திலும் 300 சினை மீன்களை விடலாம். இச்சினை மீன்களிலிருந்து ஒவ்வொரு வருடமும் சுமார் 10 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யலாம். ஒவ்வொரு வட்டார பிரதேசத்திலிருந்தும் சுமார் 20 லட்சம் மீன் குஞ்சுகள் கிடைக்கும். மீன் குளங்கள் வற்றாமலும், மீன் களவு போகாமலும் பாதுகாத்தால் ஒரு வருடத்தில் சுமார் 25 சத வீதம் விற்பனைக்குரிய மீன் பிடிக்கலாம். ஒவ்வொரு மீனும் ஒரு வருடத்தில் ஒரு ராத்தல் எடையுள்ள மீனாக வளரும். ஆகையால் ஒரு வட்டாரத்தைச் சேர்ந்த நீர் நிலைபங்களிலிருந்து வருடத்தில் சுமார் 5 லட்சம் ராத்தல மீன் எதிர்பார்க்கலாம். ஒரு ராத்தல் மீன் ரூ. 0·25 நயா பைசா வீதம் ஒவ்வொரு வட்டாரமும் ஒரு வருடத்தில் சுமார் ரூ. 1,25,000 எதிர்ப்பார்க்கலாம்.

அரசினர் உதவி

(6) (அ) **நிதி.**—ஒவ்வொரு வட்டாரத்திற்கும், ஐந்து வருடத்திற்கு மீன் உற்பத்திக்காக ரூ. 54,000 ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் அரசாங்கத்தின் சலுகைத் தொகை ரூ. 7,200 அளிக்கப்படும். பஞ்சாயத்தின் பங்கு ரூ. 3,600 ஆகும்.

(ஆ) **மீன் அளத் துறை உதவி.**—மீன் அளத்துறை பஞ்சாயத்து யூனியன்களுக்கு இந்த வளர்ப்புக் குளங்கள் நிறுவுவதற்கான இடங்கள் தேர்ந்தெடுப்பது, மீன் வளர்ப்புக் குளங்கள் "நிறுவுவதற்கான இடங்கள்" முதலியவைகளைக் கொடுத்து உதவும். தகுந்த குளங்கள் இல்லாத வட்டாரங்களில் சினை மீன்களை மீன் அளத்துறையை சார்ந்த குளங்களில் விட்டு பாதுகாக்கப்படும். செயற்கை முறையில் "பிட்யூடரி" சுரப்பு நீரின் உதவியால் முட்டையிடச் செய்வதை மீன் அளத்துறை மேற்பார்வையிடும். மீன் முட்டைகளையும் குஞ்சுகளையும், வளர்ப்புக் குளங்களுக்கு எடுத்துச் செல்வதோ, மீன் குஞ்சு வளர்ப்புக் குளங்களிலிருந்து மீன் குஞ்சுகளை உள்நாட்டு நீர் நிலைபங்களில் விடுவதோ பஞ்சாயத்தைச் சார்ந்தது. மீன் வளர்ப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நீர் நிலைபங்களின் தரத்தை ஆராய்ச்சி செய்து மீன் உற்பத்தியை பெருக்குவதற்கான யோசனைகளை மீன் அளத்துறை அவ்வப்போது கொடுத்து உதவும்.

(7) செயற்கை முறையில் "பிட்யூடரி" சுரப்பு நீரின் உதவியால், மீன் முட்டைகள் கிடைக்கும் வரை மீன் அளத்துறை மீன் குஞ்சுகளை விலைக்குக் கொடுத்து உதவும். வளர்ப்பு குளங்களின் பராமரிப்பு பஞ்சாயத்தை சார்ந்தது. செயற்கை முறையில் மீன் முட்டையிடச் செய்வதற்கு மீன் அளத்துறை உதவி செய்யும். இம் மீன் குளங்களை பாதுகாப்பதும் மீன் முட்டைகளை ஒரு குளத்திலிருந்து மற்ற இடங்களுக்கு மாற்றுவது பஞ்சாயத்தைச் சார்ந்தது.

[மீன் அளத்துறை நெறியாளர் அளித்த குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டவை.]

உணவும் ஊட்டச்சத்துக்களும்

[டாக்டர் வி. ஆர். சீனிவாசன், M.B.B.S., B.S.SC., D.P.H. (Cal.) பொது சுகாதாரத்துறை உதவி நெறியாளர், தமிழ்நாடு அரசாங்கம்.]

நாம் ஆரோக்கியமுடன் வாழுவதும் களைப்பெதுவுமின்றி நமது அன்றாட வேலைகளில் ஈடுபடுவதும் நாம் உண்ணும் உணவின் தரத்தைப் பொறுத்ததேயாகும் உணவின் "போஷாக்கு சத்து" அல்லது "ஊட்டச்சத்து" நம் அன்றாட உணவில் போதுமான அளவு இருந்தால் தான் நம் வாழ்வும் ஆரோக்கியமானதாக இருக்கும், "ஊட்டச்சத்து" போதுமான அளவு நமக்குக் கிடைக்கவில்லையென்றால், நாளாவட்டத்தில் நாம் பல்வேறு வியாதிகளால் பீடிக்கப்பட்டு சோர்வடைந்துவிடுவோம்.

உணவு நிர்ணயங்கள் தெரிவிக்கும் உண்மை

நமது கிராம மக்களின் அன்றாட உணவில் இந்த ஊட்டச்சத்து மிகவும் குறைந்த அளவில்தான் இருக்கிறது என்பது மாநில சுகாதார இலாகா நடத்திய உணவு நிர்ணயங்களின் மூலம் தெரியவருகிறது. நம்மில் பெரும்பாலோரின் உணவில் அரிசிதான் பெரும்பங்கு வகிக்கிறது ; போஷாக்குமிக்க கேழ்வரகு, கம்பு, சோளம் முதலிய தானிய வகைகள், பச்சைக் காய்கறிகள், கீரைகள், பால், மோர், எண்ணை ஆகியவற்றை நாம் தேவையான அளவு உட்கொள்வதில்லை.

ஊட்டச்சத்துக்களை பின்வரும் ஐந்து பிரிவுகளாக பகுத்துக்கூறலாம்

1. மாவுப்பொருள்.
2. கொழுப்பு அல்லது எண்ணைச்சத்து.
3. புரதச்சத்து.
4. தாதுப்பொருள் அல்லது நில உப்புச்சத்து.
5. வைட்டமின்கள் என்றழைக்கப்படும் உயிர்ச் சத்துக்கள்.

மாவுப்பொருளும் கொழுப்பு அல்லது எண்ணைப் பொருளும்

நம் உணவில் உள்ள மாவுப்பொருளும், கொழுப்புச் சத்தும் உடல் உழைப்புக்குத் தேவையான சக்தியையும் உஷ்ணத்தையும் நமக்களிக்கின்றன. அரிசி, கோதுமை, சர்க்கரை ஆகியவற்றில் மாவுப்பொருள் அதிகம் உள்ளது. நாம் பயன்படுத்தும் எண்ணெய், நெய், வெண்ணெய் ஆகியவை கொழுப்பு சத்தளிக்கும் உணவுப் பொருள்களாகும். "நமக்கு உழைபபுச் சக்தி கிடைக்க மாவுப் பொருள் அடங்கியுள்ள உணவுப் பொருள்கள் போதுமே கொழுப்பு சத்துள்ள உணவுப் பொருளை ஏன் சேர்த்துக்கொள்ளவேண்டும் ?" என்று நீங்கள் கேட்கலாம். ஒரு பவுண்டு எடையுள்ள மாவுப்பொருள் உணவு நமக்கு அளிக்கும் உழைப்புச் சக்தியைப்போல் $2\frac{1}{4}$ மடங்கு சக்தியை அதே 1 பவுண்டு எடையுள்ள கொழுப்புச் சத்துள்ள உணவுப்பொருள் நமக்கு அளிக்கின்றது. உடல் உழைப்பு அதிகம் உள்ள தொழிலாளர்களுக்கும், வளரும் குழந்தைகளுக்கும், பரிமானத்தில் குறைந்த ஆனால் உழைப்புச் சக்தி அதிகமுள்ள கொழுப்பு உணவு அன்றாடம் உணவில் இடம் பெறவேண்டியது அவசியம். கொழுப்பு அல்லது எண்ணைப் பொருள்கள் மூலமாகத்தான் சில வைடமின்கள் உடலுக்குள் செல்ல முடியும்.

புரதம் ஏன் வேண்டும் ?

மூன்றாவது ஊட்டச்சத்து புரதமாகும். உடலை நோய் நொடியினின்று காத்தல் புரதத்தின் முக்கியமான அம்சம். புரதச் சத்து அடங்கிய உணவின் மற்றொரு முக்கிய பணி உடலை வளர்ப்பதாகும். மற்றும, தேய்ந்து போன உடல் திசுக்களைப் பதுப்பிப்பதும், உடலின் பல்வேறு உறுப்புகளும் முறையாக இயங்க உதவுதலும். புரதச் சத்தின் பணியாகும். பருப்புகள், பால், இறைச்சி, மீன், முட்டை ஆகியவற்றில் புரதச்சத்து ஏராளமாக இருக்கிறது.

தாதுப்பொருளும் வைட்டமின்களும்

நோய்நொடிகளிலிருந்து உடலைப் பாதுகாக்கும் சக்தி அளிக்கவல்ல தாதுப் பொருள்கள், வைட்டமின்கள் அடங்கிய உணவுப்பொருள்கள் யாவை என்பதைப் பார்ப்போம். பச்சைக் காய்கறிகள், கீரைகள், பழங்கள், பால், முட்டை ஆகியவற்றில் இச்சத்துகள் நிறைந்துள்ளன. குறிப்பாக கர்ப்பிணிகளுக்கும், குழந்தைகளுக்கும் இச்சத்துகள் நிறைந்த உணவுப்பொருள்கள் தொடர்ந்து தரப்படவேண்டும்.

வைட்டமின் "ஏ"

பச்சைக் காய்கறிகள், வெண்ணெய், பழங்கள், பால், ஆட்டுஈரல், மீன் ஈரல் முதலியவற்றில் வைட்டமின் "ஏ" சத்து ஏராளமாக உள்ளது. கண் பார்வை சரியாக இருப்பதற்கும். எலும்பு, பற்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும், சருமத்திலும் வாய் மூக்கு ஆக்யவற்றின் உட்புறம் படர்ந்து இருக்கும் மெல்லிய தோலிலும் உள்ள திசுக்களின் பாதுகாப்புக்கும் இந்த வைட்டமின் 'ஏ' சத்து

உதவுகிறது. இது நம் உணவில் போதுமான அளவு இல்லாவிட்டால் நமக்கு "மாலைக்கண்" வரலாம். நாம் பசிக்குறைவு, வளர்ச்சிக் குறைவு, சருமவரட்சி ஆகிய உடற்கோளாறுகளுக்கும் உள்ளாக நேரிடும். வைடமின் "ஏ" குறைவு காரணமாக நோய்வாய்ப்படும் பட்சத்தில் "ஷார்க் லிவர் ஆயில்" "காட்லிவர் ஆயில்" என்றழைக்கப்படும் மீன் எண்ணெயை முறையாகச் சாப்பிட்டு குணம் பெறலாம்.

வைட்டமின் "பி"

வைட்டமின் "பி" 12 வித உயிர்ச்சத்தக்கள் கொண்ட ஓர் தொகுதியாகும். கைக்குத்தலரிசி, ஈரல், பால் ஆட்டிறைச்சி, காடி, பச்சைக்காய்கறிகள், ஆகியவற்றில் இச் சத்து அதிகமுள்ளது.

வைட்டமின் "சி"

கொய்யாப்பழம், நெல்லிக்காய், ஆரஞ்சு, பச்சைக்காய் கறிகள், பழங்கள் ஆகியவற்றில் வைடமின் "சி" ஏராள மாக இருக்கிறது. பற்கள், எலும்பு ஆகியவற்றின் வளர்ச் சிக்கும் உறுதிக்கும், இரத்தத்தின் செழுமைக்கும் இந்த வைட்டமின் 'சி' அவசியமானது. வைடமின் 'சி' சததுள்ள உணவை போதுமான அளவு உட்கொள்ளாவிட்டால் நமக்கேற்படும் வெட்டுக்காயங்களும், சிராய்ப்புகளும், புண் களும் எளிதில் ஆறுவதில்லை. பல் ஈறுகள் மிருதுவாகி ரத்தம் கசியலாம. உடலில் போதுமான நோய்ப்பாது காப்புச் சகதி இருக்காது.

வைட்டமின் "டி"

வைட்டமின் "டி" யை நமது உணவிலிருந்தோ அல்லது சூரியவெளிச்சத்திலிருந்தோ நாம் கிரகித்துக் கொள்ளலாம். வெயிலில நெடுநேரம் இருக்கும் நம்போன்றவர்கட்கு இந்த வைடமின் கிடைப்பதில் சிரமமெதுவுமில்லை.

தாதுப்பொருள்களின் பணி.—கால்ஷியம் எனப்படும் சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ் சத்து, அயச்சத்து, தாமிரச்சத்து அயோடியன் சத்து ஆகிய பல்வேறு நில உப்புச் சத்துக்களும் நம் உடல் முறையாக வளரவும் திறம்பட இயங்கவும், நோய் நொடிகளிலிருந்து நம்மைப் பாதுகாக்கவும் உதவுகின்றன. பச்சைக்காய்கறிகளிலும், கீரைகளிலும், பாலிலும் இச் சத்துக்கள் நிறைய உள்ளன.

ஊட்டச் சத்துக்கள் நிரம்பிய உணவே பூரண உணவு

எனவே, நமது உணவு நமக்குத் தேவைப்படும் சகல சக்திகளையும் அளிக்கவேண்டுமென்றால் இதுவரை கூறப் பட்ட சகலவிதமான ஊட்டச்சத்துக்களும் நிரம்பியதொன் றாக பூரண உணவாக இருக்கவேண்டியதவசியமாகிறது. நோய் நொடியில்லாமல் வாழவும் தேவையான உடல் உஷ்ணத்தையும் உழைப்புச்சக்தியையும் பெறவும் இவ்வித பூரண உணவையே நாம் உட்கொள்ளவேண்டும். ஊட்டச் சத்து இல்லாத உணவு அளவில் எவ்வளவு அதிகமாக இருந்தாலும், நமது பசி அடங்குமே தவிர, நாம் நாள வட்டத்தில் நோய்வாய்ப்பட நேரிடலாம்.

எளிய உணவும் ஊட்டமுடையதாக இருக்க முடியும்

ஏழை நடுத்தர மக்கள் பணச்செலவுக்கிடமளிக்கும் பாலுக்கும், பழத்துக்கும், முட்டை, ரொட்டி, வெண்ணெய் ஆகியவற்றுக்கும் எங்கே போவது என்பது நியாயமான கேள்வியே. நம் நாட்டிலுள்ள சாதாரண மனிதர் யாரும் தம் உணவு வகைக்கு கணிசமாக செலவிடமுடியாது தான். ஆனால், இவ்விதம் செலவு அதிகம் ஏற்படுத்தும் உணவு தான் சிறந்த உணவு என்று கூறுவதற்கில்லை, நமக்குகந்த முறையில் நம்முடைய எளிய உணவையும் ஊட்டமுடையதாக செய்து கொள்ள எவ்வளவோ உபாயங்கள் உள்ளன.

சத்து நிறைந்த கைக்குத்தலரிசி

நமது அன்றாட உணவையே எடுத்துக் கொள்வோமே. உதாரணமாக கைக்குத்தலரிசி, மிஷினில் அரைக்கப்பட்ட அரிசியைக்காட்டிலும் சத்துள்ளது என்று நம்மில் பலபேருக்கு நன்றாகத் தெரியும். நெல்லை மிஷினில் கொடுத்து அரைக்கும் பொழுது உமிக்கும் சற்றுக் கீழ் அரிசியின் மேற்புரத்தில் உள்ள சத்தான பாகமும் அரிசியின் முளைக்கும் பாகம் உள்ள முளைப்பகுதியும் அகற்றப்பட்டுவிடுகிறது. இதனால் நமக்கு கிடைக்க வேண்டிய வைட்டமின் "பி" சத்தை இழந்து விடுகிறோம். கைக் குத்தல் அரிசியில் சத்துள்ள பகுதி போகாமல் அப்படியே முழுமையாக இருக்கிறது. இது தெரிந்திருந்தும் நம்மில் பலர் மிஷினில் கொடுத்து பாலிஷ் செய்த அரிசியைத் தானே பயன்படுத்துகிறோம்? இந்த வழக்கத்தை மாற்றி கைக்குத்தல் அரிசியை மட்டுமே பயன்படுத்துவது என்று முடிவு செய்து கொண்டால் நமக்கு சத்துள்ள உணவும் கிடைக்கும், மருந்து வாங்கும் செலவும் மிச்சம். பெரும்பாலான மக்களுக்கு இந்த வைட்டமின் "பி" சத்தின் குறைவு காரணமாகத்தான் உடம்பில் ஒரு விதமான ஒய்ச்சல், பலஹீனம், உற்சாகமின்மை உண்டாகிறது.

புன்செய் தானியங்கள் சத்துள்ளவை, மலிவானவை

நமது உணவில் ஒரு வேளைக்கு அரிசியையும் மற்றொரு வேளைக்கு அரிசி அல்லாத இதர தானியங்களான கம்பு, கேழ்வரகு, சோளம் முதலிய தானிய வகைகள் ஒன்றையும் பயன்படுத்திக்கொள்வது உத்தமமான காரியம். இத்தானியங்கள் அரிசியைக் காட்டிலும் சற்று மலிவானவை. அதே சமயம் அரிசியைக்காட்டிலும் ஊட்டசக்தி அதிகம் தரக்கூடியவை.

சாதத்திலிருந்து கஞ்சியை வடிக்க வேண்டாம்

நாம் நமது சமையல் முறையில் ஒரு தேவையற்ற வழக்கத்தையும் கையாளுகிறோம் சாதத்திலிருந்து கஞ்சியை வடித்துவிடும் பழக்கத்தையே இங்கு

குறிப்பிடுகிறேன். மிஷின் அரிசியில் இருக்கும் குறைவான சத்தும் வடித்த கஞ்சியுடன் வெளியேறிவிடுகிறது. தண்ணீரைக் குறைந்த அளவில் உபயோகித்து பொங்கலாகவே சாதத்தைச் சமைத்துக் கொள்வது நன்மை பயக்கும் காரியமாகும். பலமுறை அரிசியை சமைப்பதற்கு முன் தண்ணீரில் போட்டு களைகிறோம். இதனால் அரிசியின் "பி" சத்து களைந்த நீரில் கலந்து வீணாக வெளியே போகிறது. அரிசியைக் களையாமல் உபயோகித்தால் எவ்வளவு வைட்டமின் "பி" சத்து நமக்குக் கிடைக்கும்?

வேர்க்கடலையும் வாதுமைப்பருப்பும்

வாதுமைப்பருப்பில் உடம்பின் வளர்ச்சிக்குத் தேவையான சத்து நிரம்ப இருக்கிறது. வசதியுள்ளவர்கள் மட்டுமே அதை வாங்கி உபயோகித்துக் கொள்ளமுடியும். ஆனால் வேர்க்கடலைப் பருப்பிலும் அதே அளவு சத்து இருக்கிறது என்று நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? விலையும் கொள்ளை மலிவு. நாம் யாவரும் அதை அவ்வப்பொழுது வாங்கி உட்கொண்டு பயன்பெறுவதில் கஷ்டமொன்றுமில்லையே?

ஊட்டச் சத்துக்கள் நிரம்பியது முட்டை

முட்டையும் சகல ஊட்டச்சத்துக்களும் நிரம்பிய உணவுப் பொருள். நகரங்களில் தற்சமயம முட்டை ஒன்று மூன்று அணாவுக்கு விற்கப்படுகிறது. நகரங்களில் வீட்டு வசதிக் குறைவை முன்னிட்டு கோழி வளர்ப்பு என்பது இயலாத காரியமாகிவிட்டது. கிராமப்புறங்களிலிருந்து வரும் முட்டைகளை நகரமக்கள் வாங்கிப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் கிராமப்புற மக்களின் நிலை என்ன? கோழி வளர்ப்புக்குப் போதிய இடவசதியிருந்தும் பெரும்பாலான மக்கள் அதற்காக அதிக அக்கரை எடுத்துக் கொள்வதில்லை. வளர்க்கும் பெரும்பாலோரும் முட்டைகளை விற்றுவிடுகிறார்கள். கோழி முட்டைகளை பிறருக்கு விற்க வேண்டாம் என்று கூறவில்லை. தேவைக்கு மிஞ்சியதை மட்டும் விற்கலாமே என்றுதான் கூற ஆசைப்படுகிறேன்.

புழக்கடைத் தோட்டம்

பச்சைக் காய்கறிகளில் ஏராளமான உயிர்ச்சத்துகளும் நில உப்புச் சத்துக்களும் உள்ளன. சாதாரணமாக கிராமங்களில் வீடுகளின் கழிவ நீர் அந்தந்த வீட்டின் பின்புறம் வீணே தேங்கிக்கிடந்து கொசு விருத்திக்குக் காரணமாக இருப்பதைக் காண்கிறோம். வீட்டின் புழக்கடையில் ஓர் காய்கறித் தோட்டம் போடுவதன் மூலம் இத் தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ளலாம். நமக்கு அன்றாடம் தேவைப்படும் காய்கறிகளை செலவில்லாமலும், புதிய நிலையிலும் பெற இது ஒரு நல்ல ஏற்பாடாகும். குறிப்பாக கீரைகளை இவ்விதம் வளர்ப்பது எளிது.

பயனுள்ள பழைய வழக்கங்கள்

(a) **நாட்டுச் சர்க்கரை.**—சில விஷயங்களில் நமது முன்னோரின் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து வருவது நமக்குப் பெரும் நன்மையளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக அஸ்கா என்றழைக்கப்படும் ஆலைச் சர்க்கரையைக் காட்டிலும், சுத்திகரிக்கப்படாத நாட்டுச் சர்க்கரை எவ்வளவோ சத்துள்ளது, மலிவானது. பண்டிகை நாட்களில் நம் வீடுகளில் சீனிக்குப் பதிலாக வெல்லத்தையே தாய்மார்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது தெரிந்ததே. கோவில்களிலும் பஞ்சாமிர்தம் சர்க்கரைப் பொங்கல் ஆகிய பிரசாதங்களுக்கும் நாட்டுச் சர்க்கரைதான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாமும் எப்பொழுதெல்லாம் சாத்தியமோ, அப்பொழுதெல்லாம் சீனிக்குப் பதிலாக நாட்டுச் சர்க்கரையையே பயன்படுத்தி வரவேண்டும்.

(b) **பான வகைகள்.**—முன்பெல்லாம் கிராமங்களுக்குப் போனால் பால், மோர், இளநீர், ஆகிய ஏதேனுமொரு பானத்தைக் கொடுத்து உபசரிப்பார்கள். பாலின் ஊட்டச்சத்து பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. சுலபமாக உடலில் சேரத்தக்க ஊட்டச் சத்துக்கள் மோரில் உள்ளன. இளநீர் எவ்விதத்திலும் அசுத்தமுறாத களங்கமற்ற திரவம். இதில் பிரமாதமான ஊட்டச் சத்துக்கள் இல்லாவிட்டாலும் குடிப்பதற்கு சிறந்ததாக உள்ளது. இப்பொழுதோவெனில், காபபி, தேயிலை முதலியவை மோர். இளநீர் ஆகியவற்றின் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டன. மலிவான மோரையும் இளநீரையும் மீண்டும் பயன்படுத்தத் தொடங்குவதில் சிரமம் அதிகமிருக்காது என்று நம்புகிறேன.

தினம் ஒரு பழம்

நம் உணவு பூரண உணவாக இருக்க அன்றாடம் ஏதேனும் ஒரு பழத்தை உட்கொள்ளவேண்டும். அது ஆப்பிள் அல்லது ஆரஞ்சுப் பழமாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. வாழைப்பழம், கொய்யாப்பழம், பப்பாளி முதலியவை மலிவானவை. நம் உணவில் இவைகளிலேதானுமொன்றை அடிக்கடி சேர்த்துக் கொள்ளலாம்.

வைட்டமின் "சி" நிறைந்த நெல்லிக்காய்

பிணி, மூப்பு, ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கும் அரியதொரு நெல்லிக்கனியை தான் உண்ணாது அவ்வைக்கு அளித்து மகிழ்ந்தானும் அதியமான் என்ற மன்னன். அந்த சம்பவம் உண்மையோ, பொய்யோ, நெல்லிக்காயில் என்னவோ ஏராளமான வைட்டமின் "சி" சத்து இருக்கிறது. நெல்லிக்காய் மலிவாகக் கிடைக்கும் நாட்களில் அதை வாங்கி ஊறுகாய் தயாரித்து வைத்துக் கொண்டு நமக்குத் தேவையான வைட்டமின் "சி" தேவையை அவ்வப்பொழுது பூர்த்தி செய்து கொண்டு விடலாம்.

சமையலில் ஊட்டச் சத்துக்கள் வீணாகாதிருக்க வழிகள்

அதிகக் காசு கொடுத்து உணவுப்பொருள்களை வாங்கும் நாம் சமையலிலும் சற்று கவனத்துடன் நடந்துக் கொண்டோமானால், ஊட்டச் சத்துக்கள் சமையலில்

(22-ம் பக்கம் பார்க்க)

'குஜரத்' மாநிலத்தில் பஞ்சாயத்து ஆட்சி

['அதிகாரப் பரவல் முறை' என்ற அடிப்படையில், கிராமப்புறங்களில் உள்ள மக்களும் நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலும், திட்ட வேலைகளிலும் நேரடிப் பங்கு கொள்ள வேண்டும் என்பதற்காக புதிய பஞ்சாயத்து ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. தேசப் பிதா காந்தியடிகள் கண்ட 'கிராம ராஜ்ய'க் கனவு பாரத நாடெங்கும் நனவாகிக்கொண்டு வருகிறது. குஜரத் மாநிலத்தில் பஞ்சாயத்து ஆட்சி நடைபெறும் முறைகள் பற்றி, இக் கட்டுரையில் சுருக்கமாகக் காணலாம்.]

குஜராத் மாநிலத்திற்கு, இந்திய வரலாற்றில் ஒரு தனியிடம் உண்டு. அதாவது, காந்தியடிகளின் சொந்த மாநிலமாக விளங்கி, அவர் நடத்திய விடுதலைப் போராட்டங்கள் பலவற்றுக்கு நிலைக்களமாய் அமைந்த பெருமை அந்த மாநிலத்திற்கு உண்டு. காந்திய வழிகளில் நம்பிக்கை கொண்ட சமூகத் தொண்டர்கள் பலர் இன்றும் அங்கே நாட்டின் சுபீட்சத்திற்காகப் பாடுபட்டு வருகின்றனர். பஞ்சாயத்து ஆட்சி–அதாவது கிராம சுயாட்சியாக விளங்க வேண்டும் என்ற காந்தியடிகள் கொள்கை இந்தியா எங்கணும் செயல்படுத்தப்படுவதைப் போன்றே, அவர் பிறந்து வளர்ந்த மாநிலத்திலும் செயல்பட்டு வருகின்றது.

பஞ்சாயத்து ஆட்சி வேரூன்றி விட்டது

கிராமப் பஞ்சாயத்துக்கள் குஜரத் மாநிலத்தில் நன்கு வேரூன்றியுள்ளது. அவற்றின் அமைப்பு அசைக்க முடியாதது. அவற்றின் வருவாயும் உறுதியானது. பஞ்சாயத்துத் தேர்தல்களில் பல இடங்களில் போட்டியின்றித் தேர்ந்தெடுத்தலையே காண முடிகிறது. பொது மக்களும், அதிகாரிகளும் அத்தகைய போட்டியற்ற தேர்தலையே விரும்புகின்றனர். சமுதாய அபிவிருத்தித் திட்டமும் பொதுவாக அந்த மாநிலத்தில் உற்சாகமான வரவேற்பையே பெற்றுள்ளது. மாநில முழுதும் கிராம அபிவிருத்தி வேலைகளும், பஞ்சாயத்து அமைப்புக்களும் சிறந்து விளங்குகின்றன. உதாரணமாக ராஜ்கோட் கோட்டத்தைச் சேர்ந்த விர்ப்பூர் பஞ்சாயத்து (Virpur Panchayat) என்கின்ற சிறிய பஞ்சாயத்துக்கு, அரசாங்க மானியங்களில்லாமல், கடைகளுக்கு வரி போடுதல், வாகன வரி வசூலித்தல், பஞ்சாயத்துக் குப்பைகளை விற்றல் முதலானவற்றால் ஓராண்டுக்கு ரூ. 17,000 வருமானம் வருகிறது. மன்னராளுகையில் இருந்து வந்த சமஸ்தானப் பகுதிகளில் உள்ள கிராமங்கள் பல அபிவிருத்தித் திட்டங்களை சிறந்த முறையில் நிறைவேற்றி உள்ளதைக் காண முடிகின்றது. பரோடா, கொண்டால், பவநகர் முதலிய சமஸ்தானங்களில் பஞ்சாயத்து அபிவிருத்தியும் கிராமப் புறங்களில் க்ஷேம நல வேலைகளும் நன்கு நடைபெற்றுள்ளன.

அந்த ஊர் பஞ்சாயத்து அலுவலக வானொலிப் பெட்டி, தொலைபேசி (Telephone), காட்ரிஜ் அலமாரிகள், சுவர் கடிகாரம் முதலானவற்றோடும், தேவையான மேஜை நாற்காலிகள் கருவிகளுடன் விளங்குகிறது.

அந்த அலுவலகத்தில் உள்ள பொருள்களின் மதிப்பு மட்டும் ரூ. 3000–க்குமேல் ஆகிறது. அந்தப் பஞ்சாயத்தில் சுமார் 18 பணியாளர்கள் வேலை செய்கின்றனர். அவர்களுக்கு சம்பளமாக மாதம் 800 ரூபாய் வரை அந்தப் பஞ்சாயத்து வழங்குகின்றது.

இந்த மாநிலத்தில் பஞ்சாயத்துக்கள் தீண்டாமை, குடி முதலான தீய பழக்கங்களை சமுதாயத்திலிருந்து ஒழிப்பதைத் தங்களுடைய கடமைகளில் ஒன்றாகக்கொண்டு பணிபுரிகின்றன. மேலும், அரிஜனங்கள் பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கான பணிகள் பலவற்றை அவை மேற்கொள்கின்றன. அவர்களுடைய பொருளாதார நிலையும் பொதுவாக, திருப்திகரமான நிலையிலேயே இருந்து வருகின்றது. அங்கே ஒரு சில இடங்களில் தோல் பதனிடக் கொட்டகைகளைப் போட்டுக் கொடுக்க பஞ்சாயத்து முடிவு செய்துள்ளது.

அபிவிருத்தி வேலைகளும் நலப் பணிகளும் சமஸ்தானப் பிரதேசங்களில் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டு வருவதைக் காண முடிகிறது. உதாரணமாக, பரோடா பகுதியில் கல்வி வசதிகள், பள்ளிக் கட்டடங்கள், நூல் நிலையங்கள் மருந்தகங்கள் அநேக கிராமங்களில் எற்கெனவே எற்படுத்தப்பட்டுள்ளன. கொண்டால் போன்ற சிறிய சமஸ்தானத்திலும், இணைப்புப் பாதைகள், தொலைபேசி இணைப்புக்கள், பள்ளிகள் ஒவ்வொரு கிராமத்திலும் விளங்குகின்றன. இந்தக் கிராமங்களிலெல்லாம் சமுதாய அபிவிருத்தித் திட்டம் அமுலுக்கு வரு முன்னரே, தமக்குத் தாமே உதவி செய்துகொள்ளும் திட்டம் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. இந்தக் கிராமங்களில், இணைப்புப் பாதைகள் அமைத்தல், தெருக்களை ஒழுங்குபடுத்துதல், தெரு விளக்கு அமைத்தல், குழாய்கள் மூலம் பருகுநீர் வழங்குதல், பள்ளிகள், பால்வாடி (பாலர் நிலையங்கள்) நூல் நிலையங்கள், மருந்தகங்கள், பொது மருந்து தெளிக்கும் கருவி, எங்கும் செல்லத்தக்க தீயணைக்கும் யந்திரம் முதலியன அமைக்கப்பட்டுள்ளன. விவசாயத் துறையில் ரசாயன எருக்களை அதிக அளவில் பயன்படுத்துதல், பொறுக்கு விதைகளைப் பயன்படுத்துதல் முதலியன அமுலாக்கப்படுவதால் 50 சத வீத அளவு அபிவிருத்தி அடைந்துள்ளது. எனினும், விவசாயத்தைத் தீவிரமான முறையில் நிறைவேற்ற நீர்ப்பாசன வசதிகள் இன்னும் செய்யவேண்டியுள்ளது.

குஜராத் மாநிலத்துக் கிராமங்களில், பஞ்சாயத்துக்கள் மட்டுமின்றி தனிப்பட்டவர்களால் அமைக்கப்பட்டு, பொதுப் பணிகளில் ஈடுபட்டு ஆக்க வேலைகள் பல செய்து வரும். பல டிரஸ்டுகள் (தருமகர்த்தா சபைகள்) விளங்குகின்றன. அந்த சபைகள் செல்வர்களாக உள்ள வாணிகர்கள் அளிக்கும் நன்கொடைகளை வைத்துக்கொண்டு, கிராமப் புறங்களுக்கு, வேண்டிய பல வசதிகள் செய்து வருகின்றன. பருகு நீர் வழங்கு திட்டங்களை நடத்தவும், உயர் நிலைப் பள்ளிகளையும், ஆரம்பப் பள்ளிகளையும் கட்டவும் பால மந்திர்களையும், மருந்தகங்களை அமைக்கவும், இந்தப் பொது, ஸ்தாபனங்கள் பொருளுதவி செய்வதுடன் அவையே பலவற்றை ஏற்று நடத்தி வருகின்றன. கிராம அபிவிருத்தி வேலைகள் பலவற்றுக்கு இந்த டிரஸ்டுகள், பஞ்சாயத்துக்களுக்கு உதவி மானியங்களையும் அளித்து வருகின்றன. இந்த டிரஸ்டுகள் இந்த மாநிலத்துக்கு கிராம வளர்ச்சியில் சிறந்த இடத்தைப் பெறுகின்றன.

தந்நலங் கருதாத் தொண்டர் படை

பொதுவாக, குஜராத் கிராமப் புறங்களில், ஒவ்வொரு ஊரிலும், கிராம முன்னேற்றத்துக்கு உற்சாகமாக உழைக்கக்கூடிய தொண்டர்கள் பலரைக் காண முடிகிறது. இதுவும் இந்த மாநிலத்தின் சிறந்த அம்சங்களுள் ஒன்றாகும்.

குறிப்பாக, ரெவினியூ அதிகாரிகள், அபிவிருத்தித் துறை அதிகாரிகள், பொது ஜனங்கள் ஆகியோரிடையே நல்ல ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் வளர்ந்துள்ளதை இந்த மாநிலத்தில் க்காண முடிகின்றது.

குஜராத் மாநிலத்து அபிவிருத்தி வேலைகள் விறுவிறுப்பாக நடைபெறுவதற்கும், பொது மக்களுக்கும், அபிவிருத்தித் துறை அதிகாரிகளுக்கும் இடையே பரஸ்பர ஒத்துழைப்பும், நல்லெண்ணமும், சகோதர பாவமும் நிலவுவதற்கும் அடிப்படையான காரணம், பஞ்சாயத்து அபிவிருத்தித் துறைகளுக்கு அதிகாரிகளை மாநில அரசாங்கம் பிரதேச சமூகத்தொண்டர்களிடையே யிருந்தே தேர்ந்தெடுப்பதே. பல அதிகாரிகள் சமூகத் தொண்டர்களாக இருந்தவர்களாகவே காணப்படுகின்றனர். மாநில அபிவிருத்திக் கமிஷனரும் அத்தகைய சமூகத் தொண்டராக இருந்து, அந்தப் பதவிக்கு வந்தவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய முறையினால், அதிகாரிகள்-பொதுமக்சள் தொடர்பு நல்ல முறையில் இருப்பதுடன், அதிகாரிகள் கிராமப்புறப் பிரச்சினைகளையும், தேவைகளையும் நன்கு அறிந்தவர்களாக விளங்குகிறார்கள். இந்த விஷயத்தில் குஜராத் மாநில அரசாங்கம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது எனலாம்.

[ஜூலை மாத "பஞ்சாயத்து ராஜ்" இதழில் வெளிவந்துள்ள கட்டுரை ஒன்றின் தமிழாக்கம்.]

[Reproduced from "Panchayati Raj"—July, 1962.]

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

வீணாகாதவாறு பார்த்துக் கொள்ளலாம். அதற்கான வழிகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

கீரைகள், காய்கறிகள் ஆகியவற்றை கழுவிய பின்பு நறுக்கிக்கொள்ளவேண்டுமே தவிர நறுக்கியபின் கழுவக் கூடாது.

கூடுமானவரை பெரிய துண்டுகளாகவே காய்கறிகள் நறுக்கப்படவேண்டும்.

தண்ணீர் நன்றாகக் கொதி வந்த பின்பே காய்கறித் துண்டுகளை சட்டியினுள் ஒவ்வொன்றாகப் போடவேண்டும்.

சோடா உப்பு போட்டு உணவுப் பண்டங்களை சீக்கிரமாக வேகவைப்பது மிக்க கெடுதலான பழக்கம். ஏனென்றால் அந்த உப்பு வைட்டமின்களை விரைவில் நாசமாக்கி விடுகிறது.

காய்கறிகள் வேகவைக்கப் பயன்படுத்திய தண்ணீரைக் கீழே கொட்டிவிடாது, ரசம், குழம்பு ஆகியவற்றில் சேர்த்து உபயோகித்துக் கொள்ளவேண்டும்.

பச்சையாகவே உட்கொள்ளத்தக்க காரட்டுகள்; வெள்ளரிக்காய், கொத்துமல்லி, தக்காளிப்பழம் ஆகியவற்றை அவ்வப்பொழுது பச்சையாகவே உட்கொள்வதன் மூலம் நமக்குத் தேவையான வைட்டமின் "சி" சத்தைப் பெறமுடியும். பருப்புக்கள் முளையுண்டாகும்படி ஊற வைத்துப்பின் உபயோகித்தால் விடமின் "சி" சத்து தானாகவே கிடைக்கும்.

இது அனைவராலும் முடியும்

இதுவரை கூறப்பட்ட எளிய உபாயங்கள் பலவற்றைக் கடைப்பிடித்து யாவரும் அவரவர் வருமானத்துக்குகந்த முறையில் அன்றாட உணவை ஊட்டச் சத்துடையதாகச் செய்துகொள்ளமுடியும்.

"வரப்புயர" என்று மன்னனொருவனை வாழ்த்தினார் தமிழ் மூதாட்டி அவ்வை.

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான்"

என்று தம் வாழ்த்துக்கு விளக்கமும் கூறினார். அந்த முறையில் கூறுகிறோம், "உணவின் தரம் உயர்க" என்று—உணவின் தரம் உயர, மக்களின் நலமும் பெருகும் என்ற உண்மையின் அடிப்படையில்.

[வானொலிப் பேச்சு]

நெய்வேலி அனல் மின்சார நிலையம் — துவக்க விழா..........





படம் 2: நெய்வேலி அனல் மின்சார நிலையத்தை, 1962 ஆகஸ்டு 5ல், ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்.

படம் 1: அனல் மின்சார நிலையத்தின் தோற்றம்.

படம் 3: ஜனாதிபதி மின்சார உற்பத்தி நிலையத்தைச் சுற்றிப் பார்க்கிறார்.

படம் 4—5: நிலக்கரி தோண்டி எடுக்கும் வேலையை ஜனாதிபதி கூர்மையாகக் கவனிக்கிறார். அவருடன், முதலமைச்சர் திரு காமராஜ், மத்திய அரசாங்க கனரகத் தொழில் அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் ஆகியோரும் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

[தமிழ்நாட்டை தொழில் மயமாக்கும் துறையில இந்த அனல் மின்சார நிலையத்தின் பங்கு மிகவும் சிறப்புடையதாக அமையும் எனலாம். சுமார் 10,000 கிராமங்களுக்குத் தேவையான மின்சார சக்தி நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படும்.]

மாநில குடும்பக் கட்டுப்பாடு மகாநாடு



தமிழ்நாட்டில் முதன் முதலாக மாநில குடும்பக் கட்டுப்பாடு மகாநாடு
சென்னையில் 1962 ஆகஸ்டு 21, 22, 23 தேதிகளில் நடைபெற்றது

1. மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு போர்டின் கூட்டம்.

2. மகாநாட்டில் தமிழ்நாடு அரசாங்க தலைமைக் காரியதரிசி திரு ஆர். ஏ. கோபாலசாமி ஐ.ஸி.எஸ். பேசுகிறார்.

3. திரளாகக் குழுமியிருந்த பிரதிநிதிகள்.

4. மாவட்டத் தொகுதி கூட்டங்கள்.

5. வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் பஞ்சாயத்து யூனியனின் சார்பாக, குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டத்தைச் சிறப்பாக நடத்தி வைத்ததற்கான பரிசினை, டாக்டர் திருமதி எம்.ஜி. ரெட்டி, தலைமைக் காரியதரிசியிடமிருந்து பெறுகிறார்.

6. மகாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள்.

7. பெரிய நாயக்கன் பாளையம் பஞ்சாயத்து யூனியன் மன்றப் பெருந்தலைவர் திரு கே. துரைசாமி பரிசினைப் பெறுகிறார்.

8. மத்திய அரசாங்க சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் சுசிலா நய்யார், பெண் பிரதிநிதிகளுடன்,

9. பிரதிநிதிகள் தேனீர் விருந்தொன்றில் கலந்துகொண்டார்கள்.

10. மகாநாட்டை ஒட்டி, பாலர் அரங்கில் நடைபெற்ற கலை நிகழ்ச்சி

வானொலி மூலம் அறிவொளி பரப்பும் திட்டம்

1

2



3

படம் 1: சுதந்திர தின விழாவன்று, பூந்தமல்லி பஞ்சாயத்து யூனியனின் சார்பாக, நிதி அமைச்சர் திரு பக்தவத்ஸலம், பிரமுகர் ஒருவர் அளித்த ரேடியோ செட்டினைப் பெறுகிறார்.

படம் 2 ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த வளர்புரம் கிராம வானொலி மன்றம், தலைவர் திரு செல்லப்பா தலைமையில் கூடியது.

படம் 3: பரங்கிமலை பஞ்சாயத்து யூனியன், மீனம்பாக்கம் கிராம வானொலி மன்றத்தின் துவக்க விழா 24-7-62ல் நடைபெற்றது.

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

(திரு ஏ. கந்தசாமி நாயனுர், காவேரிப்பட்டணம் பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்.)

[" சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள் " என்னும் தொடரில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த அரசம்பட்டி பஞ்சாயத்தின் ஆக்கப்பணிகளையும், அற்புதச் சாதனைகளையும் அழகாக எடுத்துக் கூறுகிறது இக் கட்டுரை—ஆசிரியர்.]

சேலம் மாவட்டத்தைச் சார்ந்த காவேரிப்பட்டணம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள 42 நகர கிராமப் பஞ்சாயத்துக்களில் அரசம்பட்டி கிராமப் பஞ்சாயத்து ஒன்ருகும். இதன் ஜனத்தொகை 3,646 ஆகும். இதில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை 423. இந்த கிராமம் புண்ணிய நதியாம் தென்பெண்ணை ஆற்றின் கிழக்கு கரையில் மூன்று புறமும் மாஞ்சோலைகளாலும் தென்னஞ் சோலைகளாலும் சூழப்பெற்று நடுவில் பார்ப்போர் கண்கவர் அழகினைக் கொண்ட சிற்றூராக விளங்குகிறது. 1939-ம் ஆண்டில் இந்த கிராமத்தில் பஞ்சாயத்து முதன் முதல் நிறுவப்பட்டது. இப் பஞ்சாயத்தின் ஆட்சி எல்லை பெண்ரஹள்ளி ரெவினியூ கிராமம் முழுமையும் ஆகும். அரசம்பட்டி, மஞ்சமேடு, பெண்டரஹள்ளி, ராயன்பட்டி யான்புதூர், மோட்டூர், கொட்டாவூர், சாவாகட்டியூர் ஆகிய கிராமங்கள் இந்தப் பஞ்சாயத்தில் அடங்கியுள்ளன. இப் பஞ்சாயத்தின் பரப்பு 3 சதுர மைல்களாகும்.

விவசாய வளர்ச்சி

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு 78 மணங்கு நெல் விதையும் 12 மணங்கு சிறு தானிய விதையும் விநியோகம் செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. தனிப்பட்ட விவசாயிகளின் நிலங்களிலும் சமுதாய உரத்திடலிலும் கலப்பு உரம் தயாரிக்க 65 கம்போஸ்டு உரக் குழிகள் வெட்டி அதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு 450 டன் கம்போஸ்ட் உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பசுந்தாள் உரப்பயிர் 75 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வட்டார வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 20 இருப்பு கலப்பைகளும் 3 களையெடுக்கும் கருவிகளும், 7 மருந்து அடிக்கும் கருவிகளும் பழச்செடிகள் 500-ம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும் ஜப்பானிய முறை நெல் சாகுபடி 150 ஏக்கரிலும் பயிர் செய்யப்பட்டுள்ளது. சீர்திருந்திய முறையில் சிறு தான்யங்கள் 15 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ளன. உயர் ரக தென்னை நாற்றுகள் 150 ஏக்கரில் நடப்பட்டுள்ளன. வருடம் ஒன்றுக்கு 5,000 தென்னை நாற்றுகள் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு 3 லக்ஷம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்தப் பகுதியின் விவசாயம் பாரூர் பி.டபிள்யு. டி. பெரிய ஏரியின் மேற்கு வாய்க்கால் கிளை வாய்க்கால் மூலமும் பெண்டரஹள்ளி ஆற்றுக்கால்வாய் மூலமும் நடைபெற்று வருகிறது. பத்து மின்சார ஆயில் இன்ஜின் பம்பு செட்டுகளும் விவசாயத்திற்காக உபயோகப் படுத்தப்படுகின்றன. ஒரு துளைக்கிணறு வெட்டப்பட்டுள்ளது. பஞ்சாயத்து தனக்குச் சொந்தமான புறம்போக்குகளில் 4 ஏக்கரில் பசுந்தாள் உரம தயாரிப்பை முன்னிட்டு 900 கிளரிசீடியா நாற்றுகள் நட்டு உற்பத்தி செய்து வருகிறது, தக்கைப்பூண்டு $1\frac{1}{2}$ ஏக்கரில் சாகுபடி செயயப்பட்டுள்ளது. எட்டு கம்போஸ்ட் குழிகள் வெட்டப்பட்டு கலப்பு உரம் தயாரிக்கப்படுகிறது. அரசினர் மானியம் பெற்று விவசாயிகளின் உபயோகத்திற்காக கலப்பை ஒன்றும் ஸ்பேரயர் ஒன்றும் வாங்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதி விவசாயிகள் சிரமமின்றி பொறுக்கு விதைகளும் மருந்துகளும் பெற்றுக்கொள்ள இந்தப் கிராமத்தில் ஒரு விவசாய டிப்போ இயங்கிவருகிறது.

கால்நடை அபிவிருத்தி

சிறந்த கால்நடைகள் உற்பத்தி செய்தல் வேண்டி பஞ்சாயத்து தனது நிதி பகுதியுடன் ஒரு பொலிகாளை வாங்கி பராமரித்து வருகிறது. மேலும் இங்கும் சுற்றுப்புற கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைத் தடுத்து காப்பாற்ற, இந்தப் பஞ்சாயத்தில் அரசாங்க மானியத்துடன் ரூ. 5,000 செலவில் ஒரு கால்நடை முதல் உதவி நிலையம் கட்டப்பட்டுள்ளது. இதில் ஒரு ஸ்டாக்மேன் கம்பவுண்டர் பணியாற்றி வருகிறார். இந்த முதல் உதவி நிலையத்தின் மூலமாக, சென்ற மூன்று ஆண்டில் 6,089 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டும், 911 கால் நடைகளுக்கு காய் அடிக்கப்பட்டும், 5,202 கால் நடைகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டும், 5,428 ஆடுகளுக்கு புழுநோய் பாதிக்காமல் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டும், 3,105 கோழிகளுக்கு நோய் வராமல் தடுப்பு ஊசி போடப்பட்டும் வந்துள்ளன. தனிப்பட்ட நபருக்கு

வட்டார வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் 5 பெட்டைக் கோழிகளும் ஒரு சேவலும் கொடுக்கப்பட்டு அவைகள் மூலம் 75 உயர் ரக கோழிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

பொறியியல் வேலைகள்

அரசம்பட்டி பஞ்சாயத்து பொதுமக்களின் சௌகரியத்தை முன்னிட்டு 6 குடி தண்ணீர் கிணறுகள் ரூ. 5,320 செலவில் வெட்டியுள்ளது. ரூ. 2,500 செலவில் ஹரிஜனங்களுக்காக இரண்டு குடி தண்ணீர் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. ரூ. 25,000 செலவில் பாதுகாக்கப்பட்ட உயர் நிலை குடிதண்ணீர்த் தொட்டி அமைத்தும் தெருக்களில் ஆங்காங்கே பத்து தெருக் குழாய்கள் அமைத்தும், வேலை நடைபெற்று வருகிறது. ரூ. 4,240 செலவில் 5 கல்வெட்டுகள் பெண்டரஹள்ளி, மஞ்சமேடு, அரசம்பட்டி ஆகிய கிராமங்களில் கட்டப்பட்டுள்ளன. அரசம்பட்டி கிராமத்தில் ரூ. 4,900 செலவில் ஒரு மனமகிழ் மன்றம் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. ரூ. 26,702 செலவில் 8 மைல் நீளமுள்ள ரோடுகள் அமைக்கப்பட்டு அவைகளுக்கு ஜல்லி பரப்பப்பட்டுள்ளன. மேற்படி ரோடுகளில் 1 மைல் நீளத்திற்கு ரூ, 14,100 செலவு செய்து சர்க்காரின் அரை கிராண்டு திட்டத்தின்கீழ் தார் போடப்பட்டுள்ளது. ரூ. 20,216 செலவில் அரசம்பட்டி, மஞ்சமேடு, பெண்டரஹள்ளி ஆகிய கிராமங்களில் 3 பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ. 5,000 செலவில் பஞ்சாயத்து தனது அலுவல்களை கவனிக்க ஒரு ஆபீஸ் கட்டிடம் கட்டி உள்ளது. பொதுமக்கள் சௌகரியத்தை முன்னிட்டு அரசம்பட்டியில் ரூ. 1,880 செலவில் ஒரு மின்சார சங்கு அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. அரசம்பட்டி, மஞ்சமேடு, பெண்டரஹள்ளி ஆகிய கிராமங்களில் 3 ரேடியோக்கள் ரூ. 900 செலவில் அமைக்கப்பட்டுள்ளன. அரசம்பட்டியில் ரூ. 975 செலவில் சிறுவர் பூங்காவும் ரூ. 10,000 செலவில் அரசம்பட்டி கிராமத்தில் 2,320 அடி நீளமுள்ள சிமெண்டு ஜலதாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ. 1,000 செலவில் 25 குப்பைத் தொட்டிகள் ஆங்காங்கு வைக்கப்பட்டுள்ளன. ரூ. 6,800 செலவில் அரசம்பட்டியில் ஒரு தாய்—சேய் நலவிடுதி கட்டிடம் ஒன்றும், ரூ. 19,500 செலவில் அரசம்பட்டி கிராமத்தில் ஒரு ஹரிஜன காலனி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. மேற்படி காலனியில் ஹரிஜனங்களின் வசதியை முன்னிட்டு மின்சார தெருவிளக்குகள் 2 போடப்பட்டுள்ளன. மேலும் 4 தெருவிளக்குகள் போட எற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அரசம்பட்டி கிராமத்தில் 3 மெர்குரி டியூப் விளக்குகளும் 21 மின்சார தெருவிளக்குகளும் பெண்டரஹள்ளி, மஞ்சமேடு ஆகிய இரண்டு கிராமங்களில் 34 கிரஸின் தெருவிளக்குகளும் எற்றப்பட்டு வருகின்றன. ஆண்டு 1-க்கு பஞ்சாயத்து தனது நிதியிலிருந்து விளக்கு வசதிக்காக ரூ. 1,152 செலவு செய்து வருகிறது. மேலே சொன்ன மொத்த வேலைகளின் மதிப்பு ரூ. 1,26,795 ஆகும். இதில் பஞ்சாயத்து தனது நிதியிலிருந்து ரூ. 47,955-ம் பொதுமக்களிடமிருந்து ரூ. 2,830 நன்கொடை வசூல் செய்தும் கொடுக்கப்பட்டுள்ளது. மேல்கண்ட தொகையில் லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் அவர்களிடமிருந்து $\frac{1}{2}$ கிராண்டு திட்டத்தின்கீழ் அரை கிராண்டுக்காக ரூ. 7,353 இந்த பஞ்சாயத்து பெற்றுள்ளது என்பதை குறிப்பாகச் சொல்லவேண்டும்.

கூட்டுறவே—நாட்டுயர்வு

இந்த கிராமத்தில் 3 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவைகள் (1) அரசம்பட்டி கூட்டுறவு ரூரல் பாங்க், (2) வீடு கட்டும் சங்கம், (3) நாணய சங்கம் ஆக மூன்றுகும். ரூரல் பாங்கில் இந்தப் பகுதி மக்கள் 2,137 பேர்கள் அங்கத்தினர்களாக சேர்ந்து ரூ. 40,135 பங்குத் தொகை செலுத்தியுள்ளார்கள். மேற்படி ரூரல் பாங்க் மூலம் மெம்பர்கள் ரூ. 3,44,667 கடனைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். வீடுகட்டும் சங்கம் 1957-ம் ஆண்டிலிருந்து இயங்கிவருகிறது. இச் சங்கத்தில் 105 பேர்கள் அங்கத்தினர்களாக உள்ளார்கள். பங்குத் தொகை ரூ. 1,500 கட்டியுள்ளார்கள். சென்ற ஆண்டுகளில் சர்க்கார் கடன் ரூ. 34,000 பெற்று எட்டு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கிராம நாணய சங்கத்தின் மூலம் ஆண்டு 1-க்கு ரூ. 50,000 பொதுமக்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. ரூரல் பாங்க், அரசினர் மானியம் பெற்று ரூ. 15,000 செலவில் ஒரு தானிய இடங்கும், ரூ. 10,000 செலவில் ஒரு ஆபீஸ் கட்டிடமும் கட்டியுள்ளது.

கதர், கிராமக் கைத்தொழில்

இக்கிராமத்தில் சர்க்கார் கதர் திட்டத்தின் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் 100 கிஸான் ராட்டைகளும் 5 அம்பர் ராட்டைகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் 4,500 சிட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ரூ. 4,000 மதிப்புள்ள கதர் துணிகள் விற்பனை செய்யப்பட்டு இருக்கிறது.

சமூகக் கல்வியும், பொதுக் கல்வியும்

இந்தப் பஞ்சாயத்தில் ஒரு உயர்தர ஆரம்பப் பள்ளியும் மூன்று ஆரம்பப் பள்ளிகளும் இருக்கின்றன. இவைகளில் படிக்கும் மொத்த மாணவ மாணவிகள் 645 பேர்கள். இந்த ஆண்டு பள்ளி வயது வந்த மாணவர்கள் அனைவரையும் பள்ளியில் சேர்ப்பிக்க இப் பஞ்சாயத்தின் சமூக கல்வி கல்விக் குழு வேலை செய்துவருகிறது. 4 பள்ளிகளிலும் மதிய உணவு சாப்பிடும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை 161. இதற்கு பஞ்சாயத்து தனது நிதியிலிருந்து சென்ற ஆண்டு ரூ. 696 சகாயத் தொகை அளித்துள்ளது. பொதுமக்கள் நன்கொடை தானிய மூலமாகவும் ரொக்கமாகவும் ரூ. 2,000 வசூல் செய்யப்பட்டுள்ளது. பள்ளி சீரமைப்பு திட்டத்திற்காக பொதுமக்கள் ரூ. 8,952 மதிப்புள்ள பொருள்கள் வழங்கியுள்ளார்கள். மஞ்சமேட்டில் பொதுமக்கள் தங்கள் சொந்த முயற்சியால் ரூ. 3,000-த்தில் ஒரு சிறிய கட்டிடம் பள்ளியின் இடவசதி கருதி கட்டிக்கொடுத்துள்ளார்கள். பொதுமக்கள் தங்கள் முயற்சியால் ரூ. 1,000 செலவு செய்து ஒரு சமூக கல்வி மன்றம் மஞ்சமேட்டில் கட்டியுள்ளார்கள். பஞ்சாயத்து தனது நிதியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 250 செலவு செய்து தினசரி, வார, மாத சஞ்சிகைகள் வரவழைத்து பொதுமக்கள் உபயோகத்திற்கு ஒரு வாசகசாலையும் நடத்தி வருகிறது. அரசம்பட்டியில் பள்ளிக்கூடம், மனமகிழ் மன்றம், பஞ்சாயத்து ஆபீஸ் ஆகிய 3 கட்டிடங்கள் கட்டுவதற்கு, ரூ. 8,000 மதிப்புள்ள நிலத்தை பொதுமக்கள் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

சிறுசேமிப்பும் பரிசுப் பத்திரமும்

பரிசுப் பத்திரங்கள் இந்த பஞ்சாயத்துக் கிராமத்தில் ரூ. 15,000-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. சென்ற குலுக்கலில் இந்த கிராமத்தில் பரிசுப்பத்திரம் வாங்கியவருக்கு முதல் பிரைஸ் ரூ. 7,500 கிடைத்துள்ளது. 258 மண் உண்டியல்கள் கொடுக்கப்பட்டு மக்களிடம் சிறு சேமிப்பு பழக்கத்தை உண்டாக்கப்பட்டுள்ளது. மேலும் தொடரும் சிறு சேமிப்பு 'திட்டம் அமுலாக்கப்பட்டு 50 கணக்குகள் வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1952–53-ம் ஆண்டுமுதல் இந்த பஞ்சாயத்து வரிகள் எதும் பாக்கியின்றி அந்தந்த ஆண்டிலேயே வசூல் செய்யப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி தாலூகாவிலேயே வரி பாக்கியே இல்லாமல் உள்ள ஒரு சில பஞ்சாயத்துக்களில் எங்கள் பஞ்சாயத்தும் ஒன்று என்று பார்க்கும்பொழுது மிக்க பெருமையடைகிறோம்.

பஞ்சாயத்து சட்டத்தின் பிரகாரம் பஞ்சாயத்து செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தும் இந்த பஞ்சாயத்து செய்து வருகிறது. இந்த பஞ்சாயத்து ஆரம்பத்தில் இருந்தே தலைவர் உறுப்பினர்கள் தேர்தல் போட்டியின்றி நடத்தி வந்துள்ளது. தற்போதைய தலைவரே பஞ்சாயத்து ஆரம்பமானதிலிருந்தே 23 ஆண்டுகளாக தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

தமிழ்நாடு விவ்சாயிகள் மன்றம்

[தமிழ்நாட்டில் இயங்கி வரும் தமிழ்நாடு விவசாயிகள் மன்றத்தைப் பற்றிய விவரங்கள் வாசகர்களுக்குப் பயன்படும் எனக் கருதி இங்கே தரப்பட்டுள்ளன.]

விவசாயிகளுக்கென அரசியல் சார்பற்ற இயக்கம் ஒன்று நம் நாட்டில் இல்லாதிருந்தது. 1955-ம் ஆண்டு இக்குறையை பூர்த்தி செய்யும் பொருட்டு அகில இந்திய விவசாயிகள் மன்றம் (பாரத கிருஷிகர் சமாஜம்) தோன்றிற்று. அதே வருடத்தில் தமிழ்நாடு விவசாயிகள் மன்றம் தோன்றி டில்லி சமாஜத்துடன் இணைக்கப்பட்டது.—

முக்கிய நோக்கங்கள்

விவசாயிகள் மன்றத்தின் நோக்கங்களில் முக்கியமானவை.

(1) விவசாயிகளைப் பாதிக்கும் பிரச்னைகளை ஆராய்தல்.

(2) விவசாயிகளுடைய சமூக, கலாசார பொருளாதார உரிமைகளைப் பாதுகாத்தல்.

(3) அரசினரின் விவசாயக் கொள்கைகளை வகுப்பதற்குத் துணை புரிதல்.

விவசாயிகள் மன்றம் இதர மாநிலங்களிலுள்ள விவசாய சம்பந்தமான இயக்கங்களுடனும் மேலை நாடுகளுடனும் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறது.

அகில இந்திய விவசாயிகள் மன்றம் தோன்றி ஆறு வருடம் ஆனபோதிலும், பல அரிய சாதனைகளைச் செய்திருக்கிறது. உலக விவசாயப் பொருட்காட்சியினை உலகத்திலே ஒரு நாடும் நடத்தாத மா பெரும் காட்சியினை டில்லியில் வெற்றிபெற நடத்தியது, அகில இந்திய விவசாயிகள் மன்றம் (பாரத கிருஷிகர் சமாஜம்) ஆகும். தேசிய விவசாயக் காட்சியினை வருடா வருடம் ஒவ்வொரு மாநிலமாக சென்று நடத்துகிறது. விவசாயிகள் இப்பொருட்காட்சியினைப் பார்ப்பதற்கும் தேசிய விவசாயிகள் மகா நாட்டில் கலந்து கொள்வதற்கும் விவசாயிகளுக்கு ரயில்வே பிரயாணச் சலுகை கிடைக்கிறது.

அகில பாரத விவசாயிகள் மன்றம் விவசாயிகளுக்கென விவசாயிகள் பாங்கு ஒன்றை நிறுவியிருக்கிறது. பாங்குதார்களுக்கு பங்குத் தொகையின் மதிப்பிற்குச் சமமாக ஆயுள் இன்ஷ்யூரன்சு பத்திரம் ஒன்றை இந்த பாங்கு வழங்குகிறது. இப்பேர்ப்பட்ட கவர்ச்சி செய்யும் திட்டத்தினை இந்த பாங்கு வகுத்திருக்கிறது.

விவசாயிகள் மன்றத்தின் முயற்சியின் விளைவாக நம் மாநிலத்தில் விவசாயிகள் ரசாயன உரங்கள் வாங்குவதற்காக தக்காவி கடன் வழங்கப்பட்டு வருகிறது.

மன்றத்தின் பிரதிநிதிகள் பல ஆலோசனைக் குழுக்களில் பணியாற்றுவதால், விவசாயிகளுடைய கருத்துக்களும் குறைகளும் அரசினருக்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

இவ்வருடம் சென்னையில் நடந்த தேசிய விவசாயப் பொருட்காட்சியைப் பார்ப்பதற்கு பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்தனர். அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் இருப்பிட வசதி செய்து கொடுத்தது விவசாயிகள் மன்றம். விவசாயிகள், பொருட்காட்சியினைப் பார்ப்பதற்கும், ரயில்பெட்டி தொழிற்சாலை, துறைமுகம், விமானநிலையம் போன்ற இடங்களை விவசாயிகள் பார்வையிடவும் மன்றம் வசதிகள் செய்து கொடுத்தது. இத்துணை தொண்டுகளை விவசாயிகள் மன்றத்தின் ஊழியர்கள் உறுப்பினரல்லாத எல்லா விவசாயிகளுக்கும் செய்தனர்.

மன்றத்தை எப்படி உருவாக்கலாம்?

மன்றத்தின் கிளைகளை கிராமங்களிலும் வட்டாரத் தலைமையிடங்களிலும் நிறுவலாம். கிராம மன்றங்களில் தலைவர்களாக பஞ்சாயத்துத் தலைவர்கள் பணியாற்றலாம். வட்டாரக் கிளையில் பஞ்சாயத்துத் தலைவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து, இதர முன்னேற்ற விவசாயிகளையும் கிளை மன்றத்தில் உறுப்பினர்களாகத் பதிவு செய்து கொண்டு வட்டார விவசாய மன்றத்தினை வலிமை பெறச் செய்யலாம். கிராம மன்றத்தில் குறைந்தது 10 உறுப்பினர்கள் இருப்பது நலம். உறுப்பினர்கள் ஆண்டுச் சந்தா ரூபாய் 1.00 நுழைவுக் கட்டணம் ரூபாய் 1.00 செலுத்தவேண்டும். வட்டார விவசாய மன்றத்தின் உறுப்பினர் சந்தா ரூபாய் 5.00 செலுத்தி மன்றத்தின் வட்டாரக் கிளையினை நிறுவிக் கொள்ளலாம். சந்தாத் தொகையினை தமிழ்நாடு விவசாய மன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். ஆயுள் உறுப்பினர் நுழைவுக் கட்டணம் ரூபாய் 10-ம் ஆயுள் சந்தா ரூபாய் 100-ம் கட்ட வேண்டும்.

கிராம விதைப் பண்ணைகள் நிறுவுதல், தக்காவி கடன் வழங்குவதற்கு ஆலோசனை கூறுதல், இவ்வாறு பலப்பல ஆக்க வேலைகளில் கிராம மன்றங்கள் ஈடுபடலாம். விதை விநியோகம் உரங்கள் வழங்குதல் பயிர் நோய் பூச்சிகளுக்கு மருந்து அடித்தல் காய்கறி உற்பத்தி, நூதன விவசாய முறைப் பயிற்சி அளித்தல் போன்ற வேலைகளை மன்ற உறுப்பினர் சார்பில் கூட்டுப் பணியாகக் கிராம மன்றமும், வட்டாரக்கிளையும் மேற்கொள்ளலாம். இப்பேர்ப்பட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு அரசினர் அளிக்கும் சலுகைகளையும் மானியத் தொகையினையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பொதுவாக, ஒரு இயக்கம் அல்லது சங்கத்தின் வழியாகப் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் காண வழியுண்டு. விவசாயிகளுக்குள் ஒற்றுமை வளர விவசாயிகள் மன்றம் சிறந்ததொரு கருவியாகும். விஞ்ஞான விவசாய அறிவு வளரவும், அதனைச் செயல்படுத்தவும் விவசாயிகள் மன்றத்தின கிளைகள் பயன்படும் என்ற உண்மையினை மேனாட்டு விவசாயிகளின் இயக்கங்கள் ரூபித்திருக்கின்றன.

ஐவகை ஆற்றல் - ஒளி

[திரு. ஆர். கே. விசுவநாதன், எம்.ஏ., அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பௌதிகப் பேராசிரியர்]

['பொது ஜன விஞ்ஞானம்' என்ற தலைப்பில் 'ஐவகை ஆற்றல்' என்ற கட்டுரைத் தொடரில் இது கடைசி கட்டுரை. பேராசிரியர் திரு ஆர். கே. விசுவநாதன் அவர்கள் தமக்கே உரித்தான எளிய தமிழில் இந்தக் கட்டுரைத் தொடரினை எழுதி முடித்துள்ளார். 'கிராம நல' வாசகர்கள் இக் கட்டுரைகளினால் பெரிதும் பயன் பெற்றிருப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறோம். அறிவியலைப் பாமர மக்களும் தெள்ளத் தெளிய புரிந்துகொள்ள வேண்டும் என்ற பெரு நோக்குடன் கட்டுரைகள் வழங்கிய பேராசிரியருக்கு 'கிராம நல' வாசகர்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்

ஆசிரியர்.]

வெப்பத்தின் பின்னுருவம் ஒளி. வெப்பமும் ஒளியும் சாதாரணமாக எப்போதும் சேர்ந்தே தென்படும். பூமியை ஒளியுறச் செய்யும் சூரியன் ஒரு மகத்தான நெருப்புப் பந்து. அதன் மத்தியப் பிரதேசத்தில் வெப்ப நிலை இரண்டு கோடி டிகிரிக்கு அதிகமாக இருக்க வேண்டுமென்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இதன்பொருட்டு அது எல்லா திசைகளிலும் வெப்ப ஆற்றலையும் ஒளி ஆற்றலையும் வாரி இறைத்துக் கொண்டிருக்கிறது. அது வெளியிடும் ஆற்றல் வெள்ளத்தில் மிகமிகக் குறைவான பகுதியே பூமி பெறுகிறது. பூமியில் நடைபெறும் உயிர் வாழ்க்கை அனைத்திற்கும் அதன் வெப்ப ஆற்றல் காரணமாய் இருக்கிறது. அதன் ஒளி ஆற்றல் பகல் இரவு காலங்களுக்கு காரணமாய் இருந்து நமக்குப் பேருதவி அளித்து வருகிறது. பூமத்திய ரேகைப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்குத் தினசரி பகல் பொழுது சுமார் பனிரெண்டு மணி நேரத்திற்கும் இரவு பனிரெண்டு மணி நேரத்திற்கும் நீடித்திருக்கும். வடக்கு, தெற்கு அட்சங்களில் [Latitude] இவ்வாறு இராது. ஆர்டிக் அண்டார்டிக் பிரதேசங்களில் அதாவது வட துருவம் தென் துருவம் இவற்றிற்கருகே வருடத்தில் ஆறு மாதத்திற்கு சூரியன் தெரியாது. மறு ஆறு மாதங்களுக்கு அது மறையவே மறையாது. மற்றும் வானத்தின் எழில் அனைத்திற்கும் சூரியனது ஒளியே காரணமாய் இருக்கிறது. நீல வானத்தைக் கண்டு களிக்காத கவிகள் எந்நாட்டிலும் இல்லை. ராம பிரானின் நிறம் நீலம் என்று நாம் எல்லோரும் கருதி வருவதிலிருந்து நம்மிடையே நீல நிறத்துக்குண்டான சிறப்பை பற்றி கூற தேவையில்லை. காலை மாலை நேரங்களில் விதவிதமாய் தோன்றும் வண்ணத்தியல்புகள், வானவில் முதலியன எல்லாம் சூரியனது ஒளியினால் ஏற்படும் வண்ண ஜாலங்கள். இவ்வியற்கை எழில்களிலிருந்து கலைஞர்களும், கவிகளும் அவரவர்களுக்குக்கேற்ற பாணியில் கலையுணர்வை பெறுவது போல விஞ்ஞானிகளும் ஓரளவுக்கு பெறுகிறார்கள். ஆனால் இவர்கள் பெரும்பாலும் அறிவுக் கண்களோடு இவ்வினோதங்களை ஆராய்வார்கள். அவர்கள் அறிந்த சில முடிவுகளை இப்போது பார்ப்போம்.

பொருள்களுக்கு சுயமாக ஒளி கிடையாது. அவற்றின் மீது விழும் ஒளியை கொண்டுதான் நாம் அவற்றைப் பார்க்க முடிகிறது. அவற்றிலிருந்து மீண்டு வரும் ஒளியில் உண்டாகும் மாறுதல்களுக்கு ஏற்ப அவை தோற்றமளிக்கின்றன. ஒளி பொருள்களின்மீது விழும்போது அதற்குப் பிரதிபலனம் (Reflection), சிதறல் (Scattering), கோட்டம் (Refraction) முதலியனயன ஏற்படும். ஒளியின் பிரதிபலத்தினாலேயே நாம் நம்முடைய முகங்களை கண்ணாடியில் பார்க்க முடிகிறது. பொருள்களின் பரப்பு மிருதுவாக இருக்குமானால் பிரதிபலன் நிகழ்ச்சி நன்கு நடைபெறுகிறது. பிரதிபலிக்கப்பட்டு மீண்டு வரும் ஒளி ஒரு குறிப்பிட்ட திசையில் வருகிறது. பொருள்களின் பரப்பு மிருதுவாக இராமல் கரடுமுரடாக இருக்குமானால் மீண்டு வரும் ஒளி பல் வேறு திசைகளில் சிதற அடிக்கப்படுகிறது. இந் நிகழ்ச்சியை ஒளிச் சிதறல் என்று விஞ்ஞானிகள் கூறுவார்கள். இவ்வொளிச் சிதறல் மிகச் சிறிய துகள்களின் வழியாக ஒளிச் செல்லும் போதும் ஏற்படுகிறது. இதை ஓர் உதாரணத்தைக் கொண்டு விளக்கலாம். அறையின் கூரை அல்லது மேல் ஓடுகளில் உள்ள சந்தின் வழியாக சூரிய வெளிச்சம் அறையினுள் புகுவதாக கொள்வோம். அறையின் சன்னல் கதவுகளை நன்றாக சாத்திவிட்டு கவனித்தால் புகுந்த ஒளியின் போக்கு நமக்கு பளிச்சென்று தெரிவதை கவனிக்கலாம் இதற்குக் காரணம் கிரணக் கற்றையின் வழியில் உள்ள எண்ணற்ற தூசித் துகள்களேயாகும். இவைகளை ஒளி தாக்கும்போது ஒளி சிதறல் ஏற்பட்டு, சிதறிய அவ்வொளியினால் கிரணக் கற்றையின் போக்கு நமக்கு நன்கு புலனாகிறது. இனி ஒளிக்கோட்டம் என்றும், மற்றொரு நிகழ்ச்சி உண்டாவதன் காரணத்தை கவனிப்போம். ஒரு சிறு குச்சியின் ஒரு முனையை தண்ணீரில் சிறிது முழுக்கி அதைச் சற்று சாய்வாகப் பிடித்தால் நீரினுள் முழுகி இருக்கும் பாகம் நீர் மட்டத்தில் ஒடிந்து மேற்புறமாக மடங்கி இருப்பதாக தோன்றுவதை கவனிக்கலாம். முழுகி இருக்கும் பகுதியிலிருந்து வரும் ஒளி நீர் மட்டத்தை தாண்டி வெளியே காற்றில் வர வேண்டியிருக்கிறது. நீர் காற்று இவ் விரண்டையும் பிரிக்கும் பரப்பை ஒளி தாண்டி வரும் போது அதன் திசை சிறிது மாறிவிடுகிறது. இத் திசை மாறுபாட்டையே ஒளிக்கோட்டம் என்று கூறுவார்கள். இதன் விளைவாகவே குச்சி ஒடிந்து மேற்புரமாக மடங்கியது போல் நமக்குத் தோன்றுகிறது. உண்மையில் குச்சி ஒடியவில்லை,

சூரியனது ஒளி நமக்கு வெண்மையாகத் தோன்றிய போதும் அதில் பல்வேறு நிறங்கள் சேர்ந்திருப்பதை நியூட்டன் என்ற பேரறிஞர் ஒரு எளிய சோதனையினால் காட்டினார். ஓர் இருட்டு அறையினுள்ளே ஒரு சிறு துவாரத்தின் வழியாக சூரியனது ஒளியைப் புகச் செய்து அதன் வழியில் முப்பட்டைக் கண்ணாடி ஒன்றையும் அதன் பின் ஒரு திரையையும் வைத்து அத்திரையின் மீது பல்வேறு நிறங்களைக் கொண்டதோர் ஒளிப்பட்டை (Spectrun) விழுவதைக் காண்பித்தார். இந்த ஒளிப்பட்டையில் ஊதா, அவுரி, நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு முதலிய ஏழு நிறங்கள் அடங்கி இருப்பதைக் கண்டு சூரியனது வெண்ணிற ஒளி இவ்வற்றின் சேர்க்கையே என்று நிரூபித்தார். சினிமா கொட்டகையில் அவரவர்கள் வைத்திருக்கும் டிக்கெட்டுகளின் நிறங்களுக்கு தகுந்தவாறு உட்கார வைக்கப்படுவது போல சூரியனது வெண்ணொளியில் உள்ள பல்வேறு நிற ஒளியின் முப்பட்டை கண்ணாடியினால் பிரிக்கப்படுகிறது. இந் நிகழ்ச்சியை ஒளிக்கோட்டத்தைக் கொண்டும் தெளிவு படுத்தலாம். சூரியனது ஒளி காற்றிலிருந்து முப்பட்டைக் கண்ணாடியில் புகுந்தவுடன் அதில் அடங்கியுள்ள பல நிற ஒளிகள் பல வேறு அளவுகளுக்கு கோட்டம் அடைகின்றன. இதன் பொருட்டு ஒவ்வொரு நிற ஒளிக்கும் ஏற்படும் திசை மாற்றத்தின் அளவு ஒவ்வொருவிதமாக அமைகின்றது. சிவப்பு நிற ஒளிக்கு மற்ற நிற ஒளிகளைக் காட்டிலும் குறைவான திசை மாற்றமும், ஊதா நிற ஒளிக்கு அதிகமான திசை மாற்றமும் உண்டாகிறது. நிறமாலை தோன்றுவதற்கு இதுவே காரணம் என்றும் கூறப்படுகிறது.

நிறத்தைப் பற்றிய மற்றொரு விவரத்தையும் நாம் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டியிருக்கிறது. ஒரு பொருளின் நிறம் என்று நாம் குறிப்பிடும்போது அப்பொருளின் மேற்பரப்பிலிருந்து பிரதிபலிக்கும்பட்டு வரும் ஒளியின் நிறமா அல்லது அதன் உள்ளே கோட்டமடைந்து செல்லும் ஒளியின் நிறமா அல்லது அப்பொருளினுள்ளே சிதறுண்டு கசிந்து வெளிப்படும் ஒளியின் நிறமா என்பதை நாம் வரையறுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் இம் மூன்று முறைகளிலும் நாம் பார்க்கும் நிறம் மூன்று விதமாக இருக்கும் தண்ணீரை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். சூரியனது வெண்ணிற ஒளி அதன் மேற் பரப்பில் பிரதிபலிக்கப்பட்டு வரும்போது தண்ணீர் நமக்கு வெண்ணிறமாகத் தோன்றும். சூரியனது வெண்ணிற ஒளி நீரினுள் புகுந்து செல்லும் போது அதில் அடங்கி உள்ள பல்வேறு நிறங்கள் பலவாறாக கோட்டமடைகின்றன. இந் நிறங்களில் சிலவற்றை தண்ணீர் உறிஞ்சி விடுகின்றது. எனவே இவை நீங்கலாக மற்ற நிற ஒளிகளே வெளிவரும். உறிஞ்சப்படும் நிறங்கள் தண்ணீரின் தன்மையைப் பொறுத்து அமைந்தபோதிலும் பெரும்பாலும் சிவப்பு மஞ்சள் நிற ஒவிகளே உறிஞ்சப்படுகின்றன. எனவே தண்ணீரின் வழியாக புகுந்து வரும் ஒளி பச்சை நிறமாக நமக்குத் தோன்றுகிறது. தண்ணீரின் அணுக்கள், தண்ணீரில் மிதக்கும் தூசித் துகள்கள் இவற்றினால் சூரியனது வெண்ணொளியினால் உள்ள பல்வேறு நிற ஒவிகள் பலவாறாக சிதற அடிக்கப்படுகின்றன. இவ்வாறு சிதறுண்டு கசிந்து வெளி வரும் ஒளிகள் நிறம் நீலமாக அமைந்திருக்கிறது. எனவே தண்ணீரை நாம் நேர் செங்குத்தாக கீழ் நோக்கிப் பார்த்தோமானால் அதன் நிறம் நீலமாகத் தோன்றும். நாம் உற்று நோக்கும் நீர்நிலை தூய்மையாகவும், ஆழமாகவும் இருக்குமானால் இந் நீர் நிலை நிறம் மிக அழுத்தமாக அதாவது கருமையாகத் தோற்றமளிக்கும். எனவே, ஒளி பிரதி பலத்தினால் அல்லது கோட்டத்தினால் அல்லது சிதறினால் ஏற்படும் நிற வேறுபாடுகள் வெவ்வேறாக இருக்கும் என்பதை இப்போது உணரலாம்.

இனி ஒளிக் கோட்டத்தின் விளைவாக ஏற்படும் சில இயற்கை விநோதங்களைப் பார்ப்போம். பூமியைச் சூழ்ந்து இயற்கை விநோதங்களைப் பார்ப்போம். பூமியைச் சூழ்ந்து சில மைல்கள் உயரம் வரை ஒரு காற்று மண்டலம் வியாபித்துக் கொண்டிருக்கிறது. சூரியனது ஒளி இம் மண்டலத்தை தாண்டியே நம்மை வந்தடைகிறது. சூரியன் வானத்தில் உயர இருக்கும்போது சூரிய கிரணங்களுக்கு கோட்டம் அதிகமாக ஏற்படுவதில்லை. சூரியன் தொடுவானத்துக்கருகே இருக்கும் சந்தர்ப்பங்களில் சூரிய ஒளி சரிவாக வந்து நம்மை அடைவதன் பலனாக அதற்கு அதிக அளவு கோட்டம் அல்லது திசைமாற்றம் ஏற்படுகிறது. தண்ணீரில் குச்சியை சாய்த்துப் பிடிக்கும்போது ஒளிக்கோட்டத்தின் விளைவாக நீர் மட்டத்தில் குச்சி ஒடிந்து சற்று மேனோக்கி இருப்பதாக தோன்றுவதை முன்பு கவனித்தோம். சூரியன் மாலையில் தொடுவானத்துக்கு கீழே சென்றுவிட்ட போதிலும் அது மறையாமல் நமக்கு சிறிது நேரம் நீடித் தோன்றி கொண்டிருக்கிறது. அந் நிலையில் சூரிய கிரணங்கள் காற்று மண்டலத்தில் அடையும் கோட்டத்தின் விளைவாக அவற்றின் திசை சற்று மேனோக்கி வந்து நம்மை அடைகின்றன. உண்மையில் அந்த கதிரவன் தொடுவானத்திற்கு அடியில் மறைந்து விட்டபோதிலும் சிறிது பொழுது நமக்கு தோன்றிக்கொண்டிருக்கிறான். இதுபோலவே காலை வேளையில் சூரியன் தொடுவானத்தை விட்டு வெளிக் கிளம்புவதற்கு சற்று முன்னதாகவே நமக்குத் தோன்ற ஆரம்பிக்கிறது. இவ்வாறாக சூரியன் உதயமாகி மறையும் காலங்களுக்குண்டான இடைநேரம் அதாவது பகல் பொழுது சற்று கூடி விடுகிறது. இவ்வதிகரிப்பு அட்ச ரேகையை பொறுத்து இடத்துக்கு இடம் மாறுபடுகிறது. நாம் இருக்கும் அட்சங்களில் இதன் பயனாக சுமார் ஐந்து நிமிடங்கள் வரை பகல் பொழுது கூடி விடுகிறது.

வெயில் நேரங்களில் வீட்டு கூரைகளுக்கு மேலுள்ள காத்து நடுங்கிக்கொண்டிருப்பது போலவே தோன்றுவதை கோடை காலத்தில் அனைவரும் கவனித்திருக்கக் கூடும். மரங்களின் நிழல் இல்லாத மணற்பாங்கான சாலைகளிலும் இத்தகைய தோற்றத்தைக் கவனித்திருக்கலாம். சூரிய வெப்பத்தினால் காற்று படலங்கள் பலவாறாக சூடு அடையும்போது அதன் செறிவு இடத்திற்கு இடம்

மாறுபடுகிறது. இத்தகைய படலங்களின் மூலமாக ஒளி வரும்போது அடையும் கோட்டம் அல்லது திசை மாற்றம் மாறிக்கொண்டே இருப்பதினால் காற்று நடுங்கிக்கொண்டே இருப்பது போல நமக்கு தோன்றுகிறது. நட்சத்திரங்கள் மின்னுவதாக தோன்றுவதற்கும் இதே காரணத்தைத் தான் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். பூமியை சூழ்ந்துள்ள பவன மண்டலத்தின் பல்வேறு பகுதிகள் கூட்டு வேற்றுமையினால் பலதரப்பட்ட செறிவு கொண்டிருப்பதினால் நட்சத்திரத்தின் ஒளி பவன மண்டலத்தைத் தாண்டி நம்மை அடையும்போது இந்த நடுக்க தோற்றத்துடன் நட்சத்திரம் புலனாகிறது. இதையே நட்சத்திரம் மின்னிக் கொண்டிருக்கிறது என்று கூறுவார்கள். சூரியன் உதயமாகும் நேரத்தில் அதன் மிகச் சிறிய பகுதி மட்டிலும் தோன்றும்போது இத்தகைய நடுக்கத் தோற்றத்தை கவனிக்கலாம். இதைப் போலவே மாலையில் சூரியனின் பெரும்பகுதி மறைந்த பின்னர் இந் நடுக்கத் தோற்றம் புலனாவதைக் காணலாம்.

நம்மைப் பிரமிக்க வைக்கும் மற்றொரு காட்சி வானவில். இவ்வில்லில் பல்வேறு நிறங்களை கண்டு மகிழ்கிறோம். இது எவ்வாறு உண்டாகிறது என்பதற்கு காரணத்தைக் கவனிப்போம். இது தோன்றும் போது வானத்தில் ஒரு புறத்தில் சூரியன் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அதற்கு எதிர்ப்புறத்தில் மழை லேசாக தூறிக் கொண்டிருக்கும். சூரியனது வெண்மையான கிரணங்கள் இந் நீர்த்துளிகளை தாக்கும்போது கோட்டமடைந்து உள்ளே செல்லுகின்றன. கோட்டமடைந்த இக் கிரணங்கள் மீண்டும் நீர்த்துளிகளின் பின்புறத்தில் பிரதிபலித்து நம்மை நோக்கி வருகின்றன. இதன் பயனாக சூரியனது வெள்ளொளியில் உள்ள பல்வேறு நிறங்கள் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டு நம்மை அடைவதினால் நிறமாலை தென்படுகிறது. முப்பட்டை கண்ணாடி சூரியனது ஒளியில் உள்ள நிறங்களை வெவ்வேறாகப் பிரிப்பது போல நீர்த் துளிகள் நிறங்களை பிரிக்கின்றன என்பதை உணரலாம். சில சமயங்களில் வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கும்போது சூரியனை சுற்றி அல்லது சந்திரனைச் சுற்றி பல்வேறு நிறம் கொண்ட வளையங்கள் தோன்றுவதைக் கவனித்திருக்கலாம். பெரும்பாலும் காற்றில் மிதக்கும் பனிக்கட்டி துகள்களினாலேயே இவை தோன்றுகின்றன. பனிக் கட்டி துகள்களின் விட்டத்தை பொறுத்து இந் நீர் வளையங்கள் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ அமைகின்றன. வெளிப்புறத்தில் சிவப்பாகவும் உட்புறத்தில் நீலமாகவும் இவ்வளையங்கள் தோன்றுவதைக் கவனிக்கலாம்.

ஒளிச் சிதறல் காரணமாக ஏற்படும் மற்றொரு இயற்கை விநோதத்தை இப்போது கவனிப்போம். காலை மாலை நேரங்கள் சூரியன் வானத்தில் மிகத் தாழ்ந்து இருக்கும் காரணத்தினால் அதனுடைய ஒளிக் காற்று மண்டலத்தின் மூலம் நெடுந்தூரம் வர வேண்டியிருக்கிறது. காற்றில் எண்ணற்ற தூசித் துகள்கள் இருந்து வருகின்றன. வீட்டுக் கூரையிலுள்ள சந்தின் வழியாக வரும் சூரிய ஒளியின் போக்கில் ஏராளமான தூசித் துகள்கள் இங்குமங்கும் போய்க்கொண்டிருப்பதை கவனிக்கலாம். பல வழிகளில் காற்று மண்டலத்துக்கு தூசித் துகள்கள் வந்து சேர்கின்றன. காலை மாலை நேரங்களில் நம்மை அடையும் ஒளி காற்று மண்டலத்திலுள்ள இவ்வெண்ணற்ற தூசித் துகள்களையும் தாண்டி வரவேண்டியிருக்கிறது. இவ்வாறு வரும்போது தூசித் துகள்கள் சூரியனின் வெள்ளொளியில் உள்ள பல நிறங்களை பலவாறாக சிதற அடிக்கின்றன. ஊதா நிற ஒளியும் நீலநிற ஒளியும் அதிகமாக சிதற அடிக்கப்படுகின்றன. ஆரஞ்சு, மஞ்சள் நிறப் பகுதிகள் காற்று மண்டலத்தில் உள்ள நீர்த்துளிகளினால் உறிஞ்சிவிடப் படுகின்றன. இவ்வாறாக சிவப்பு நிற ஒளி நீங்கலாக மற்ற எல்லா நிற பகுதிகளும் சூரியனது வெள்ளொளியிலிருந்து நீக்கப்பட்டு வருகின்றன. இதன் பொருட்டு காலை மாலை வேளைகளில் சூரியன் நமக்கு சிவப்பாக தோன்றுகிறது. சூரியனுக்கு அப்பாலுள்ள வானம் நீலமாகத் தோன்றுவதற்குக் காரணமும் ஒளிச் சிதறலே என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். காற்று மண்டலத்தில் உள்ள காற்று அணுக்கள் தூசித்துகள்கள், நீர்த் துளிகள், இவை சூரியனது ஒளியில் உள்ள பல்வேறு வேறுநிறங்களை பலவாறாக சிதற அடிப்பதை முன்பு கூறினோம் அல்லவா? பெரும்பாலும் நீலநிற ஒளிக்குத் தான் சிதறல் அதிகமாக ஏற்படுகிறது. இச் சிதறிய ஒளியினாலேயே நாம் வானத்தைப் பார்க்கிறோம். எனவே வானம் நமக்கு நீலநிறமாக தோன்றுகிறது என்கிறார்கள். காற்று மண்டலத்தில் நடைபெறும் ஒளிச் சிதறல் மற்றொரு விதத்திலும் உதவி செய்கிறது. சூரியன் தோன்றுவதற்கு சற்று முன்பும் சூரியன் மறைந்த பிறகு சற்று நேரத்துக்கும் வானத்தில் ஒளி இருப்பதை நாம் காண்கிறோம். அதாவது காலை மாலை சந்தி நேரங்கள் நீடித்திருப்பதைப் பார்க்கிறோம் அல்லவா? மண்டலத்தின் துகள்களும், தூசித் துகள்களும் சிதற அடிக்கும் ஒளியின் விளைவாகவோ இச் சந்தி நேரங்கள் புலனாகின்றன. இத் துகள்கள் இல்லாவிடில் சூரியன் மறைந்ததுதான் தாமதம். உடனேயே இருள் வந்து கவ்விவிடும்.

இவ்வாறாக நாம் கண்டு களிக்கும் இயற்கை காட்சிகளுக்கு விஞ்ஞானிகள் காரணம் கூறுகிறார்கள். நமது அமரகவி சுப்ரமணிய பாரதியார் இவ் விநோதங்களை மிக அழகாக,

“பாரடியோ! வானத்தின் புதுமை எல்லாம்
உவகையுற நவநவமாகத் தோன்றும் காட்சி
கணந்தோறும் வியப்புகள் புதிய தோன்றும்
என்னடீ இந்த வண்ணத்தியல்புகள்—எத்தனை
கலவை!
ஆஹா! எங்கு நோக்கிடினும் ஒளித்திரள்!
ஒளித்திரள்!! வண்ணக் களஞ்சியம்!” என்று

பாஞ்சாலி சபதத்தில் சித்திரித்துள்ளார்.

[முற்றும்]

கிராம நலம் பகுதி-௨
GRAMA NALAM PART - II
பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டம்: தோட்டக்கலை—செலவும் பணியாளர்களும்

[Expanded Nutrition Programme—Horticulture—Expenditure and Staff.]

G. O. Ms. No. 1393., R. D. and L. A., dated 20th June 1962.

பள்ளித் தோட்டங்கள்

பஞ்சாயத்துக்கள் பள்ளிக்கூடங்களுக்குத் தோட்டம் வைக்க என்று, 2,000 ஜனத்தொகைக்கு ஓர் எக்கர் அளவு நிலத்தை ஒதுக்கவேண்டும். பள்ளித் தோட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில், சத்துள்ள காய்கறி, பழவகைகளைப் பயிரிட ஏற்பாடு செய்யவேண்டும். இந்தத் தோட்டக்கலைத் திட்டம் வாலிபர் சங்கங்களின் உதவி கொண்டு செயல்படுத்தப்படலாம். தோட்டக் கலையில், தேவையானல், ஆசிரியர்க்கு ஒரு குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படும். இத்தோட்டங்களின் விளை பொருள்கள் பள்ளி உணவுத் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கால்நடைத் தீவனமும் பருப்பு வகைகளும்

முடியுமான இடங்களிலெல்லாம் பஞ்சாயத்துக்கள், காய்கறிகள், பருப்பு வகைகள், கால்நடைத் தீவனம் ஆகியவை பயிரிட, குறைந்த பட்சம் ஐந்து எக்கர் பரப்புள்ள நிலத்தையாவது ஒதுக்கவேண்டும். அத்தகைய நிலம் இல்லை என்றால் நன்கொடையாகவோ, குத்தகைக்கோ பெறவேண்டும். இது விஷயத்தில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த நிலத்தை, உயர்ந்த முறைகளையும், பொறுக்கு விதைகள், தேர்ந்த நாற்றுக்கள், ஆகியவற்றைப் பயன்படுத்தி சத்துள்ள உணவுப் பொருளைப் பயிரிட்டுக் காட்டப் பயன்படுத்தவேண்டும். தேவையான இடங்களில் நீர்ப்பாசன வசதிகள் செய்துகொள்ளவேண்டும். இத்திட்ட நிறைவேற்றத்திற்கு UNICEF ஸ்தாபனம், பம்புகளையும், பைப்புகளையும், எரு வகைகளையும், பூச்சி மருந்துகளையும், தோட்டவேலைக் கருவிகளையும் கொடுத்து உதவும். பஞ்சாயத்துக்கள் கிணறு வெட்ட என்று கொடுக்கப்படும் பணத்தைப் பயன்படுத்திக் கிணறுகளை வெட்டச் செய்ய வேண்டும். பம்புகளுக்குக் கொட்டகை போடவேண்டும். பம்புகளை ஓட்ட, விதைகள், செடிகள் வாங்க, காவல்காரர்களை வைக்க, ஆகும் செலவுகளை மூன்றாண்டுகளுக்கு அரசாங்கம் ஏற்கும். கால்நடைப் பாதுகாப்புத் துறை, கறவைப் பசுக்களின் நல்ல இன அபிவிருத்திக்கான திட்டத்தை, இந்தப் பிரதேசங்களில் நன்றாகச் செயல்படுத்தவேண்டும்.

இத்தகைய தோட்டங்களின் விளைபொருள்கள் பள்ளி உணவுத் திட்டத்திற்கும், மீதியை கருத்தரித்துள்ள பேறு கால தாய்மார்களுக்கான கிராம உணவுத் திட்டத்திற்கு பயன்படுத்தவேண்டும்.

மேற்படி திட்டத்தை நிறைவேற்ற, ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு பேருக்கு பயிற்சி அளிக்க UNICEF ஸ்தாபனம் பயிற்சி உதவித்தொகை அளிக்கும்.

(கிராமநல-தல நிர்வாகத்துறையின் 20-6-62 தேதியிட்ட அரசாங்க ஆணை 1393-ன் சுருக்கம்.)

பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்: பஞ்சாயத்துக்களில் வைக்க அங்கீகரிக்கப்பட்ட வானொலிப் பெட்டிகளின் பட்டியலில் குறிக்கப்பட்ட மர்பி வானொலிப் பெட்டியின் விலையில் இறக்கம்

[Panchayat Radio Maintenance Organisation—Installation of radio sets in the Panchayats—List of approved types and models of radio sets that can be installed in the Panchayats—Reduction in the cost of Murphy Radio sets—Instructions.]

Memorandum No. 111604., R. D. and L. A., dated 16th June 1962.

கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 725-ல் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில், (கிராம நலம்—மே இதழ் பகுதி II பஞ்சாயத்து அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது) மூன்று வகையான மர்பி வானொலிப் பெட்டிகள், பஞ்சாயத்துக்களில் வாங்கி வைக்க அரசாங்கம் அங்கீகாரம்

அளித்துள்ளது. அந்த வானொலிப் பெட்டியின் விற்பனையாளர்களான மகமட் இப்ராஹிம் அண்டு கம்பெனியார், 'மர்பி TAO. 374, 30 வாட்ட் A. C. உபயோகத்திற்கு' என்ற வகை வானொலிப் பெட்டியின் விலையை ரூ. 443·10-லிருந்து ரூ. 428·10 ஆக (எல்லா வரிகளும் உட்பட நிகரம்) குறைத்திருப்பதாக தலைமை வானொலி அதிகாரி (Chief Radio Officer) அறிவித்துள்ளார்.

மேற்படி வகை மர்பி வானொலிப் பெட்டிக்காக, பஞ்சாயத்துகள் ரூ. 428·10 (ரூபாய் நானூற்றிருபத்தி எட்டும், நயா பைசா பத்தும் மட்டும்) செலுத்தவேண்டும் என்று பஞ்சாயத்துக்களுக்கு விளக்கமளிக்கும்படி எல்லா கலெக்டர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

[கிராம நல-தல நிர்வாகத் துறையின் 16-6-62 தேதியிட்ட அறிக்கை எண். 11160?.]

1961-ம் ஆண்டு தமிழ்நாடு ஸ்தல ஸ்தாபனங்கள் நிதிச் சட்டம்- கடந்த காலத்திற்கும் வரி விதிப்பு அமுலாக்குதல் பற்றிய விளக்கம்

[Act—Madras Local Authorities Finance Act, 1961—Levy of tax with retrospective effect—Instructions Issued.]

G. O. Ms. No. 1359., R. D. and L. A., dated 15th June 1962.

1961-ம் ஆண்டு தமிழ்நாடு ஸ்தல ஸ்தாபனங்கள் நிதிச் சட்டம் பிரிவு 3 (1)-ன் கீழ், (a) வரி விதிப்பை கடந்த காலத்திலிருந்து பின்னோக்கி அமுலாக்கலாமா அல்லது வருங்காலத்தில் ஒரு தேதியிலிருந்து அமுலாக்கலாமா என்றும், (b) வரி விதிப்பை நிதி ஆண்டில் இடையிலிருந்து அமுலாக்கலாமா என்றும் வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இது விஷயங்களில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன :

1961-ம் ஆண்டு தமிழ்நாடு ஸ்தல ஸ்தாபனங்கள் நிதிச் சட்டம், பிரிவு 3 (1)-ன் கீழ் வரி விதிப்பதை, மேற்படி சட்டத்தின் பிரிவு 3, துணைப் பிரிவு (2)-ன் கீழ் ஸ்தல ஸ்தாபனங்கள் இதற்குப் பின் நிர்ணயிக்கும் ஒரு தேதியிலிருந்து அமுலாக்கப்படும். கடந்த காலத்தில் பின்னோக்கு வரி விதிப்பை அமுலாக்ககூடாது.

மேற்படி சட்டத்தின் பிரிவு 3 (1)-ன் கீழ் முதன் முறையாக வரி விதிப்பதை நிதி ஆண்டின் மத்தியிலிருந்து தொடங்கலாம். ஆனால் அந்த ஆண்டைப் பொறுத்தமட்டில், மேற்படி பிரிவின் துணை பிரிவு (3)-ன் கீழ், சம்பந்தப்பட்ட ஸ்தல ஸ்தாபனங்களால் நிர்ணயிக்கப்பட்ட தேதியையும், வரி வீதத்தையும், மாற்றுவதற்கான ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

[கிராம நல-தல நிர்வாகத் துறையின் 15-6-62 தேதியிட்ட அரசாங்க ஆணை 1359.]

பொருள்களைத் தருவதற்கும் வேலைகளைச் செய்வதற்குமாக, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் வெளியிடும் ஒப்பந்த அறிக்கைகளைச் செய்தி இதழ்களில் வெளியிடுதல்—விலக்கப்படுகின்றன

[Tender Notices issued by Panchayats and Panchayat Unions—Tender Notices for works and for supply of materials, goods—Publication in newspapers—prohibited.]

Memorandum No. 7287., R. D. and L. A, dated 29th May 1962.

தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1677-ன் அறிக்கை 44-ன், 7 (1) (b) விதிகளிலும், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1248-ன் அறிக்கை 70-ன், 7 (1) (b) விதிகளிலும், 1961-ம் ஆண்டு மே மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1441-ன் அறிக்கையின் 6 (1) (c) விதிகளிலும், 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 260-ன் அறிக்கை 15-ன் 2 (1) (b) விதிகளிலும் வேலைகள், பொருள்களைக் கொடுத்தல் ஆகியவற்றுக்கான ஒப்பந்தங்களைத் தருவிப்பதற்காக பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் அறிக்கைகளை வெளியிட வகை செய்யப்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், இந்த விதிகளைப் பயன்படுத்தி பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றின் நிதிகளிலிருந்து இத்தகைய அறிக்கைகளை வெளியிட அதிக செலவு செய்வதாகப் பல விஷயங்களில் அரசாங்கம் கவனித்துள்ளது. ஆகவே பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களின் நிர்வாக அதிகாரிகள், இவ்வறிக்கைகளைச் செய்தி இதழ்களில் வெளியிடுவதற்கு அனுமதிக்கும் விதிகளைத் திருத்த வேண்டியது அவசியம் என்று அரசாங்கம் கருதுகிறது. திருத்தப்பட்ட விதிகள் வெளியிடப்படுகின்ற வரையில், நடைமுறைக்கு கீழ்க்கண்ட விளக்கங்கள் வெளியிடப்படுகின்றன. இந்த விளக்கங்கள், பஞ்சாயத்து யூனியன்கள் பஞ்சாயத்துக்கள் வேலைகளுக்கும், பொருள்களைப் பெறு

வதற்குமான ஒப்பந்தங்களைத் தருவிப்பதற்கும், ஒப்புக் கொள்ளவும் பின்பற்றப்படவேண்டும்.

பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் ஒப்பந்த அறிவிப்புக்களை (Tender Notices) (i) பஞ்சாயத்து அறிவிப்புப் பலகையிலும் (ii) கிராமச் சாவடி இருந்தால் அங்கேயும், (iii) பஞ்சாயத்து யூனியன் அறிவிப்புப்பலகையிலும், (iv) மற்றும் நிர்வாக அதிகாரி அவசியம்என்று கருதுகிற இதர தகையபிற இடங்களிலும்வெளியிடப்படவேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியனில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களின் அறிவிப்பும் பலகையிலும் விளம்பரப் படுத்துவதற்கென்று அந்தப பஞ்சாயத்துக்களின் நிர்வாக அதிகாரிகளுக்கெல்லாம் அறிவிப்புப் பிரதிகளைப் பஞ்சாயத்துநிர்வாக அதிகாரி அனுப்பவேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்த வரையில், (i) பஞ்சாயத்து யூனியன் அறிவிப்புப் பலகையிலும், (ii) வட்ட அலுவலக (Taluk Office) அறிவிப்புப் பலகையிலும், (iii) முடியுமானால் மாவட்ட அரசிதழிலும் (District Gazette), (iv) மற்றும் வேலைகள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் எஞ்சினீயரும், மற்ற விஷயங்களில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரும் அவசியம் என்று கருதுகிற இத்தகைய பிற இடங்களிலும் வெளியிடப்பட வேண்டும். இவற்றுடன், மாவட்டத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன் அலுவலகப் பலகையிலும் விளம்பரப் படுத்துவதற்கென்று எல்லாப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும், அறிவிப்புப் பிரதிகளை அனுப்பி வைக்கவேண்டும்.

எக்காரணம் கொண்டும், எந்தச் செய்தியிதழிலும் ஒப்பந்த அறிவிப்புக்களைப் பஞ்சாயத்துக்களோ அன்றி பஞ்சாயத்து யூனியன்களோ வெளியிடக்கூடாது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 29—5—62 தேதியிட்ட அறிக்கை எண் 67287.)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம்—ஒரு கிராமம் அல்லது நகரத்திலிருந்து ஒரு பிரதேசத்தைப் பிரித்தல் அல்லது சேர்த்தல் பற்றிய விதிகளில் திருத்தம்

[Rules—Madras Panchayats Act, 1958—Exclusion of any local area from or Inclusion of any local area in a village or town—Amendment—Confirmed.]

G.O. Ms. No. 1356, R.D. and L.A., dated 15th June, 1962.

ஒரு கிராமம் அல்லது நகரத்திலிருந்து, ஒரு பிரதேசத்தை நீக்குவது, அல்லது, கிராமம் அல்லது நகரத்துடன் ஒரு பிரதேசத்தைச் சேர்ப்பது சம்பந்தமான விதிகளின் திருத்த நகல், 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ந் தேதியிட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழின் V-ம் பாகத்தில் பொது அறிவிப்பாக வெளியிடப்பட்டது. இந்தத் திருத்தம் குறித்து, எந்த ஒரு ஆலோசனையும், தடையும் வராததால் திருத்தம் உறுதி செய்யப்படுகிறது

இணைப்பு

அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 178-வது பிரிவு (2) துணைப்பிரிவு (i) உட்பிரிவின்படி அளிக்கப்படுகின்ற அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், கிராமநல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ந் தேதியிட்ட எஸ். ஆர். ஓ. எண் : ஏ489/1961 அறிவிப்புடன் வெளியிடப்பட்ட, ஒரு கிராமம் அல்லது நகர எல்லைக்குட்பட்ட பிரதேசத்தை நீக்குவது—அல்லது சேர்த்துக்கொள்வது சம்பந்தமான விதிகளில், கீழ்க்கண்ட திருத்தத்தை இதன் மூலம் செய்கிறார் :

திருத்தம்

மேற்கூறப்பட்ட விதிகளில் உள்ள 6-வது விதிக்குப் பதிலாக கீழ்க்கண்ட விதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் :

"6. ஒரு கிராமம் அல்லது நகரத்தைச் சேர்ந்த ஒரு பிரதேசத்தைப் பிரித்து வேறொரு கிராமம் அல்லது நகரத்துடன் சேர்க்கின்ற விஷயத்தில், சம்பந்தப்பட்ட இரண்டு பஞ்சாயத்துகளையும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றம் அல்லது மன்றங்களையும் கலந்தாலோசிக்காமல் எந்தப் பிரதேசத்தையும் சேர்க்கவோ, நீக்கவோ படமாட்டாது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 15-6-61 தேதியிட்ட அரசாங்க ஆணை 1356.)

— —

பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்—குமரப்பா நினைவுக் குழுவுக்கு நன்கொடை அளிக்க அனுமதி

[Contribution—Panchayat Union Councils—Establishment of Kumarappa Memorial—Payment—Orders issued.]

Proceedings of the Additional Development Commissioner, Madras. No. 86928A., dated 15-6-1962.

குமரப்பா நினைவு பொறுப்புக் குழுவினர் (Kumarappa Memorial Trust), சென்னையில் ஒரு பொருட்காட்சி, நூலகம், ஒரு செய்முறைக் காட்சி நிலையத்துடன் ஒரு குடிசைத்தொழில் கிராமத் தொழில்களுக்கான ஒரு ஆய்வு நிலையம் ஆகியவற்றைச் சென்னையில் தொடங்குவதன்மூலம் காலஞ்சென்ற டாக்டர் ஜே. சி. குமரப்பா அவர்களின் நினைவு விழா கொண்டாடுவதற்காக முடிவு செய்துள்ளனர். அந்த உத்தேச நினைவு ஏற்பாட்டுக்கான செலவுகளை ஈடுசெய்வதற்காக, சென்னை குமரப்பா நினைவு ஆயத்தக் குழுவினர், மாநிலத்திலுள்ள எல்லா பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும் இந்தக் குழுவுக்கு நன்கொடை அளிக்க அனுமதிக்கப்படலாம் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

2. கிராம நல–தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் '0-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை, 1334-ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, பஞ்சாயத்து யூனியன்களின் மேற்பார்வையாளர் (The Inspector of Panchayat Unions) இந்த மாநிலத்தில் உள்ள எல்லா பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும் அவற்றின் பொது நிதியிலிருந்து ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) க்கு மேற்படாமல், குமரப்பா நினைவு ஆயத்தக் குழுவுக்கு (Kumarappa Memorial Preparatory Committee, Madras-15) மேலே 1-வது பாராவில் குறித்த காரியத்துக்கென்று, யூனியன் மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதற்குட்பட்டு, நன்கொடை அளிக்க இதன்மூலம் அனுமதிக்கிறார்.

(கிராம நல தல நிர்வாகத்துறை, கிராம அபிவிருத்திக் கமிஷனரின் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ந் தேதியிட்ட செயல்முறை அறிக்கை எண் 86928–A).

மாதர் நல நிறுவனங்களின் உறுப்பினர்கள் சென்னை நகருக்கு விஜயம் செய்வதற்கு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஏற்பாடு செய்தல் பற்றிய விளக்கம்

[Women's Welfare—Members of Women's Welfare Organisations—Visit to Places in Madras City Organised by Commissioners of Panchayat Unions—Certain Instructions Regarding.]

Memorandum No. 104773., R. D. and L. A., dated 25th June 1962,

கிராமத் தலைவர்கள், மாதர்கள் முதலானோர்களுக்கான சுற்றுப் பயணங்களை ஏற்பாடு செய்யும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், அவர்களின் சென்னை விஜயத்தின போது, நகரிலும், நகரப் புறத்திலும் உள்ள பார்க்க வேண்டிய இடங்களைப் பார்க்க வசதிகளும் சென்னையில் தங்குமிட வசதிகளும் செய்து தரவேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளனர். சமீபத்தில, இரண்டொரு விஷயங்களில். எத்தனை பேர் வருகின்றனர் எப்பொழுது வருகின்றனர் அவர்களுள் எத்தனை பேர் ஆண்கள், எத்தனை பெண்கள், குழந்தைகள். நகரைச் சுற்றிப் பார்க்க அவர்களே ஏற்பாடு செய்துகொண்டுள்ளனரா, பயணத்தை ஏற்பாடு செய்தவர், அவ்வப் பொழுதே, செலவுப் பணத்தைக் கட்டிவிடுவாரா, தொழிற்சாலை முதலானவற்றைப் பார்க்க முன் அனுமதியைப் பெற்றுள்ளனரா—என்ற விவரங்களையெல்லாம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் குறிப்பிட்டு அறிவிக்கவில்லை. சென்னைக்கு வருவோரைப் பற்றிய இந்த விவரங்கள் எல்லாம் தெரியாததல், தங்குமிட வசதியும், நகரையும், சுற்றுப் புறத்தையும் சுற்றிப் பார்க்க வசதியும் செய்வது கஷ்டமாக இருந்தது. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் தங்கள் வட்டாரங்களிலிருந்து கிராமத் தலைவர்கள் மாதர்கள் குழந்தைகள் ஆகியோரின் சுற்றுப் பயணங்களை ஏற்பாடு செய்யும் பொழுது, அவர்கள் அரசாங்கத்தின் பொது (செய்தி–விளம்பரம்) துறைக்கு எழுதும் கடிதத்தில் மேற் குறிப்பிட்ட எல்லா விவரங்களையும் குறிப்பிட்டு எழுதினால், அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படும்.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 25–6–62 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 104773)

பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம்—ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு வானொலிப் பெட்டி அமைக்க ஏற்பாடு

[Panchayat Radio Maintenance Organisation—Installation of radio sets to cover every Panchayat with a radio set]

Memorandum No. 103603, R. D. and L. A., dated 21st June 1962.

14-2-1962 தேதியிட்ட அறிக்கை 26099ல் ஒலிபரப்புத் துறை அல்லது சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டம் ஆகியவற்றின் மூலம் ஏற்கெனவே உதவித் தொகை பெற்றிருக்கும் எந்த ஒரு பஞ்சாயத்துக்கும், கிராம நலதல நிர்வாகத் துறையின் 1—1—1962 தேதியிட்ட அரசாங்க ஆணை 1-ன் படி எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் வானொலிப் பெட்டி அமைக்கப்படும் வரையில், உதவித் தொகை பெறத் தகுதியில்லை. மேலும் 14-2-62 தேதிய அறிக்கையில் மேற்படி ஆணை 1-ல் கூறப்பட்டுள்ள அரசாங்க உதவித் தொகையுடன் வானொலிப் பெட்டி அமைக்காத பஞ்சாயத்துக்களுக்கு மட்டுமே செல்லுபடியாகுமென்று கூறப்பட்டுள்ளது.

2. மேற்படி விளக்கங்களின்படி, ஏற்கெனவே பொது நன்கொடை அல்லது இதர வழிகளில் வானொலிப் பெட்டி அமைத்துள்ள பஞ்சாயத்து எல்லையில் அரசாங்க உதவித் தொகை பெற்று வானொலிப் பெட்டி அமைப்பது தடுக்கப்படுகிறது. சில பஞ்சாயத்துக்களில், பொது நன்கொடையைக்கொண்டே, அரசாங்கம் அல்லது பஞ்சாயத்தின் பண உதவி வானொலிப் பெட்டி அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இத்தகைய சில பஞ்சாயத்து எல்லைகளில் இரண்டு அல்லது மூன்று சிற்றூர்கள் (அல்லது) மதுராக்கள் (கிளைக் கிராமங்கள்) அடங்கியிருப்பதால் மேலும் வானொலிப் பெட்டிகளை அமைப்பது தேவை என்று கருதப்படுகிறது. ஆகவே, ஒலிபரப்புத்துறை அல்லது சமுதாய அபிவிருத்தி வேலைத் திட்டம் ஆகியவற்றிலிருந்து உதவித் தொகை பெறாமல் வானொலிப் பெட்டி அமைக்கப்பட்டுள்ள இடங்களிலும், ஒரு பஞ்சாயத்து எல்லையில் இரண்டு அல்லது மூன்று சிற்றூர்கள் அடங்கியுள்ள இடங்களிலும், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை. 725, 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 800 ஆகியவற்றில் அரசாங்கம் ஆணையிட்டுள்ள உதவித் தொகைகளைப் பெற்று வானொலிப் பெட்டி அமைக்க அனுமதிக்க வேண்டுமென்றும் அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

3. இந்த விஷயத்தை அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்தது. முதற்படியாக, பஞ்சாயத்து வானொலிப் பராமரிப் நிறுவனம் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி அளவில் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு வானொலிப் பெட்டி அமைக்கும் இலட்சிய அளவு நிறைவேற்றப்பட வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. மேற்படி குறிக்கோளை அடைந்த பிறகு பஞ்சாயத்துக்களில் அடங்கிய பல்வேறு சிற்றூர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விஷயம் கவனிக்கப்படும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ம் தேதியிட்ட அறிக்கை 103603).

முக்கிய சேவிகைகளை பணிப்பயிற்சியும், மறுபயிற்சியும் பெறுவதற்கு, சமூகக்கல்வி அமைப்பாளர்களின் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்புதல்—மாதர் நல இயக்குநரிடம் அதிகார ஒப்படைப்பு

[Training—Mukhiya Sevikas—Deputation for job courses and refresher courses in Social Education Organisers' Training Centres—Powers—Delegation to the Director of Women's Welfare—Ordered].

G.O. Ms. No. 1575, R. D. and L. A., Dated 13th July 1962.

கிராம நலத்துறையின் 1959-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 100-ல் கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 26-ம் தேதியிட்ட அறிக்கை 36712-ல் வெளியிடப்பட்ட திருத்தங்களின்படி, இப்பொழுது "முக்கிய சேவிகைகள்" என்று அழைக்கப்படும் சமூகக் கல்வி அமைப்பாளர்களை (பெண்கள்) பணிப் பயிற்சிக்கும், மறுபயிற்சிக்கும் பெரியநாயக்கன்பாளையம், காந்திக் கிராமம் ஆகிய இடங்களில் உள்ள சமூகக் கல்வி அமைப்பாளர் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறார். மாதர் நலத்துறை திருத்தி அமைக்கப்பட்டதற்கொப்ப, சமூகக் கல்வி அமைப்பாளர்களை (பெண்கள்) அதாவது முக்கிய சேவிகைகளை வேலைக்கு அமர்த்தும் அதிகாரியாக மாதர் நலத்துறை இயக்குநர் விளங்குகிறார். ஆகவே, இதுவரை கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கிருந்த சமூகக் கல்வி அமைப்பாளர்களை (பெண்கள்) அதாவது முக்கிய சேவிகைகளை, கோயமுத்தூர், காந்தி கிராமம் ஆகிய இடங்களில் உள்ள சமூகக் கல்வி அமைப்பாளர் பயிற்சி நிலையங்களில் பணிப் பயிற்சி, மறுபயிற்சி ஆகியவை பெற அனுப்புகின்ற அதிகாரத்தை மாதர் நலத்துறை இயக்குநருக்கு அளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1575).

1960-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (முதல் அமைப்புக்கு விசேஷ வழிவகைகள்) சட்டத் திருத்தச் சட்டம் பற்றிய சில விளக்கங்கள்

[Act—Madras Act of 27 of 1961—Certain Clarifications.]

Memorandam No. 75235, R.D. and L.A., dated 4th July 1962.

பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர்கள், தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு (அந்த கால வரையறையில் மூன்று கூட்டங்களுக்குக் குறையாமல் கூட்டப்பட்டிருந்தால்), அல்லது தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு வராமல் இருந்தால், 1958–ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 26 (J) பிரிவின் கீழ், அவர்கள் பஞ்சாயத்து யூனியன் மற்ற உறுப்பினராக இருக்கத் தகுதி அற்றவர் என்றும், உறுப்பினர் பதவியை அவர்கள் இழந்ததாகவும் ஆகிறதல்லவா என்ற ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது. இது விஷயத்தில் அரசாங்கம் கீழ்க் கண்ட விளக்கங்களை வெளியிடுகிறது.

2. 1960–ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (முதல் அமைப்புக்கு விசேஷ வழி வகைகள்) சட்டம், 1961-ம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின்படி, பஞ்சாயத்துத் தலைவராக இருப்பவர் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினராக இருப்பார். ஆகவே, மேலே 1-வது பாராவில் கூறியபடி, பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர் கூட்டங்களுக்கு வராமல் இருந்தாலும், அவர் அந்த யூனியனில் உள்ள ஒரு பஞ்சாயத்தின் தலைவராக இருக்கும் வரையில் தொடர்ந்து அந்தப் பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினராகவே இருப்பார்.

1960–ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (முதல் அமைப்புக்கு விசேஷ வழி வகைகள்) சட்டம், 1961–ம் ஆண்டின் திருத்தச் சட்டம் பிரிவு 2 அமுலில் இருக்கும்பொழுது, எந்த நிலையிலும், 1958–ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், பிரிவு 26 (J) அமுலாகாது என்று கருதப்படவேண்டும்.

3. ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் தம் உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்யலாமா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.

1960–ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (முதல் அமைப்புக்கு விசேஷ வழி வகைகள்) சட்டம், 1961-ம் ஆண்டு சட்டத்தில் திருத்தப்பட்டபடி, பிரிவு 2–ன் கீழ், பஞ்சாயத்து யூனியன் மன்றத்திலிருந்து ஓர் உறுப்பினர் தம் பதவியை ராஜினாமா செய்வது, அவர் அந்த யூனியனில் உள்ள ஒரு பஞ்சாயத்தின் தலைவராக இருக்கும் வரையில் செல்லுபடி ஆகாது என்று அரசாங்கம் எடுத்துக் கூறுகிறது.

(கிராம நல–தலநிர்வாகத் துறையின் 1962–ம் ஆண்டு ஜூலை மாதம் 4–ந் தேதியிட்ட அறிக்கை 75235.)

— —

விரிவு படுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டம்—விளம்பர வாரக் கொண்டாட்டம்

(Expanded Nutrition Programme—Celebration of Publicity Week.)

G.O. Ms. No. 1555., R.D. & L.A., Dated 11th July 1962.

மாநிலத்தின் ஏழு கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையங்களிலும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள ஏழு வட்டாரங்களிலும் விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத்திட்டம் நிறைவேற்றப்பட, கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 328ல் அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. இது சத்துள்ள உணவை உற்பத்தி செய்யவும், உண்ணவுமான உறுதியான பழக்க வழக்கங்களைப் பரப்புவதற்கு ஒரு ஒருங்கிணைந்த முயற்சியாகும். இத்திட்டத்தின் பல்வேறு அம்சங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள், பொது மக்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கும் ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தையும் அரசாங்கம் செயல்படுத்தக் கருதுயுள்ளது.

ஆகையால் இந்த ஏழு வட்டாரங்களில், இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், இந்தத் திட்டத்ினால் ஏற்படும் பயன்களையும் நன்மைகளையும் வட்டாரத்து அறியச் செய்து, அதில் ஈடுபடுமாறு செய்வதன் மூலமே திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். கல்லுப்பட்டியில் 1962ம் ஆண்டு எப்ரல் மாதம் 9ந் தேதியில் கூடிய விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டம் பற்றிய செயற்குழு, திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்னர் "விளம்பர வாரம்" கொண்டாடுவதென்று முடிவு செய்யப்பட்டது.

விவசாயத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, மீனளத்துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை, முதலான பல்வேறு துறைகளின் ஈடுபாடு விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத்திட்ட நிறைவேற்றத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. ஆகவே, மாநில அளவிலிருந்து வட்டார அளவு வரையுள்ள அதிகாரிகள் திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்து கூடிப்பேச ஏற்பாடு செய்வது நல்லதென்றும், முதற்படியாக வட்டார அளவிலுள்ள எல்லா அதிகாரிகளின் மாநாடு ஒன்று கூட்டலாம்

என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. சத்துணவு உற்பத்திப்பயன் ஆகியவற்றை பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் அளவிலும் கிராம மக்களுக்குப் பரப்ப வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டுள்ளது.

அரசாங்கம் மேற்படி ஆலோசனைகளைப் பரிசீலனை செய்து, கிருஷ்ணகிரி, பவானி சாகர், ஆரணி, பட்டுக் கோட்டை, திருவிடமருதூர், கல்லுப்பட்டி, கோயில்பட்டி ஆகிய ஏழு திட்ட வட்டாரங்களில் 1962, ஆகஸ்டு மாதத் தில், திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மகா நாடு நடத்தி, அதிகாரிகளுக்குத் திட்டத்தின் முக்கியத்து வத்தையும், பல்வேறு அம்சங்களையும் விளக்குவதற்கு ஆணை பிறப்பிக்கிறது. இந்த மகாநாடுகள் நடக்க வேண்டிய தேதிகள், இடம் முதலியன, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு, பின்னர் அறிவிக்கப்படும். இந்த மகா நாட்டில் மாநில அளவிலுள்ள இலாகாத் தலைவர்கள் வட்டாரஅளவிலுள்ள அதிகாரிகளுக்கு திட்டத்தின் பல அம்சங்களைப் பற்றியும், எழக்கூடிய பிரச்சினைகளையும் விளக்குவார்கள்.

ஏழு வட்டாரங்களிலும் உள்ள ஒருங்கிணைப்புக் குழுக்களும் (Co-ordination Committees) பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து அளவில் எத்தனை முடியுமோ அத்தனை பொதுக்கூட்டங்கள் நடத்தி, மாவட்ட அதிகாரி களை வரவழைத்து அவர்களைக் கொண்டு கோழிவளர்ப்பு, மீன்வளர்ப்பு, தோட்டக்கலை முதலான சத்துணவு உற்பத்தி யின்பயன்களைப்பற்றி கிராம மக்களுக்கு விளக்கிக் கூறவேண் டும். இத்தகைய கூட்டங்கள் 1962, ஆகஸ்டு முதல் வாரத்தில் நடத்தப்படலாம். கலெக்டர்கள், ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரி கள் இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும். இந்த மாவட்டங்களின் கலெக்டர்கள், சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் "விளம்பர வாரம்" கொண்டாடப்பட்டது பற்றிய அறிக்கையை ஆகஸ்டு 15 தேதிக்குள் அரசாங்கத் துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1555-ன் சுருக்கம்)

குழந்தைகள் நலம்—பள்ளிப்பருவ முன்நிலை நிலையங்களைத் தொடங்குதல்—வட்டாரத் தலை நகரில் தாயிகளுக்குப் பயிற்சி—தலைமை ஆயா (Matron) அமர்த்தல்—செலவுகளுக்கு அனுமதி

[Child Welfare—Care of Pre-School Children—Starting of Pre-School Centres—Training of Thayis at the Block Headquarters—Employment of Matrons—Expenditure Sanctioned[

G.o. Ms. No. 1558, R. D. and L. A., dated 12-7-62

கிராம நல—தல நிர்வாகத்துறையின் 1962–ம் ஆண்டு ஜனவரி மாதம் 20–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 180 ன் இணைப்பில், 6 (4) வது பாராவில், வட்டாரத் தலைநகரில் தாயி முதலானவர்களின் பயிற்சி சம்பந்தமாக, ஒவ்வொரு முகாமிலும் மூன்று மாத காலத்துக்கு ரூ. 90 க்கு, தலைமை ஆயாவின் (Matron) பணியைப் பயன் படுத்திக் கொள்ள அரசாங்கம் அனுமதித்துள்ளது. இந்த இனத் திற்கு ஆகும் செலவைக் குறித்து அந்த ஆணையின் 7 வது பாராவில், அனுமதி வழங்கப்படவில்லை.

2. ஒவ்வொரு இருபத்தொரு வட்டாரங்களின் தலைநகர களிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட தாயிகள், பிற பணியாளர் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கும் இடங்களில் எல்லாம் மூன்று மாதகாலத்துக்கு ஒரு தலைமை ஆயாவை அமர்த் தும் விஷயத்தில் மாதம் ஒன்றுக்கு மொத்தமாக ரூ. 90 (ரூபாய் தொண்ணூறு மட்டும்) செலவு செய்ய அரசாங்கம் அனுமதி வழங்குகிறது.

(கிராமநல—தல நிர்வாகத் துறையின் 1962ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1558)

பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாவட்ட அதிகாரிகளின் வருகைகள் பற்றிய விள்க்கம்

[Visits of District Officers to Panchayat Unions—Instructions.]

Memorandum No. 76567., R.D. and L.A., dated 2nd July 1962.

மாவட்ட அதிகாரிகள் சிலர், பஞ்சாயத்து யூனியன்களுக்கு முறையே வருகைதந்து யூனியன்களில் நடந்துவரும் அவர் களுடைய இலாகா சம்பந்தப்பட்ட வேலைகளையும் திட்டங் களையும் தணிக்கை செய்வதில்லை என்றும் அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மாவட்ட அதிகாரிகள் அவ்வப் பொழுது யூனியன்களுக்கு வருகைதந்து அவர்களுடைய இலாகா சம்பந்தப்பட்ட வேலைகளையும், திட்டங்களையும் தணிக்கை செய்வது அந்த வேலைகளும் திட்டங்களும் முன் னேறுவதில் நல்லப் பயனைக்காணமுடியும் என்று அர சாங்கம் கருதுகிறது. இத்தகைய விஜயங்கள், சம்பந்தப் பட்ட வளர்ச்சி அதிகாரிகள் திட்டவெற்றிக்குத் தம் பங்கு பணியினை நன்கு செய்யுமாறு அமையவும் மிகவும் துணை புரிவனவாகும்.

2. ஆகவே, விவசாயம், கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவு, கல்வி, கிராமிய வேலைகள், மாதர் நலம், சுகாதாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த மாவட்ட அதிகாரிகள் தங்கள் பகுதியிலுள்ள எல்லா பஞ்சாயத்து யூனியன்களைக் குறைந்த பட்சம் ஆறு மாதத்துக்கு ஒரு முறையாவது பார்வையிடவேண்டும் என்றும், இரண்டு இரவுகளாவது பஞ்சாயத்து யூனியனில் தங்கியிருந்து அவர்களுடைய இலாகா சம்பந்தப்பட்ட எல்லா அபிவிருத்தி வேலைகளையும் தணிக்கை செய்து நன்கு ஆராய்ந்து ஆய்வறிக்கை தயாரிக்கவேண்டும் என்றும் அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இந்த விஷயத்தில், தங்கள் இலாகா மாவட்ட அதிகாரிகளுக்குத் தகுந்த விளக்கங்களை வெளியிடுமாறு விவசாயத்துறை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை துறை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கல்வி துறை இயக்குனர், நெடுஞ்சாலைகள், கிராம வேலைகளின் தலைமை எஞ்சினியர், மாதர் நலத்துறை இயக்குநர், சுகாதாரத்துறை இயக்குநர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

3. பஞ்சாயத்து யூனியனுக்கு விஜயம் செய்யும் மாவட்ட அதிகாரிகள், அந்த இடத்திலேயே தங்கள் தணிக்கை அறிக்கையைப் பதிவு செய்வதற்கென்று, எல்லாப் பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களிலும் ஒரு காணவருபவர் புத்தகத்தை (Visitors' Book) வைத்திருக்கவேண்டும். இந்த மாதிரி விஷயங்களில் வழக்கமான தணிக்கை அறிக்கைகள் வேண்டியதில்லை. காணவருபவர் புத்தகத்தில் குறிக்கப்பட்ட கருத்துக்களின் மேல், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் நடவடிக்கை எடுத்து, அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை, அந்தப் புத்தகத்திலேயே பதிவு செய்யவேண்டும். கலெக்டர்கள், ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களைக் காணவரும்பொழுது, காண வருபவர் புத்தகத்தைப் பரிசீலனை செய்து, மாவட்ட அதிகாரிகள் குறித்த கருத்துக்களின் பேரில் சரியான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டனவா என்று பார்க்கவேண்டும்.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962–ம் ஆண்டு ஜூலை மாதம் 2–ம் தேதியிட்ட அறிக்கை எண் 76567.)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம்—அட்டவணை IV-ன் விதி 19-க்குத் திருத்தம்

(Act—Madras Panchayats Act, 1958—Rule 19 of Schedule IV to the Act—Amendment—Issued)

G.O. No. 1434, R. D. and L. A., dated 25th June 1962.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், அட்டவணை IV-ன் விதி 19-ன் கீழ், 1920-ம் ஆண்டு தமிழ் நாடு மாவட்டக் கழகங்கள் சட்டத்தின் 236-வது பிரிவின் படி மாவட்டக் கழகங்கள் பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட அந்தத் தொகை, பஞ்சாயத்து யூனியன் மன்றம் அமைக்கப்படுவதற்கு முன் வரை பயன்படுத்தப்படாமல் இருந்தால் சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள பஞ்சாயத்து யூனியன் மன்றம் அல்லது மன்றங்களுக்கு அவை மாற்றப்படவேண்டும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுடன் ஒவ்வொரு மாவட்டக் கழகத்திற்குச் சேரும் ரெயில்வே ரிசர்வ் நிதி, ரெயில்வே செஸ் ஆகியவற்றின் பங்குத் தொகையை இந்த விதி உள்ளடக்கியதாக இல்லை. ஆகவே, அந்த விஷயத்திற்கு வகை செய்யும் விதத்திலும், கிராமநல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 3340-ல் ஆணையிடப்பட்ட பங்குத் தொகைக்கு அடிப்படையாக அமையும் வகையிலும் இந்த விதியைப் பொருத்தமாகத் திருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இணைப்பு

அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், பிரிவு 190 துணைப் பிரிவு 2-ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், இதன் மூலம், மேற்படி சட்டத்தின் அட்டவணை IV-ன் விதி 19-க்குக் கீழ்க்கண்ட திருத்தத்தைச் செய்கிறார்கள்.

திருத்தம்

மேற்படி விதிகளின் 19-வது விதிக்குப் பதிலாக கீழ்க்கண்ட விதி சேர்த்துக்கொள்ளவேண்டும் :—

"19. 1884-ம் ஆண்டு சென்னை ஸ்தல ஸ்தாபனங்கள் சட்டம் 57-வது பிரிவு (ii) உட்பிரிவின்கீழ், விதிக்கப் படும் அந்த வரி விதிப்பினால் சேரும் எந்தத் தொகையும், அல்லது எந்த மாவட்டக் கழகத்துக்குச் சேரும் அத்தகைய எந்த ஒரு முதலீடுகளும், அரசாங்கத்தின் பொது அல்லது சிறப்பு ஆணையால் குறிக்கப்படுகின்ற விடுமுறைகளுக்கு உட்பட்டு, இந்த வகையில், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படும் :—

அதாவது, அவ்வாறு பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்குப் பகிர்ந்தளிக்கப்படும் எந்தத் தொகையும்—

முதலாவதாக, பஞ்சாயத்து யூனியன் மன்றத்தால் நிறுவப்பட்டு, பராமரிக்கப்பட்டு வரும் ஆரம்பப் பள்ளிகள் அல்லது மகப்பேறு, குழந்தை நல நிலையங்கள் ஆகியவற்றின் நிரந்தரக் கட்டடங்களைக் கட்டுதல், பழுது பார்த்தல் முதலியவற்றுக்காகவும்,

இரண்டாவதாக, புதிய பாதைகள், பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள் முதலியன கட்டுவதற்கான முதலீட்டுச் செலவுக்காகவும்,

மூன்றாவதாக, அரசாங்கம் பிறப்பிக்கும் பொது அல்லது சிறப்பு ஆணையினால் வரையறுக்கப்படும் இத்தகைய இதர காரியங்களுக்காகவும் பயன்படுத்தப் படும்.

மேலும், 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் கழகங்கள் சட்டம், 236-வது பிரிவின் கீழ் மாவட்டக் கழகங்களின் உபயோகத்துக்கு என்று அனுமதிக்கப் பட்ட எந்தத் தொகையும், மேற்கூறப்பட்ட தேதிவரை உபயோகிக்கப்படாமலிருந்தால், அந்தத் தொகை, அதைப் பொறுத்தமட்டிலும், அரசாங்கம் பொது அல்லது சிறப்பு ஆணையின் மூலம் பிறப்பிக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு, சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள பஞ்சாயத்து யூனியன் மன்றம் அல்லது மன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டும்".

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1434).

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத் திற்கென்று பணியாளர்களை வைத்தல்

[Panchayat Union Councils—Entrustment of National Extension Service Scheme of Community Development under section 66 of the Madras Panchayats Act—Staff—Placing of staff at the disposal of Panchayat Unions-Free of cost—Instructions issued.]

G. O. Ms. No. 1791, R. D. and L. A., dated 9th August 1962.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66-வது பிரிவின் கீழ், சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிராம நலத் துறையின் 1961-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 841-ல் பஞ்சாயத்து யூனியன்களில் சில பணியாளர்கள், செலவின்றி வைக்க ஆணையிடப்பட்டுள்ளது. அரசாங்கப் பணியில் உள்ள எல்லா பணியாளர்களின் பணியும், பஞ்சாயத்து யூனியனில் அபிவிருத்தித் திட்டங்களை நடத்தவென்று, அமர்த்தப்பட்டுள்ள பல்வேறு துறைப் பணியாளர்களின் பணியும், ஒப்படைப்புத் தேதியிலிருந்து மன்றத்தின் ஆளுகைக்கு விடப்படுகின்றன என்றும் கமிஷனர் மூலம் கணக்கிடப்படவும் இப்பொழுது அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

2. மேற்படி விளக்கங்கள் மூன்று தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிலும், கீழ்க்கண்ட தேதிகளிலிருந்து அமுலாகும்.

I தொகுதி 1—4—1961.
II தொகுதி 1—7—1961
III தொகுதி 1—1—1962

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1962—ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1791).

பஞ்சாயத்து யூனியன்களில் ஐந்தாவது சர்வோதய இலக்கிய வாரம் கொண்டாடுவது பற்றிய விளக்கம்

Gramdan Movement—Fifth Sarvodaya Literature Week—Celebration in Panchayat Unions—Instructions—Issued.

G. O. Ms. No. 1820, R. D. and L. A., dated 14th August 1962.

அகில இந்திய அடிப்படையில், 1962 ஆண்டு செப்டம்பர் 11 தேதி முதல் (விநோபாஜி பிறந்த நாள்) 1962-ம் அக்டோபர் 2 தேதி வரை (காந்திஜி பிறந்த நாள்—சர்க்கா ஜெயந்தி) சர்வோதய இலக்கிய விழாவினைக் கொண்டாட காசி, ராஜகாட், அகில பாரத சர்வசேவா சங்கம் முடிவு செய்துள்ளது. இந்த மாநிலத்தில், வத்தலகுண்டு, தமிழ் நாடு சர்வோதய மண்டலம், திருப்பூர், தமிழ்நாடு சர்வோதய சங்கமும், தஞ்சாவூர் சர்வோதய பிரசுராலயமும் 1962 செப்டம்பர் 11 தேதி முதல் அக்டோபர் 2-ம் தேதி வரை சர்வோதய இலக்கிய வாரத்தைக் கொண்டாட உத்தேசித்துள்ளன.

2. பஞ்சாயத்து அபிவிருத்தியின் மூலம் நிறைவேற்றப் படும் சமுதாய அபிவிருத்தி இயக்கத்தின் நோக்கங்கள், சர்வோதய இயக்கத்தின் நோக்கங்களுடன் பெருமளவுக்கு ஒத்துள்ளன. ஆகவே பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், வட்டார நிறுவனங்கள் சர்வோதய இலக்கிய வாரத்தில் பங்கு கொள்வது பொருத்தமுடையதாகும். இந்தச் சந்தர்ப்பத்தை சர்வோதயக் கொள்கைகளை மேலும் பரப்பப் பயன் படுத்தவேண்டும்.

3. பஞ்சாயத்து யூனியன்கள் இந்த கொண்டாட்டம் நடத்தும் விஷயத்தில் பின் பற்றுவதற்க்குக் கீழ்க் கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள சிபாரிசு செய்யப் படுகின்றன.

(1) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், குறைந்த பட்சம் இரண்டு சர்வோதய இலக்கியப் பொருட் காட்சிகளை நடத்த ஏற்பாடு செய்யலாம். இந்தப் பொருட் காட்சிகளை எந்தப் பள்ளியிலாகிலும் அல்லது இதற்குத் தகுந்த வெறு எந்த இடத்திலாகிலும் நடத்தலாம், பஞ்சாயத்து யூனியன் நூல் நிலையங்களில் இருக்கின்ற சர்வோதய இலக்கியங்கள் எல்லாம் பொருட் காட்சியில் வைக்கப்பட்டு மக்களுக்கு விளக்கப்படலாம்.

(2) பொது மக்களுக்கும், பஞ்சாயத்து நூல் நிலையங் களுக்கும், பள்ளிகளுக்கும் புத்தகங்களை விற்பதில் பஞ்சாயத்து யூனியன்களின் பணியாளர்கள் உதவி புரிய லாம். அவை காந்திய சர்வோதய இலக்கியங்களின் முழு தொகுதியையும் வாங்கிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படலாம்; அல்லது ஏற்கெனவே இருக்கின்ற நூல் நிலையங்களில் இல்லாத நூல்களை வாங்கிச் சேர்த்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படலாம்.

(3) சர்வோதயத்தைப் பற்றிய பல்வேறு அம்சங்களைப் பற்றியும், சில குறிப்பிட்ட புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு அரங்கங்கள், விவாதங்கள், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் முதலியன ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் குறைந்த ட்சம் மூன்று இடங்களிலாவது நடத்தப்படலாம்.

(4) கீழ்க்கண்ட பத்திரிகைகளுக்கு எந்த அளவுக்கு அதிகமாகச் சந்தாதாரர்களைச் சேர்க்கமுடியுமோ அந்த அளவுக்கு சந்தாதாரர்களைச் சேர்க்க முயலவேண்டும்:—

(a) "கிராம ராஜ்யம்"—தமிழ் வார இதழ் சென்னையிலிருந்து (வெளிவருகிறது)

(b) "சர்வோதயம்"—தமிழ் மாத இதழ். (தஞ்சாவூரிலிருந்து வெளிவருகிறது)

(c) "சர்வோதயம்"—ஆங்கில மாத இதழ். ஷ

(5) இந்த இலக்கிய வாரத்தை வெற்றிகரமாகக் கொண்டாட, பஞ்சாயத்து யூனியனில் உள்ள பல்வேறு பகுதி மக்களிலிருந்தும் ஒரு சிறப்புக் குழுவை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் அமைக்கலாம்.

4. முன் ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும், தஞ்சாவூர் சர்வோதய பிரசுராலயம், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கும், உயர்நிலைப் பள்ளி களுக்கும், கல்லூரிகளுக்கும், பிற நிறுவனங்களுக்கும், இருப்புக் கொப்ப, ரூ 75 முதல் ரூ. 150 வரை மதிப்புள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வோதய இலக்கியத் தொகுதிகளை "விற்பனை அல்லது திருப்புதல்" என்ற ஒப்படைப் பொருள் அடிப்படையில் (Consignment Basis) கீழ்க் கண்ட விதி முறைகளின்படி அனுப்பிவைக்கும் :—

(i) இலவசமாக வழங்கும் விளம்பரப் பொருள் கள்;

(ii) தமிழிலும், ஆங்கிலத்திலும், தேர்ந்தெடுக் கப்பட்ட சர்வோதய நூல்களை, கட்டுதல், அனுப்புதல் திருப்பி அனுப்புதலுக்கு தபால் ரெயில் கட்டணங்கள் முதலிய செலவுகள் இன்றி வழங்குதல்.

(iii) விற்பனைத் தொகை, மணியார்டர் அல்லது பாங்க் கமிஷன் ஆகிய அனுப்பும் செலவுகள் போக பாக்கித் தொகை ஏற்றுக் கொள்ளப்படும்.

(iv) விற்பனையாகாத புத்தகங்கள், நல்ல நிலையில் அனுப்பும் செலவு இன்றி ஏற்றுக்கொள்ளப்படும்.

(v) சர்வோதயம்—தமிழ் மாத இதழ் (ஆண்டு சந்தா ரூ. 3) சர்வோதயம்—ஆங்கில மாத இதழ் (ஆண்டு சந்தா ரூ. 4/50) ஆகியவற்றுக்குச் சேர்க்கப் படும் சந்தாத் தொகையில் 12½ சத வீத கமிஷன் தொகை, சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் பள்ளிக்குழந் தைகளின் மதிய உண்வுக்கு என்று கொடுக்கப்படும்.

(vi) உண்மையான விற்பனையில் 12½ சத வீதத் தொகை பள்ளிக் குழந்தையின் மதிய உணவுக்குப் பயன்பட கொடுக்கப்படும்.

(vii) 5-வது சர்வோதய இலக்கிய விழாக் கணக் குகள், 1962–ம்ஆண்டு அக்டோபர் மாதம் 31–ம்தேதிக்குள் தீர்க்கப்படவேண்டும்.

5. கடந்த நான்காண்டுகளாக சர்வோதய நூல்கள் விற்பனைக் கணக்கு, பல வட்டாரங்களில் தீர்க்கப்படாமல், நீட்டித்துக் கொண்டும், பல விஷயங்களில் ஓராண்டுக்கு மேல் தாமதமாக்கப்பட்டும் வருவது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சர்வோதய இலக்கிய விழா வினால் நல்ல பலன் காண 1962–ம்ஆண்டு செப்டெம்பர் மாதம் 11–ம்தேதி முதல் அக்டோபர் மாதம் 2–ம்தேதி வரை, காந்திய சர்வோதய லட்சியங்களுக்கு, குறிப்பாக மாணவர்களிடையே அறிவையும், நல் ஆர்வத்தையும் உண்டாக்கத்தக்க எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆகவே இது விஷயத்தில் தனிக்கவனம் செலுத்தி, எவ்வாறேனும் 1962–ம்ஆண்டு அக்டோபர் மாதம் 31–க்குள் கணக்குகளைத் தீர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

6. இது சம்பந்தமான எதிர்பாராச் சிறு செலவுகளுக் காக ஒரு யூனியன் ரூ. 25–க்கு மேற்படாமல் செலவு செய்ய பஞ்சாயத்து யூனியன்கள் அனுமதிக்கப்படுகின்றன. இந்தச் செலவு, யூனியன் கல்வி நிதியின் "சமூகக் கல்வி" என்ற தலைப்பில் பற்றுவைக்கப்படலாம்.

(கிராம நல-தலநிர்வாகத் துறையின் 1962–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1820).

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கிராமியக் கலைகள், கைத்தொழில்கள், தொழில்கள்—தொழிற் கூட்டுறவுகள் அமைப்பு

(Village Industries—Rural Arts, Crafts and Industries under the Community Development Programme—Formation of Artisan Co-operatives.)

Memorandum No. 22023., R. D. and L. A., Dated 13th August 1962.

புது டில்லியில், 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26, 27 தேதிகளில் கூடிய அபிவிருத்திக் கமிஷனர்களின் மாநாட்டில் சிபாரிசு செய்யப்பட்டவற்றுள், பஞ்சாயத்து நிறுவனங்கள், தொழிற்கூட்டுறவு அமைத்தலைப் பெருக்க வேண்டும் என்பது ஒன்றுகும். இந்த சிபாரிசு அரசாங்கம் கதர், கிராமத் தொழில் போர்டுடன் கலந்தாலோசித்து இதை ஒப்பக்கொள்வதென்றும், இந்த மாநிலத்தில் நிறைவேற்றவேண்டும் என்றும் முடிவு செய்துள்ளது.

2. கூடுமான இடங்களிலெல்லாம் மேலும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க முறைப்படி நடவடிக் கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று எல்லா பஞ்சா யத்து யூனியன் கமிஷனர்களும் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 13-ம் தேதியிட்ட அறிக்கை எண் 22023)

—o—

விவசாயிகள் மன்றம் (தமிழ்நாடு) அமைப்பு—கிளைகள் அமைக்க வட்டாரங்களின் துணை

(Agriculture-Farmers Forum, Madras—Formation of Branches—Assistance from Blocks—Instructions—Issued).

Memorandum No. 167041., R. D. and L. A., Dated 24th April 1962.

' தமிழ்நாடு விவசாயிகள் மன்றம் ' என்ற நிறுவனம் கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன், அமைக்கப்பட்டிருக் கிறது என்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும், வட்டார வளர்ச்சி அதிகாரிகளும் அறிவிக்கப்படுகின்றனர்.

(i) தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தியாளர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளை ஆராய்தல்.

(ii) இந்த மாநிலத்திலுள்ள விவசாய உற்பத்தியா ளர்கள், விவசாயப் பெண்கள், வாலிபர் ஆகியோரின் சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலையின் உயர்த்தல், முன்னேற்றல், பாதுகாத்தல் முதலியன.

(iii) மாநில, தேசிய விவசாயக் கொள்கைகளை வகுப்பதிலும்; நிறைவேற்றுவதிலும் உதவி செய்தல். மாநிலத்திலும், மாநிலத்திற்கு வெளியிலும் இந்த குறிக்கோள்களைக் கொண்டியங்கும் விவசாய உற்பத்தி யாளர்களின் நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல்.

(iv) மேற்படி குறிக்கோள்களை அடைய, தேவை யானபோதெல்லாம் தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளல். சிறப்பாக, எல்லா வகையான விளம்பரங்கள், வெளியீடுகள் எடுத்துச் செய்தல், நிதி வசூலித்துச் செலவு செய்தல் ; கூட்டங்கள், மாநாடுகள், கருத்தரங் குகள் நடத்துதல் ; பிரதிநிதிகள், பிரதிநிதிக்குழுக்கள் ஆகியவற்றை அனுப்புதல் முதலியன.

மேற்படி நிறுவனத்தின் தமிழ்ப் பெயர், " விவசாயி கள் மன்றம் " (தமிழ்நாடு). என்பதாகும். இது இந்திய விவசாயிகள் மன்றத்தின் கிளையாகும். இது ஒரு அரசியல் சார்பற்ற, குழுச்சார்பற்ற ஒரு விவசாய உற்பத்தியாளர் கள், அவர்களின் நலன் நாடுவோர் அனைவரின் நிறுவன மாகும். தமிழ்நாடு விவசாயிகள் மன்றத்தின் தலைமை அலுவலகம் சென்னை, மவுண்டு ரோடு, 36-பி எண்ணுள்ள இடத்தில் இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டம், ஆத்தூர், திரு ஆர். சீனிவாசன் மன்றத்தின் கௌரவ காரியதரிசி யாவார். மாநில மன்றத்தின் கிளைகள் வட்டார அளவிலும் கிராம அளவிலும் தொடங்கவும் ; தலைமை மன்றத்தில் உறுப்பினராகப் பதிவுச் செய்து கொள்ளவும், ஆன கருத் தைப் பரப்பும்படி பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் வட்டார வளர்ச்சி அதிகாரிகளும் கேட்டுக்கொள்ளப்பட லாம் என்று கௌரவ காரியதரிசி கேட்டுக்கொள்ளப்படு கிருர்.

2. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், தமிழ்நாடு விவசாயிகள் மன்றத்திற்குத் தேவையான வசதிகளை, அரசாங்கச் செலவு எதுவுமின்றி செய்து தரும்படியும், மன்றம் கோரும் விவரங்களைக் கொடுக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் தேதியிட்ட அறிக்கை எண் ; 167041).

———

தமிழ்நாடு மாதர் நலத் துறை இயக்குநரின் நடைமுறை அறிக்கை

(Proceedings of the Director of Women's Welfare, Madras.)

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 150-ல் எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு மாதிரி வேலைத் திட்டத்தை (Model programme) அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது. அந்த ஆணையின் 12-வது பாராவில், மாதிரி வேலைத் திட்டத்தில் பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்றுவது சம்பந்தமான வழி வகைகளைப் பற்றிய விளக்கங்களை மாதர் நலத் துறை இயக்குனர் வெளியிடுவார் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி அந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் கீழ்க்கண்ட விளக்கங்கள் வெளியிடப்படுகின்றன. முக்கிய சேவிகைகளின் வேலைமுறை அட்டவணை (Job Chart) விவரங்களும் இந்த அறிக்கையின் இணைப்பில் கூறப்பட்டுள்ளன.

மேற்படி ஆணையின் 7-வது பாராவில் மகப்பேறு நிலையங்கள் (Maternity Centres) பஞ்சாயத்து யூனியன்களின் ஆளுகைக்கு வருமென்றும் அதனால் பஞ்சாயத்து யூனியன்கள் குடும்பக் கட்டுப்பாடு சம்மந்தமான திட்டத்தை பரந்த அளவில் பிரசாரம் செய்வதற்கு இந்த நிலையங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் அரசாங்கத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு வட்டாரத்திலும் உயர்ந்த பட்சம் 10 மகப்பேறு நிலையங்கள் என்ற வரையறைக்குட்பட்டு வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு 10,000 ஜனத் தொகைக்கும் ஒரு மகப்பேறு நிலையம் என்ற வீதத்தில் அமைக்கவேண்டும் என்பது பஞ்சாயத்து யூனியனகளின் உடனடிக் குறிக்கோளாக அமையவேண்டும் என்று அரசாங்கம் விளக்கியுள்ளது. இந்த குறிக்கோளை அடைகின்ற வகையில், மாவட்டக் கழகம் சுகாதாரத் துறை, மாதர் நலத் துறை, நல வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றிடமிருந்து மாற்றப்பட்ட மகப்பேறு நிலையங்களை கவனத்தில் கொள்ளவேண்டும். அதிக அளவில் மகப்பேறு நிலையங்களைத் தொடங்குவதினால் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஏற்படுகின்ற செலவை ஈடு செய்கின்ற வகையில், மேலே குறிப்பிட்ட வறையறைக்குட்பட்டு பஞ்சாயத்து யூனியன்களுக்கு மகப்பேறு நிலையங்களுககு ஆகும் மொத்த செலவில் 2/3 பாகத்தை அரசாங்கம் வருடாந்திர மானியமாகக் கொடுக்கும். இது விஷயத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் படுகின்றன :

பஞ்சாயத்து யூனியன்கள், சுகாதாரத் துறையின் மகப்பேறு நிலையங்கள், முதல் நிலை சுகாதார நிலையங்களின் துணை நிலையங்கள், மாவட்டக் கழக மகப்பேறு நிலையங்கள் முதலானவற்றை எடுத்துக்கொள்ள உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுடன் அரசாங்கம் குறிப்பிட்டுள்ள அளவுக்கு அதாவது 10,000 ஜனத்தொகைக்கு மகப்பேறு நிலையம் வீதம்) இருக்க ,வேண்டுமானால் இன்னும் எத்தனை மகப்பேறு நிலையங்களை தொடங்க வேண்டும் என்றும் கணக்கிடவேண்டும். ஆகவே மேற்கொண்டு மகப்பேறு நிலையங்களை உடனடியாக ஆரம்பிப்பதற்கு பஞ்சாயத்து யூனியன்கள் அவசர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வசதியாக இருக்கும். கீழ்க்கண்ட முறையில் அவை அறிக்கை தயாரித்து இந்த அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றன :

1. வட்டாரத்தின் பெயர்:

2. 1961 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வட்டாரத்தின் மொத்த மக்கள் தொகை:

3. பஞ்சாயத்து யூனியனில் இப்பொழுது இருந்து வரும் மகப்பேறு நிலையங்களின் எண்ணிக்கை. (எந்தெந்த இலாகாவிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டன என்ற விவரத்தையும் குறிக்க வேண்டும்.):

4. மகப்பேறு நிலையங்கள் உள்ள இடங்களின் பெயர்கள்:

5. இனியும் தொடங்கப்படவேண்டிய மகப்பேறு நிலையங்களின் எண்ணிக்கை:

6. மேற்கொண்டு மகப்பேறு நிலையங்களைத் தொடங்க எடுத்துக்கொள்ளப்படவேண்டிய நடவ்டிக்கை:

7. புதிய மகப்பேறு நிலையங்களை எவ்வெவ்விடங்களில் தொடங்க வேண்டும் என்பது குறித்து பஞ்சாயத்து யூனியன் மன்றம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதா என்பது பற்றிய விவரம்:

புதிய மகப்பேறு நிலையங்களை அமைக்கின்றபொழுது வ்ட்டாரத்தின் மொத்தப் பரப்பையும் கவரும் வகையில் பஞ்சாயத்து யூனியன்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு கிராம சேவக்கின் கிராமங்களின் குழுவுக்கும் குறைந்த பட்சம் மகப்பேறு நிலையம் இருக்கும்படி அமைவது விரும்பத்தக்கதாகும். மேற்படி அறிக்கைகள் மே மாதம் 20-ம் தேதி அளவில் இந்த அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். மகப்பேறு நிலையங்களின் மூலம் பாலுணவுத் திட்டத்தை இணைப்பதற்கு இந்த விவரங்கள் தேவைப்படுகின்றன. ஆகவே பஞ்சாயத்து யூனியன் கமிஷ்னர்கள் இந்த விவரத்தை அனுப்புவதன் மூலம் கருத்தரித்துள்ள பேறுகால தாய்மார்கள், குழந்தைகளுக்கு இந்த மகப்பேறு நிலையங்களின் மூலம் காலத்தில் தேவையான அளவு பாலைத் தருவித்து வழங்குவதற்கு வசதி செய்யவேண்டும்.

ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு மாதர் சங்கம் நிறுவ வேண்டும் என்பது, மாதர் குழந்தைகள் பற்றிய மார்த்த திட்டத்தின்படி, எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களும் பொது குறிக்கோளாக இருக்கவேண்டும். கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962ம் ஆண்டு ஜனவரி மாதம்

17-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 150-ல் வெளியிடப்பட்ட மாதிரித் திட்டத்தில், ஒவ்வொரு மாதர் சங்கத்தின் மூலமும் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகளின் விவரமும், ஒவ்வொரு இனத்திலும் செய்யத்தக்க செலவும் கூறப்பட்டுள்ளன. பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை வேறுபடுமாகையால், பஞ்சாயத்துக்களின் வரவு—செலவுத் திட்டமும், மாதர் திட்டத்திற்காக, தலைக்கு 33⅓ சத வீதம் என்று கணக்கிட்டு ஒதுக்கப்படும் தொகையும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருக்கும். என்றாலும், 10 பஞ்சாயத்துகளை உள்ள பஞ்சாயத்து யூனியனில் பத்து மாதர் சங்கங்களைத் தான் அமைக்கவேண்டும் என்பதில்லை. தேவையையொட்டி, மாதர் சங்கங்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை 30 ஆக இருக்கலாம். பஞ்சாயத்து யூனியன்கள் வரவு–செலவுத் திட்டத்தை வகுக்கும்பொழுது ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு மாதர் சங்கம் என்று கணக்கிட வேண்டும். மாதிரித் திட்டத்தில் ஒவ்வொரு இனத்திற்கும் குறிக்கப்பட்ட தொகைகள் மாறாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக, கல்விப் பயணத்துக்கு ரூ. 100 செலவிடலாம் என்று மாதிரித் திட்டத்திலிருந்தால், பஞ்சாயத்து யூனியன் ரூ. 300 என்று அந்தத் தொகையை உயர்த்தக்கூடாது. அதேபோன்று, குழந்தைக் காட்சி நடத்த ரூ. 20 அனுமதிக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் இந்த அளவுகளின்படியே செலவுத் தொகைகளை ஒதுக்கவேண்டும். வட்டாரத்துக்கு வட்டாரம் பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை வேறுபட்டிருப்பதால், பஞ்சாயத்து யூனியன்களில் தொடர்ந்து இருக்கும் மாதர் சங்கங்களின் எண்ணிக்கையும், வேறுபட்டே இருக்கும். ஆகவே இது விஷயத்தில் மட்டுமே இந்த மாதிரித் திட்டத்திலிருந்து மாறுபட நேரும்.

முதலாண்டிலேயே பஞ்சாயத்து யூனியனில் எல்லா மாதர் சங்கங்களையும் துவக்கிவிட முடியாது என்பது திட்டத்தின் இயல்பிலிருந்தே அறியமுடியும். ஆகவே பஞ்சாயத்து யூனியன்கள் திட்டத்தை மூன்றாண்டுகளுக்கு அதாவது 1965 மார்ச் வரை வகுத்துக்கொண்டு, இந்த மூன்று பகுதியான திட்டத்தால் பஞ்சாயத்து யூனியனின் எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் ஒரு மாதர் சங்கம் வீதம் அமைத்து விடலாம். பஞ்சாயத்துக்களின் மொத்த எண்ணிக்கை 30 ஆக இருந்தால், அந்த யூனியன்கள், தங்கள் செயல் திட்டத்தைக் கீழ்க் கண்டவாறு வகுத்துக்கொள்ளலாம்.—

(1)	பஞ்சாயத்துக்களின் மொத்த எண்ணிக்கை	30
(2)	1962–63 ஆண்டுக் காலத்தில் தொடங்கப்பட்டு, பொருளாதார வசதி செய்யப்பட வேண்டிய மாதர் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை.	10
(3)	1963–64 ஆண்டுக் காலத்தில் தொடங்கப்படவேண்டிய மாதர் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை.	10
(4)	1964–65 ஆண்டுக் காலத்தில் தொடங்கப்பட வேண்டிய மாதர் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை.	10

1962–63–ல் 10 மாதர் சங்கங்களுக்கு அதாவது பஞ்சாயத்து யூனியன் தொடர்ந்து வரும் செலவு, தொடர்ந்து வராச் செலவு ஆகியவற்றுக்கு வகை செய்யவேண்டும். 1963-64-ல் 20 மாதர் சங்கங்களுக்குத் தொடர்ந்து வரும் செலவுக்கும் வகை செய்ய வேண்டும். 1964—65-ல் 30 மாதர் சங்கங்களுக்குத் தொடர்ந்து வரும் செலவுக்கும், 10 மாதர் சங்கங்களுக்கு தொடர்ந்து வராச் செலவுக்கும் வகை செய்ய வேண்டும்.

மூன்றாவது திட்டத்தின் முதலாண்டில், எல்லா அளவிலும் மாதர் நலக் குழுக்களை அமைத்தலும், பஞ்சாயத்துக்களின் பெண் உறுப்பினர்களுக்கும், மாதர் நலக் குழு உறுப்பினர்களுக்கும் 1962—63 ல் தொடங்கப்படும் மாதர் சங்கங்களினால் ஏற்படும் புதிய கடமைகளைக் கவனிக்கப் பயிற்சி அளித்தலும் நடைபெற்றது. பஞ்சாயத்து யூனியன்கள் ஒரு செயல் திட்டத்தை வகுத்துக் கொண்டு அதன்படி பணிபுரியவேண்டும்.

பஞ்சாயத்து யூனியனில் ஏற்கெனவே மாதர் சங்கங்கள் ஏதாவது இருந்து, அவை திருப்திகரமாக இயங்கி வந்தால், அவையும் சேர்த்துக் கணக்கிடப்படலாம் என்று கமிஷனர்கள் இது சம்பந்தமாக நினைவில் வைத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். அதாவது சில பஞ்சாயத்து யூனியன்களில், ஏற்கனவே பழைய வட்டார வரவு–செலவுத் திட்டத்தின்கீழ், அமைப்பாளர் முதலானோரைக் கொண்டு நான்கு மாதர் சங்கங்கள் இருக்கின்றன என்றால், மீதி இருக்கின்றன ஆறு சங்கங்களைத் தொடங்க முயற்சி எடுத்துக்கொண்டால் போதுமானதாகும்.

இந்தப் புதிய மாதர் சங்கங்களைத் தொடங்கும்பொழுது, மகப்பேறு நிலையங்கள் உள்ள கிராமங்களில் முதலில் மாதர் சங்கங்களைத் தொடங்கினால், இந்தக் கிராமங்களில் வரும் மாதர் குழந்தைகள் திட்டம் ஒருங்கிணைந்து செயல்பட முடியுமானதாக இருக்கும். மாதிரித் திட்ட வரவு–செலவுத் திட்டத் திட்டத்தில் உள்ள ஒவ்வொரு இனமும் கீழே ஆராயப்படுகின்றன.

I. முதலுதவியும் பொதுக் கருவிகளும் :—

ஒவ்வொரு மாதர் சங்கத்துக்கும் இந்தத் தலைப்பில் ரூ. 50 தொடர்ந்து வராத செலவுகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகை, முதலுதவிக் கருவிகளும், முதலுதவி பற்றிய 10 தமிழ் நூல்களும் வாங்கப் பயன்படவேண்டும். இவை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் கிடைக்கும். முதலுதவிக் கருவிகளை மாதர் சங்கத்திடம் கொடுக்குமுன் கீழ்க்கண்ட விதிகள் கவனிக்கப்பட வேண்டும்.

முக்கிய சேவிகைகள் கிராமத்து இளம் பெண்களில் சிலருக்கு, குறைந்தபட்சம் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்கு, வகுப்புக்கள் நடத்தவேண்டும். இந்தப் பயிற்சி முடிந்ததும் அவர்களிடமிருந்து, எந்த நேரத்திலும், யாருக்கும் முதலுதவி செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்ற உறுதியைப் பெறவேண்டும். முதலுதவிப் பொருள்கள் மாதர் சங்கத்துக்குக் கொடுக்கும் முன்னால், மாதர் சங்கம் கூடுகின்ற பொது இடம் இருக்கிறதா என்றும், சங்கப் பொருட்களை பத்திரமாக வைத்திருக்கத் தக்க முறையில் இடமிருக்கிறதா என்றும் கமிஷனர்கள் பார்த்தறியவேண்டும். அத்தகைய பொது இடம் இல்லை என்றால், முதலுதவிப் பொருள்கள், மாதர் சங்க உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் அவசர காலங்களில் வாங்கிக்கொள்ளத்தக்க வகையில், பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்படவேண்டும். முதலுதவிப் பெட்டி வாங்க, உறுப்பினர்களிடம் நன்கொடை கேட்கவேண்டிய தேவையில்லை. ஆனால் அவ்வப்போது மருந்துகளை வாங்கித் தரும் பொறுப்பு பஞ்சாயத்தைச் சாரும்.

II. பொது வேலைகளுக்கான சிறு செலவுகள்:—

பழைய வட்டார வரவு—செலவுத் திட்டத்தில், ஒவ்வொரு கிராம சேவிகைக்கும் செய்முறை காட்சிப் படியாக (Demonstration Allowance) ரூ. 15 கொடுக்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை, கிராம சேவிகை சமையல் செய்முறை காட்சிக்கு செலவிடவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கிராம சேவிகைக்கு இந்தப் படி கொடுக்கத் தேவையில்லை என்று கருதப்படுகிறது. இந்தத் தொகை, மாதர் சங்கத்துக்குச் சிறு செலவுகள் படியாக கொடுக்கப்படவேண்டும். அது அந்த மாதர் சங்கத்தில் முக்கிய சேவிகை அல்லது கிராம சேவிகை நடத்தும் சமையல் செய்முறைக் காட்சி, அல்லது வேறு செய்முறைக் காட்சிக்குப் பயன்படுத்தவேண்டும். அதாவது இந்தச் செலவுகளுக்கு ஆதாரமான கணக்கை வைத்திருக்கும் பொறுப்பு மாதர்சங்க அமைப்பாளரைச் சேரும். இந்தத் தொகை பெற்று கிராம சேவிகைக்குச் செலுத்தக்

கூடாது. மாதர் சங்கத்துக்கு, சிறு செலவுகளுக்கென்று கொடுக்கப்படவேண்டும். சிறு செலவுகளின்கீழ், கீழ்க் கண்டவை அனுமதிக்கப்படும் :—

1. சமையல், தையல், எளிய வழிகள் அல்லது பிற செய்முறைக் காட்சிகளுக்காக, கிராம சேவிகைகளுக்குப் பொருள்கள் வாங்கக்கொடுக்கப்படலாம். இதற்கு ஈடான நன்கொடை எதுவும் வலியுறுத்தத் தேவையில்லை.

2. இதர பொது சிறு செலவுகள்.

III. அமைப்பாளர்களுக்குக் கௌரவ ஊதியம் — மாதர் சங்க அமைப்பாளருக்கு, காலாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 15 வகை செய்யப்பட்டிருக்கிறது. மாதர் சங்கம் அதற்கு முன் ஓராண்டுகாலம் திருப்திகரமாக இயங்கி வந்திருக்கவேண்டும். வட்டார வளர்ச்சி அதிகாரி சான்றிதழின் பேரில், கலெக்டர் அமைப்பாளருக்கு இந்த கௌரவ ஊதியத்தை அனுமதிப்பார். இந்த நடைமுறை கீழ்க்கண்டவாறு திருத்தப்பட இருக்கிறது — மாதர் சங்கங்கள் தொடங்கப்பட்டபின், முக்கிய சேவிகையும், கிராம சேவிகையும் தவறாமல் சங்கத்துக்கு வரவேண்டும். ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும், மாதர் சங்க நட வடிக் கைகள் குறித்து ஒரு சுருக்கமான அறிக்கையுடன், தேவையான சான்றிதழும் மாவட்ட மாதர் நல அதிகாரி களுக்கு அனுப்பும்படி, வட்டார வளர்ச்சி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். அதன் பேரில் மாவட்ட மாதர் நல அதிகாரி பணம் செலுத்த அனுமதிப்பார். இந்த ஏற்பாடு அமைப்பாளர்கள் எந்தபடியும் (Allowance) வாங்கும் முன் ஓராண்டுக்குக் காத்திருக்கவேண்டிய தேவையில்லாமல் இருக்கவேண்டும். அமைப்பாளர் படி ஒழுங்காகச் செலுத்தும்படியும், மூன்று மாதத்துக்கு மேல் அதைச் செலுத்துவதில் தாமதம் ஏற்படாதவாறும் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் கீழ்க்கண்ட முறையில் பார்த்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்:—

காலாண்டின் கடைசி மாதத்தின், கடைசி திங்கட் கிழமை, மாவட்டப்பணியாளர் கூட்டத்தில் முக்கிய சேவிகை கலந்து கொள்ளும்பொழுது, மாதர் சங்க நடவடிக்கை களின் விவர அறிக்கையுடன் தேவையான சான்றிதழ் களையும் மாவட்ட மாதர் நல அதிகாரி மூலம் அனுப்பி வைப்பது பணம் உடனடியாகச் செலுத்த வசதியாக இருக்கும். மாதர் சங்கம் ஒழுங்காக நடைபெற, கௌரவ ஊதியம் ஒழுங்காக செலுத்தப்பட வேண்டியது அவசிய மாகும். வட்டார வளர்ச்சி அதிகாரிகள் அமைப்பாளர்களை அமைக்கும் விஷயத்தில், கூடியமட்டில், கிராமத்தில் இருக்கும் ஆசிரியைகளின் பணியைப் பயன் படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அத்தகைய ஆசிரியைகள் இல்லை என்றால், தகுதியும் திறமையுள்ள வேறு மாதர் அமர்த்தப் படலாம். அமைப்பாளர்களை அமர்த்துவதில் மாவட்ட மாதர் நல அதிகாரி கலந் தாலோசிக்கப்படவேண்டும்.

IV. கைத் தொழிற் கருவிகள் :— இதற்கென்று ஈட்டு நன்கொடை அடிப்படையில் தொடர்ந்து வரச் செலவாக ரூ. 200-க்கு வகை செய்யப்பட்டுள்ளது. கைத் தொழிற் கருவிகள் வாங்குதல் என்பது தையல் யந்திரம் வாங்கு வது என்று மட்டும் பொருள்படாது. இக் கருவிகளை வாங்கு முன்னர், வட்டார வளர்ச்சி அதிகாரி, மாதர் சங்க உறுப்பினர்களின் எண்ணத்தை அறிந்து கொண்டு வாங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

V. பயிற்சி முகாம்கள்.— வட்டாரங்களில் ஏற்கெனவே இரண்டு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் இரண்டு முகாம்கள் நடத்த வகை செய்யப்பட்டுள்ளது. இந்தமுறை, பயிற்சித் திட்டத்தில் மாதர் நலக்குழு உறுப்பினர்களும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

VI. குழந்தைக் காட்சிகள்.— ஐந்து நிலையங்களுக்கு ஒரு நிலையத்துக்கு ரூபாய் 20 வீதம் செலவுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழந்தைக் காட்சிகள் மகப் பேறு நிலையங்களில் மட்டுமே நடத்தப்படவேண்டியிருப்ப தால், எத்தனை காட்சிகள் நடத்தலாம் என்பது வட்டாரத் திலுள்ள மகப்பேறு நிலையங்களின் எண்ணிக்கையைப் பொறுத்திருக்கிறது. ஆனால் செலவுத் தொகை ரூபாய் 20 வரையிலுமே வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தக் காட்சி ஏற்பாட்டுச் செலவுகளுக்கு கிராம மக்களை நன் கொடைஅளிக்குமாறு கேட்டுக்கொள்ளலாம். இந்த ரூபாய் 20 பரிசுகள் வாங்க மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

VII. கல்விப் பயணங்கள்.— இதற்கென்று ரூபாய் 100 ஒதுக்கப்பட்டுள்ளது. இது போதுமான தொகையல்ல என்று உணரப்படுகிறது. இது ஒரு அடையாளத் தொகை யாகவே கொடுக்கப்படுகிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், பயணத்தில் கலந்து கொள்பவர்களிட மிருந்தே, அவருக்கு ஆகும் பயணச் செலவு, உணவு ஆகியவற்றுக்காகும் செலவுகளை அவர்களிடமிருந்து வசூல் செய்து செலவிடவேண்டும். இதற்காக வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 100-க்கு மேல் ஒதுக்கக் கூடாது.

VII. சமூகக் கல்வி :— சமூகக் கல்விக்கென்று ஒரு நிலையத்துக்கு ரூபாய் 100 ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை சமூகக் கல்வி நிலையங்கள் இருக்கும் ஊர்களில் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும், சமூகக் கல்வி நிலையங்களில் இருக்கும் புத்தகங்களை வாரத்தில் குறிப் பிட்ட நாட்களில் மாதர் சங்க உறுப்பினர்க்குப் பயன்படுத்த வேண்டிய விவரங்களையெல்லாம் பஞ்சாயத்துத் தலைவர் களுக்கு அனுப்பும்படி, கமிஷனர்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

IX. செய்முறைக் காட்சிக் கருவிகள்.— இந்தத் தலைப் பில். இதற்கென்று ஏற்கெனவே எதுவும் செலவு செய்யப்படவில்லை என்றால் மட்டுமே இப்பொழுது செலவு செய்யலாம். கருவிகளை வாங்கும் செலவு எதுவும் செய்யக் கூடாது. இவை வட்டாரத்தில் ஏற்கெனவே வாங்கப்பட்டி ருந்தால் இதற்கு வேறு செலவு செய்யக் கூடாது.

இந்த வேலைத் திட்டம் ஒரு தன்மைத்தான வேலைத் திட்டமானதாலும், பிறகாரணங்களாலும் இப்பொழுது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கும் ஒதுக் கப்பட்டுள்ள தொகையில் மிச்சம் பிடிக்க சந்தர்ப்பம் இருக்கிறது. அந்தத் தொகையை வட்டார வளர்ச்சி அதிகாரி கருத்தரங்கள், பொருட்காட்சிகள், கலாசார நிகழ்ச்சிகள், விழாக்கள் முதலியவற்றுக்குச் செலவு செய்ய, மாவட்ட மாதர் நல அதிகாரி அனுமதிக்கலாம்.

1953-லிருந்து செயல்பட்டுவரும் சில வட்டாரங்களில் இசைக் கருவிகள் இதர பஜனைப் பொருள்கள் முதலியன வாங்கி வைக்கப்பட்டு நல்ல நிலையிலிருந்தும் பயன்படுத்தப் படாமலுள்ளன. அவை பயன்படத்தக்க பஞ்சாயத்துக் களுக்கு வினியோகிக்க என்று முக்கிய சேவிகையிடம் ஒப்படைக்கலாம்.

வட்டார வரவு-செலவுத் திட்டத்தில் மாதர் திட்டத்துக் காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் குறைந்த தொகை என்பதும், இந்தத் தொகை மாதர் சங்கம் தொடங்க ஒரு மையத் தொகையாகமட்டுமே பயன்படுத்தப்படும் என்பது மேலே கூறப்பட்ட விஷயங்களிலிருந்து விளங்கும். தனியான உதவித் தொகை பெறுகின்ற திட்டங்களை, (உதாரணமாக, வீட்டுத் தோட்டம் போடுகின்ற வேலைத் திட்டத்தில் காய்கறி விதை வினியோகம் முதலிய வேலை களுக்கு 50 சத வீத உதவித் தொகை அளிக்கப்படும்) எடுத்து நடத்த மாதர் சங்கங்கள் இயங்கி வர மேற்படி தொகை பயன்படும். கிராமியக் கலைகள்-கைத்தொழில் களின் கீழ், வட்டாரங்களுக்கு ஒதுக்கப்பட்டு, இப்பொழுது கிராமத் தொழில்கள் அதிகாரியின் கீழ் இருக்கும் பணம் பெண்களுக்கென்று சில தொழில்களைத் தொடங்கப் பயன் படுத்தப்படலாம். கோழி வளர்ப்பு அபிவிருத்திக்கு, கால் நடைப் பாதுகாப்பு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி வசதி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு மாதர் நலத் திட்டத்திற் பிற வரவு-செலவுத் திட்டங்களால் மேலும் உதவி பெற முடிகிறது. பஞ்சாயத்து யூனியன்கள், மாதர், குழந் தைகள் நலத் திட்டத்தை வகுக்கும்போது இவ் விஷயங் களைக் கருத்தில் கொண்டு வகுக்கும் என்று நம்பப்படு கிறது.

—

பஞ்சாயத்து அரசிதழ்
செப்டம்பர், 1962

தயாரிப்பு—கூட்டுப் பொறுப்பு :
திரு வ. சம்பந்தம், பி. ஏ.,
துணை ஆசிரியர்.

திரு வே. கோபால கிருஷ்ணன், எம். ஏ.,
மொழிபெயர்ப்பாளர்.

பொருளடக்கம்

ஆணை (அல்லது) அறிக்கை வெளியிட்ட அரசாங்கத் துறை.	ஆணை (அல்லது) அறிக்கை எண்ணும் தேதியும்.	பொருள்.	பக்கம்.
கிராமநல—தல நிர்வாகத்துறை.	ஆணை 1393/20—6—62	விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டம் : தோட்டக் கலை—செலவும் பணியாளர்களும்—	i
௸	அறிக்கை 111604/16—6—62	பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம் : பஞ்சாயத்துக்களில் வைக்க அங்கீகரிக்கப்பட்ட வானொலிப் பெட்டிகளின் பட்டியலில் குறிக்கப்பட்ட மர்பி வானொலி பெட்டியின் விலையில் இறக்கம்.	i
௸	ஆணை 1359/15—6—62	1961-ம் ஆண்டு ஸ்தல ஸ்தாபனங்கள் நிதிச்சட்டம்-கடந்த காலத்துக்கும் வரிவிதிப்பு அமுலாக்குதல் பற்றிய விளக்கம்	ii
௸	அறிக்கை 67287/29—5—62	பொருள்களைத் தருவதற்கும், வேலைகளைச் செய்வதற்குமாக, பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன்களும் வெளியிடும் ஒப்பந்த அறிக்கைகளைச் செய்தி இதழ்களில் வெளியிடுதல்-விளக்கப்படுகின்றன.	ii
௸	ஆணை 1356/15—6—62	1958ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம்—ஒரு கிராமம் அல்லது நகரத்திலிருந்து ஒரு பிரதேசத்தைப் பிரித்தல் அல்லது சேர்த்தல் பற்றிய விதிகளில் திருத்தம்.	iii
௸	நடைமுறை அறிக்கை 86928/15—6—62	பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்—குமரப்பா நினைவுக் குழுவுக்கு நன்கொடை அளிக்க அனுமதி.	iv
௸	அறிக்கை 104773/25—6—62	மாதர் நல நிறுவனங்களின் உறுப்பினர்கள் சென்னை நகருக்கு விஜயம் செய்வதற்கு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஏற்பாடு செய்தல் பற்றிய விளக்கம்.	iv
௸	அறிக்கை 103603/21—6—62	பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு நிறுவனம் : ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு வானொலி அமைக்க ஏற்பாடு.	v
௸	ஆணை 1575/13—7—62	முக்கிய சேவிகைகளைப் பணிப் பயிற்சியும் மறு பயிற்சியும்பெறுவதற்கு சமூகக் கல்வி அமைப்பாளர்களின் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்புதல்—மாதர்நல இயக்குநரிடம் அதிகார ஒப்படைப்பு.	v
௸	அறிக்கை 75235/4—7—62	1960 ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் முதல் அமைப்புக்கு விசேஷ வழிவகைகள்) சட்டத் திருத்தச் சட்டம் பற்றிய சில விளக்கங்கள்.	vi
௸	ஆணை 1555/11—7—62	விரிவுபடுத்தப்பட்ட ஊட்ட உணவுத் திட்டம்—விளம்பர வாரக் கொண்டாட்டம்.	vi
௸	ஆணை 1558/12—7—62	குழந்தைகள் நலம்—பள்ளிப் பருவ முன்நிலை நிலையங்களைத் தொடங்குதல்—வட்டாரத் தலை நகரில் தாயிகளுக்குப் பயிற்சி—தலைமை ஆயா (Matron) அமர்த்தல்—செலவுகளுக்கு அனுமதி.	vii
௸	அறிக்கை 76567/2—7—62	பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாவட்ட அதிகாரிகளின் வருகைகள் பற்றிய விளக்கம்	vii
௸	ஆணை 1434/25—6—62	1858ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் அட்டவணை IV-ன் விதி 19க்குத் திருத்தம்.	viii
௸	ஆணை 1791/9—8—62	பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணி திட்டத்திற்கென்று பணியாளர்களை வைத்தல்—	ix
௸	ஆணை 1820/14—8—62	பஞ்சாயத்து யூனியன்களில் ஐந்தாவது சர்வோதய இலக்கிய வாரம் கொண்டாடுவது பற்றிய விளக்கம்.	ix
௸	அறிக்கை 22023/13—8—62	சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கிராமியக் கலைகள், கைத் தொழில்கள், தொழில்கள்—தொழிற் கூட்டுறவுகள் அமைப்பு.	xi
௸	அறிக்கை 167041/24—4—62	விவசாயிகள் மன்றம் (தமிழ்நாடு) அமைப்பு—கிளைகள் அமைக்க வட்டாரங்களின் துணை.	xi
மாதர் நலத் துறை.	5—5—62	மாதர் நலத்துறை இயக்குநரின் நடைமுறை அறிக்கை—	xii

பாரதியார் விழா

கோ. வேங்கடாசலபதி,
கிராம அபிவிருத்திக் கமிஷனர்.

அன்புடையீர்,

செப்டம்பர் 11-ந் தேதி பாரதியார் நினைவுநாள் என்பது உங்களுக்குத் தெரியும். உறங்கிக் கிடந்த சமுதாயத்தைத் தட்டி எழுப்பியவர் அவர். எளிய சொற்களை லாகவமாகக் கையாண்டு சிறு குழந்தைகள் மனத்திலும் பதியும்வண்ணம் அவர் பாடியதால்தான் "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா, அவன் பாட்டைப் பண்ணோடொருவன் பாடினனடா, அதைக் கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா", என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாரதியாரைப் புகழ்ந்து பாடியிருக்கிறார். அமர கவி, கவிச்சக்கரவர்த்தி என்றெல்லாம் பெயர் வாங்கிய அவரைப் போன்றவர்கள் பல தலைமுறைகளுக்கு ஒரு தடவைதான் தோன்றுவார்கள். அந்நாளை நம் பள்ளிகளில் தக்க முறையில் கொண்டாட வேண்டும் என்பது என் அவா.

பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்களில் மகாகவி பாரதியாரின் படத்தைத் திறந்து வைப்பதும், அவருடைய உருவத்தைக் கிராம மக்கள் அனைவரும் பார்த்து மகிழத் தக்கவாறு ஊர்வலமாக எடுத்துச் செல்வதும், அப்படிச் செல்லும்போது அவருடைய பாடல்களைப் பாடிச் செல்வதும் இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதாகும். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பாரதியார் படம் இல்லாதிருந்தால் பஞ்சாயத்து யூனியன் செலவிலேயே ஒரே அளவுள்ள படமாக வாங்கிச் சட்டம் போட்டு, கண்ணாடி போட்டுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் 'பாரதியார் பாடல்கள்' எனும் பாட்டுத் தொகுப்பை வாங்கிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இதைப் பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து செலவழிக்கலாம்.

கீழ்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி அன்று விழா கொண்டாடலாம் என்று கருதுகிறேன் :—

முற்பகல் :

1. காலை 9 மணிக்கு பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகளும் ஆசிரியர்களும் ஊர்ப் பொது மக்களும் வருதல்.
2. கொடி வணக்கம்.
3. பாரதியார் படத்துடன் ஊர்வலமாக கிராமத்திலுள்ள பல தெருக்கள் வழியாகச் செல்லுதல், அப்படிச் செல்லும்போது பாரதியார் பாடல்களைப் பாடுதல், (ஆசிரியரோ, பிள்ளையோ முதலில் பாட, எல்லோரும் சேர்ந்து பின்னே பாடுதல் நன்று). பாடக்கூடிய சில பாடல்களையும் இணைப்பில் குறித்திருக்கிறேன்.

பிற்பகல் :

1. 2 மணி—பேச்சுப் போட்டி. பாரதியார் வாழ்க்கை வரலாறு.
2. பாட்டுப் போட்டி. பாரதியார் பாடல்கள். மேற்கண்டவை பள்ளிச் சிறுவர்களிடையே மட்டுமன்றி, ஆசிரியர்களிடையேயும் நடத்தப்படலாம்.
3. பிள்ளைகளுக்கு இனிப்பு வழங்குதல்.

ஓர் ஊரில் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகள் இருந்தால், அவ்வூரிலுள்ள எல்லா பள்ளிப் பிள்ளைகளும் ஒரு மத்தியமான பள்ளியில் கூடி மேற்கண்ட நிகழ்ச்சி நிரலில் கண்டபடியும் செய்யலாம். பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், அங்கத்தினர்கள் மற்றும் உள்ளூர்ப் பிரமுகர்களை விழாவுக்கு அழைத்து படத்திறப்பு, பரிசு வழங்கல் முதலியவைகளை அவர்களைச் செய்யும்படிக் கேட்டுக்கொள்ளலாம்.

இந்த விழாவைக் கொண்டாடுவதின் மூலமாக ஒவ்வொரு பள்ளியிலும் மூன்று பலன்கள் ஏற்படவேண்டும். அவை:—1. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பாரதியார் படம் வைத்தல். 2. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பாரதியார் பாடல்கள் புத்தகம் இருத்தல். 3. பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பாரதியார் பாடல்கள் தெரிதல்.

இம்முறையில் விழாவைக் கொண்டாடி பாரதியார் வாக்கான "எமக்குத் தொழில் கவிதை ; நாட்டுக்கு உழைத்தல் ; இமைப்பொழுதும் சோராதிருத்தல்" எனும் நற்பண்புகள் குழந்தைகளிடையே ஏற்படச் செய்வோமாக.

வணக்கம்.

கோ. வேங்கடாசல

இணைப்பு

1. பாருக்குள்ளே நல்ல நாடு.......
2. பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்.......
3. தாயின் மணிக்கொடி பாரீர்.......
4. ஜாதி மதங்களைப் பாரோம்.........
5. செந்தமிழ் நாடெனும் போதினிலே.......
6. ஓடி விளையாடு பாப்பா.......
7. மன்னும் இமயமலை.......
8. தேடியுனைச் சரணடைந்தேன் தேசமுத்துமாரி.....
9. வெற்றியெட்டு திக்குமெட்ட.......
10. அச்சமில்லை அச்சமில்லை.......
11. பாரத சமுதாயம் வாழ்கவே.......
12. ஆடுவோமே பள்ளு பாடுவோமே.......

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

படம் 1—2: காஞ்சிபுரத்தை அடுத்த சிறு காவேரிப்பாக்கம் கிராமத்தில், பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டிடத்தை, 1-7-62ல் முதல் அமைச்சர் திரு காமராஜ், குத்து விளக்கேற்றி திறந்து வைத்தார்.

படம் 3: 16-8-62ல் திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்து யூனியன் மன்றம் அளித்த வரவேற்பினை மாநிலக் கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி ஏற்றுக்கொள்கிறார்.

படம் 4—5: 21-8-62ல், குடியாத்தத்தில், பள்ளி வளர்ச்சி மாநாடு நடைபெற்றது. குடியாத்தம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு ஏ. வெங்கடாத்ரி நாயுடு அன்பளிப்பாக அளித்த ரூ. 3,500 ஐ, நிதி அமைச்சர் திரு பக்தவத்ஸலம் பெற்றுக்கொள்கிறார்.

ரசாயன உரம் தயாரிப்பு தொழிற்சாலை- திறப்பு விழா

Regd. No. M. 7277

©

தமிழ்நாடு அரசாங்கம் 1962.



சென்னையை அடுத்த எண்ணூரில், கோத்தாரி கம்பெனிக்குச் சொந்தமான ரசாயன உரத் தொழிற்சாலையை (Super Phosphate Factory), மத்திய அரசாங்க நிதியமைச்சர் திரு மொரார்ஜி தேசாய், 23-8-62ல் திறந்து வைத்தார்.

படம் 1: பிரமுகர்களுடன் திரு மொரார்ஜீ தேசாய்.

படம் 2 : தொழிற்சாலையைத் திறந்து வைத்தல்.

படம் 3: தொழிற்சாலையின் ஒரு தோற்றம்.